

# ஞானச்சுடர்

புரட்டாதி 2018

249 ஆவது மலர்




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின்.

**பொருள்:** புலால் என்பது இன்னொரு உடம்பின் புண்ணாகும்; அது அத் தன்மையுடையதென உணர்வார் அதனை உண்ணாது ஒழிதல் வேண்டும். (257)

செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணார்
உயிரிற் றலைப் பிரிந்த வூண்.

**பொருள்:** குற்றந் தீர்ந்த அறிவுடையோர் உயிரினின்றும் பிரிந்த ஊனை உண்ணார். (258)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### முத்தி நெறி

*நேரிசை வெண்பா – அந்தாதித்தொடை*




நல்லூர்ப் பதியிலே ஞான நெறிகாட்டச்
செல்லப்பன் என்னும் திருப்பெயரான் – பொல்லாப்பிங்
கொன்றுமே யில்லையென ஓதினான் ஓதயான்
கண்டுமெய் தேறினேன் காண் 01

காண்பதெலாம் பொய்யென்று காட்டினான் காட்டயான்
வீண்பா வனையெல்லாம் விட்டொழிந்தேன் – மாண்புடனே
நீயும் மனத்தில் நினைத்தால் வினையெல்லாம்
மாயும் இதைநீ மதி 02

மதிக்கும் மதிகொடுக்கும் மாநிலத்தை யாள
விதிக்கும் விமலனடி சேர்க்கும் – துதிக்கும்
அடியவர்கள் துன்பம் அகற்றி அருளுங்
கடிமலராற் பூசித்துக் காண் 03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 249

2018 **பொருளடக்கம்** புரட்டாதி


| | | |
|---|---|---|
| இலிங்க நெறியினால் இலங்கிய... | கு. சோமசுந்தரம் | 01 -03 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 04 -06 |
| தெய்வீகப் பெருவாழ்வு | கு. ஸ்ரீஸ்கந்தராஜா | 07 -09 |
| ஆனந்தக் கிருஷ்ணனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 10 -12 |
| முருகனும் முட்டையும் | பொ. சின்னையா | 13 -15 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 16 -18 |
| உற்றுப்பெற்ற தாயாரைப்... | முருகவே பரமநாதன் | 19 -23 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 24 -25 |
| அற்புத அவதாரம் | வி.எஸ். ஸ்ரீகந்தசாமி | 26 -28 |
| மண்டூர்க் கந்தசுவாமி கோயில் | மூ. சிவலிங்கம் | 29 -32 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 33 -34 |
| ஓம் கணேசாய நம... | ஆர்.வீ. கந்தசுவாமி | 35 -36 |
| மனிதப் பண்புகளும் மதமும் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 37 -38 |
| இறைவனின் அவதார மகிமை | திருமதி ந. பரமேஸ்வரி | 39 -40 |
| ஸ்ரீமத் ஞானதேவன் | அ. சிவரூபன் | 41 -43 |
| இது உணவல்ல மருந்து | திருமதி வ. தபேந்திரநாதன் | 44 -45 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 46 -48 |
| சிந்தனை செய் மனமே! | இ. சரவணபவன் | 49 -50 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 51 -53 |
| தென்முகனுக்கு ஒரு... | வல்வையூர் அப்பாண்ணா | 54 -60 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் ஆவணிமாத வெளியீடு

## வெளியீட்டுரையுடன் கூடிய மதிப்பீட்டுரை:-

ஞானச்சுடர் ஆவணிமாத மலர் வெளியீடு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய உற்சவம் காரணமாக குறித்த காலப்பகுதியில் வெளியீடு செய்யப்படாததன் காரணமாக முறையே வெளியீடு ஆற்ற இருந்த ஆசிரியர் திரு க. ஸ்ரீச்சந்திரன் அவர்களும், மதிப்பீட்டுரை ஆற்ற இருந்த இளை. பிரதி அதிபரும், பிரபல எழுத்தாளராக விளங்கும் திரு க. நடேசு (தெணியான்) அவர்களும் தவிர்க்க முடியாத காரணங்களால் வருகைதர முடியாத நிலையில் ஆவணிமாத மலருக்குரிய வெளியீட்டுரையுடன் கூடிய மதிப்பீட்டு உரையை செஞ்சொற் செல்வர் ஆசிரியர் இரா. செல்வவடிவேல் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில் ஆலய தரிசனத்திற்கு வந்த எனக்கு சந்நிதி வேலவன் ஆவணிமாத மலரின் வெளியீட்டில் கலந்துகொள்ள வைத்த பேரருளின் மகத்துவத்தையும் தனது சிறுவயது முதல் சந்நிதியான்மீது ஏற்பட்ட பக்தி காரணமாக தன்னை ஆட்கொண்ட செயற்பாடுகளையும் சபையில் இருந்த அடியார்களுக்கு உணர்வுபூர்வமாக எடுத்தியம்பினார்கள்.

தொடர்ந்து ஆசிரியர் ஒரு ஆன்மீக மலர் தொடராக 248 மாதகாலம் எவ்வித தடங்கலும் இன்றி வருவதென்றால் திருவருளோடு கூடிய ஒரு சக்திதான் காரணம். அவ்வகையில் சந்நிதியான் ஆச்சிரமத்தின்மீது வேலவனது கடைக்கண் பார்வை ஆட்சி செய்வதனூடாக இவ்வகைச் செயற்பாடு இங்கே இடம்பெறுவதுடன் நித்திய அன்னப்பணியும் எவ்வித குறைகளும் அற்ற வகையில் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றது. இதனை நாம் அனுபவ வாயிலாக உணரக்கூடியதாக உள்ளது என்று கூறிய ஆசிரியர், ஆவணிமாத மலரில் இடம்பெற்ற ஆக்கங்களில் அமைந்துள்ள கருத்துச் செறிவுள்ள பகுதிகளை விளக்கிக் கூறியதுடன் இறுதியாக மலரில் இடம்பெற்ற ஆக்கங்களின் தலையங்கங்களின் தரத்துக்கு ஏற்ற வகையில் கட்டுரைகள் அமையவேண்டும் என்று கூறி எதிர்பாராத வகையில் இச்செயற்பாட்டில் ஈடுபடவைத்த சந்நிதி வேற் பெருமானுக்கும், ஆச்சிரம சுவாமி அவர்கட்கும் நன்றி கூறித் தனது வெளியீட்டுரையுடன் கூடிய மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

"ஆலயங்களில் மிருகபலியிடுதல் ஏற்றுக்கொள் முடியாது"

## சாபங்களே

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்" இது வள்ளுவத்தின் சமுக சித்தாந்தம். இக்கருத்துக்கு அகிலமே தலை வணங்கும். ஆலயங்களில் மிருகபலியை நடாத்தலாம்- என்று, ஆகமங்களோ, திருமுறைகளோ, ஏன் சட்டங்களோ கூறவில்லை. முடநம்பிக்கையை மேம்படுத்தும் ஒரு சில மனிதர்களே, - தம்மை ஆட்சிப்படுத்தும் விதத்தில், இறைவன் வேள்வியை விரும்புவதாகவும், அவன் தம்மோடு கலந்து கதைத்தது போலவும் ஒரு பிரேமையைத் தோற்றுவித்திருக்கிறார்கள். நாகரீகமான உலகம், மிருகபலியை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. மிருகபலி, நரபலி, தீண்டாமை யாவுமே சட்டத்தால் தடுக்கப்பட்டு தண்டனைகளுக்குட்பட்டவையாக வாதிடப்படுகிறது.

மனித வாழ்வானது இன்னுமொரு உயிரினது மரணத்திலோ, அஸ்தமனத்திலோ வெல்வதல்ல. மனிதனுக்கு ஏற்படும் துன்பங்களுக்குப் பரிகாரமாக மிருகங்களைப் பலிகொடுப்பதென்பதை எந்தவொரு புத்தகமும் ஏற்றுக்கொள்ளாது. தெய்வங்கள் வாய் பேசாது என்பதற்காக, வாய் பேசாத வாய்விடாத பிராணிகளை வெட்டிச் சரிக்கலாம் என்பது தர்மத்திற்கும், சட்டத்திற்கும், சமயத்திற்கும் முரணானதே.

### ஒரு குறிப்பு:

மாட்டிறைச்சி விற்கத் தடைவிதித்து தீர்மானம் நிறைவேற்றிய நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்களை வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்துடன் இணைந்து அவர்களைப் பாராட்டிக் கௌரவித்த ஏனைய அமைப்புக்களையும் சந்நிதியான் ஆச்சிரமம் உளமாரப் பாராட்டுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 09. போர்க்களத் தலகை வகுப்பு

செகதல மெங்கணு மதிரமு ழங்கிய டிப்பாய் வெற்றிய
திரள்வரை பிடுங்கி நாட்டி யொட்டு குழையின
சினமலி வெங்குற ளினமொடு திண்டிறன் மற்போர் கற்பன
திசையள வுநின்று நீட்டி வைக்கு மடியின
திரைகடொ றும்பல குறைகளெ ழுந்து துடித்தாடச் சிறை
செறிகழு கரங்கில் வீற்றி ருக்கு மரசின
திமிரபி லங்கிரி படவிசை கொண்டுகு தித்தா லிப்பன
சிகரவ டகுன்றி நூற்றி ரட்டி நெடியன
சிறியன கிண்கிணி யணிகுரு வின்சர ணத்யா னத்தின
திசைபட வகண்ட சீர்த்தி மெச்சி யிரைவன
திமிலைபெ ரும்பறை சிறைபறை நின் றதி ரச்சே வித்துயர்
சயமகள் விளங்கு வேற்க ரத்தை மொழிவன
திரிகட தொங்கிட திரிகட திங்கிட தித்தீ செக்கண
செககண மொழிந்து கூத்த னைத்து நவில்வன
சிலைமலி திண்புய வசுரர்சி ரங்கள டுப்பா வைத்தவர்
செறிகுடர் நிணங்கள் காய்ச்சி மிக்க வயில்வன:,

நிகரில றம்புரி குருகுல பஞ்சவர் மெய்த்தூ துக்கொரு
நிமிடம திலன்று போய்க்க வித்த மணிமுடி
நிருபர்ப யங்கொள நெறுநெ றெனும்படி பொற்பீ டத்திடை
நிலைபெற விருந்து நூற்று வர்க்கு மவரறி
நினைவுற வன்புறு மொருபதி னெண்குண வக்ரோ ணிப்படை
நிகிலமு மடிந்து கூற்று வற்கு நிறைவுற
நிலமகள் வன்பொறை கடியமு குந்தன்மு தற்சேண் முட்டவு
நெறிபட நிமிர்ந்த வாக்கை யற்கு மருமகன்
நிமிலைத்ரி யம்பகி கவுரிதி கம்பரி நிர்ப்பா வக்குண
நிருமலி யிரங்கு தாய்ப்ரி யத்த னறுமுகன்
நிகரக னங்குல சிகரிதொ டும்பெரு வெற்பா றுற்பல
நிறையருவி கொஞ்ச வோச்சி யத்தி லொளிர்சுனை
நியதியி னன்கலர் தணிகையெ னும்பதி நிற்பான் முற்பட
நெடுமகர சிந்து தீப்ப றக்க வெகுவித
நிபுடது ரங்கக சவிரத சங்க்ரம நிட்டு ரக்கொலை
நிருதரை முனிந்த போர்க்க ளத்தி லலகையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்டாதி மாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

Dr. K. இராதாகிருஷ்ணன்

(மெடிக்கல் சென்ரர், நெல்லியடி)

இராசையா குகதாசன்

(யாழ்ப்பாணம்)

சி. கனகசபை

(யாழ்ப்பாணம்)

அ. மகேந்திரராசா

(மல்லாகம்)

சி. செல்லையா

(கரவெட்டி)

M.S.K. மகேஸ்வரன்

(கொக்குவில்)

சி. சிவநேசன்

(கொக்குவில்)

வ. கதிர்காமநாதன்

(சுண்ணாகம்)

S. மகாதேவன்

(உடும்பராய்)

க. காசிநாதர்

(நீர்வேலி)

K.S. கணபதிப்பிள்ளை

(கைதடி)

தி. கோபாலகிருஷ்ணன்

(புத்தூர்)

உரிமையாளர்

(விஜிதா அரிசி ஆலை, அச்சுவேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வே. தர்மராசா**

(பொதுமுகாமையாளர், சுண்ணாகம்)

**செ. புவனேந்திரராசா**

(மதுஷன் பல்பொருள் வாணிபம், உடுப்பிட்டி)

**செல்லையா சிவசம்பு**

(இளை.அதிபர், வளலாய்)

**த. சிவகுருநாதன்**

(துவாரகா வெதுப்பகம், நவிண்டில்)

**காரை. M.P அருளானந்தன்**

(ஆசிரியர், ஸ்ரான்லி கல்லூரி, யாழ்ப்பாணம்)

**ப. நடராசாக்குருக்கள்**

(ஆவரங்கால், புத்தூர்)

**இ. ராதாகிருஷ்ணன்**

(ஏழாலை மத்தி, ஏழாலை)

**க. ஸ்ரீஸ்கந்தராசா**

(இளை. அதிபர், அச்சுவேலி)

**சோ. தனராசா**

(வாணிமஹால், வட்டுக்கோட்டை)

**நாகேந்திரம் கண்ணம்மா**

(மானிப்பாய்)

**வ. கந்தசாமி**

(பிரியங்கா பான்சி, உடுப்பிட்டி)

**சி. சிவச்செல்வம்**

(இளை. அதிபர், சந்நிதிவீதி, அச்சுவேலி)

**கு. மதனமோகன்**

(சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி)

**ஆ. திருநாவுக்கரசு**

(இணுவில் மேற்கு)

**நா. கனகலிங்கம்**

(தபால் வீதி, கொக்குவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**B.R. ரஞ்சன்**

(சர்வதேச லயன்ஸ் கழக உறுப்பினர், யாழ்ப்பாணம்)

**சி. லிங்கேஸ்வரி**

(மதவடிலேன், சுதுமலை)

**சு.சண்முகசுந்தரம்**

(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)

**க. தெய்வானைப்பிள்ளை**

(V.M. றோட், பருத்தித்துறை)

**பார்த்தசாரதி விஜயகுமார்**

(சுழிபுரம்)

**திருமதி. ப. தேவமனோகரன்**

(கந்தபுஷ்கரணி, நவாலி)

**அ. ஆறுமுகம்**

(உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை)

**கயிலைநாதன் மங்களகாந்தி**

(வேழலகம், ஆனைக்கோட்டை)

**இ. இந்திரலிங்கம்**

(இணுவில் கிழக்கு)

**இ. சர்வேஸ்வரன்**

(கலைவாணி வீதி, கோண்டாவில்)

**த. விசயகுமாரன்**

(பழம்றோட், கந்தர்மடம்)

**செல்வி.சு. பகீரதி**

(செட்டித்தெரு, நல்லூர்)

**கனகேஷ்வரன் பிரகாஷ்**

(கைதடி கிழக்கு)

**சி. செல்வரத்தினம்**

(நீர்வேலி)

**ஐ. ராமச்சந்திரா**

(லவ்லேன், உடுவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சி. சகுந்தலாதேவி**
(வங்களாலேன், மல்லாகம்)

**அ. ராஜ்சங்கர்**
(உரும்பராய்)

**ம. நாகேஸ்வரி**
(நவிண்டில்)

**த. லதாசந்திரிக்கா**
(மகாத்மா வீதி, நெல்லியடி)

**க. நற்குணராஜா**
(பிள்ளையார் கோயிலடி, அச்சுவேலி)

**செ. இராஜேஸ்வரி**
(15ஆம் கட்டை, புறாப்பொறுக்கி)

**ச. குகதாஸ்**
(நீர்வேலி)

**த. பூபாலன்**
(கண்ணாமலை வீதி, உடுப்பிட்டி)

**கா.ஆ. சச்சிதானந்தம்**
(சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி)

**தினேஸ் கவிதா**
(ஆவரங்கால்)

**க. சிவசுப்பிரமணியம்**
(கோப்பாய்)

**நா. கமலநாதன்**
(வட்டுவினி அம்மன் கோயிலடி, இணுவில்)

**செ. சோதிப்பெருமாள்**
(சரஸ்வதி மஹால், இணுவில்)

**சி. வேலாயுதம்**
(இளை. அதிபர், வதிரி, கரவெட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிங்க நெறியினால் இலங்கிய இலங்கை - சிவபூமி

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

இலங்கைத் திருநாடு, "சிவபூமி" எனத் திருமூலரால் பெருமைப்படுத்தப்பட்ட சிறப்பினைப் பெற்றுள்ளது இலங்கைக்குக் கிடைத்த பெரும்பேறு ஆகும். சிவனுக்குரிய ஈஸ்வரங்கள் இலங்கையின் நாற்புறங்களிலும் அமைந்துள்ளன. அவை மிகப் புராதனகால வரலாற்றுச் சிறப்பையும்; மூர்த்தி, தல, தீர்த்த மகிமைகளையும் கொண்டு விளங்குகின்றன. தொல்பொருள் ஆய்வுகளும், இலக்கியச் சான்றாதாரங்களும் கர்ணபரம்பரையாகப் பரிமாற்றம் செய்யப்பட்டு வந்த செய்திகளும் இலங்கைச் சைவப் பாரம்பரியத்தின் தொன்மையையும் வளர்ச்சிப் போக்கையும் நன்கு கோடிட்டுக் காட்டுகின்றன.



இலங்கையின் வடக்கே நகுலேச்சரம்; வடமேற்கில் திருக்கேதீச்சரம்; மேற்கே முன்னேச்சரம்; கிழக்கே திருக்கோணேச்சரம் மற்றும் தென்கோடியில் சந்திரசேகரம், தொண்டீஸ்வரம் ஆகிய சிவத்தலங்கள், பண்டைய ஈச்சரங்கள் ஆகும். இவற்றுள் திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம், தேவாரப் பாடல்கள் பெற்ற திருத்தலங்கள். திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி நாயன்மார்கள் இத்தலங்களின்மீது பாடிய தேவாரப் பதிகங்கள் இலங்கையின் தொன்மைமிகு சைவப் பாரம்பரியத்தை நன்கு வெளிப்படுத்துகின்றன. வரலாற்று நூல்களிலும், கல்வெட்டு ஆதாரங்களிலும், புராதன சிவாலயங்கள் பற்றிய உண்மைச் செய்திகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கை முழுவதும் சிவ வழிபாடும், சைவ பாரம்பரியமும் பண்டைய காலத்தில் செழித்து ஓங்கியிருந்தமை காரணமாகவே, திருமூலர் திருமந்திரப் பாடல் ஒன்றில் இலங்கையைச் "சிவபூமி" என்று போற்றிச் சிறப்பித்துள்ளார்.

திருமூலர், திருமந்திரத்தில் இலிங்க நெறியினர் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவர்கள் உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தம் பெற்று வாழ்ந்த ஒரு கூட்டத்தினர் ஆவர். அத்தகைய இலிங்க வழியினர் வாழ்ந்து இலங்கிய காரணத்தால், அவர்களின் வாழ்விடம் "இலங்கை" எனப் பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது. இலிங்க மரபில், பண்டுதொட்டு வழங்கி வரும் சமயம் சிவநெறி என்றும், சைவம் என்றும் அறிஞர்களால் குறிப்பிடப்படுகிறது. இலங்கையின் பூர்வீக மக்களின் சமயம் சைவம் என்பது தெளிவு.

*பிறருக்கு உதவியாக வாழும் வாழ்க்கையே மேம்பட்ட வாழ்க்கை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராவணேஸ்வரன் இலங்காபுரியை ஆட்சிசெய்த மாபெரும் மன்னன்; மிகுந்த சிவபக்தியுடையவன்; சாமவேத கானம் இசைத்து சிவபெருமானை மகிழ்வித்தவன்; வரங்கள் பல பெற்றவன்; இசை விற்பன்னன்; வீணைக் கொடியோன்; உலகம் முழுவதும் சிவ வழிபாட்டையும், சிவநெறியையும் பரப்பிய பெருமையுடைய வேந்தன். இராவணேஸ்வரனின் சிவபக்திச் சிறப்பைச் சைவசமய குரவர்கள் நால்வரும் போற்றிப்பாடியுள்ளார்கள்.

"இராவணன் மேலது நீறு" எனத் திருஞானசம்பந்தர், தாம் பாடிய திருநீற்றுப் பதிகத்தில் ஏற்றிப் போற்றியுள்ளார். அவர் பாடிய தேவாரப் பதிகங்களின் எட்டாவது பாடல்களில் இராவணன் நாமம் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம். இதிலிருந்து இராவணேஸ்வரன், எந்த அளவிற்கு, ஆதி இலங்கையில் சிவலிங்க வழிபாட்டையும் சிவநெறியையும் ஓம்பி வளர்த்துள்ளான் என்பதை அறியமுடிகின்றது.

"பத்திலங்கு வாயாலும் பாடல் கேட்டுப் பரிந்து அவர்க்கு
இராவணர் என்று ஈந்த நாம தத்துவனை..." என்று திருநாவுக்கரசர் பாடியுள்ளார்.

இராவணன் ஆட்சியில் ஆயிரத்து எட்டுச் சிவாலயங்கள் இலங்கையில் இருந்தமை பற்றிக் குறிப்புகள் உள்ளன. அக்காலத்தில் இலங்கை மக்கள் அனைவருமே சிவநெறியில் நின்று வாழ்ந்தனர். இலங்கையில் மட்டுமல்ல உலகின் பல பாகங்களிலும், சிவலிங்கங்கள் ஸ்தாபிக்கப்படுவதற்கும்; சிவநெறி பரவுவதற்கும், இராவணேஸ்வரன் காரணனாக விளங்கினான் என அறியக்கிடக்கிறது.

இலங்கையின் பூர்வீகக் குடிகள் இயக்கர்களும் நாகர்களும் ஆவர். அவர்கள் சிவ வழிபாட்டினர். இராவணேஸ்வரன் இயக்கர் குலத்தவன். வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட தொன்மையான காலத்திலிருந்து சிவவழிபாடு இலங்கையில் இருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மண்டோதரி இராவணேஸ்வரரின் மனைவி; பட்டத்துத்தேவி. சிவபக்தியில் உயர்ந்து நின்றவர். மயன் என்னும் தேவஸ்தபதியின் மகள். ஆதியில் திருக்கேதீச்சரத் திருக்கோயிலை அமைத்த மகாதுவட்டா என்பவனின் தம்பிதான் மயன். இருவரும் இலங்காபுரியை அமைத்த தேவஸ்தபதியான விசுவகன்மாவின் புதல்வர்கள் எனக் கூறப்பட்டுள்ளது.

மண்டோதரி திருக்கேதீஸ்வரத்தில் வழிபாடு செய்துகொண்டிருந்த சமயம், அவளின் தூய பூசனைக்கு மகிழ்ந்த சிவனார், அவளுக்குத் திருவருள் பாலிக்கத் திருவுளங்கொண்டு, மண்டோதரி முன் குழந்தை வடிவில் காட்சியளித்து அருள் செய்தார். அவ்வேளை, இராவணனும் அழகுமிளிர் குழந்தையைத் தூக்கி அணைத்து, உச்சிமோந்து பேரானந்தத்தில் திளைத்தான்; என்ற செய்தியும் கூறப்பட்டுள்ளது. உத்தரகோசமங்கைத் தலபுராணத்தில் இதுபற்றிய குறிப்பு உள்ளது.

நித்திய கன்னிகைகள் என அழைக்கப்படும் உத்தமிகளுள் மண்டோதரியும் ஒருவர் ஆவார். இவர் வண்டோதரியார் என மணிவாசகரால் திருவாசகப் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளார்.

"ஏர்தரும் ஏழுலகு ஏத்த எவ்வுருவந்தன் உருவாய்
ஆர்கலி சூழ் தென்னிலங்கை யழகமர் வண்டோதரிக்கும்
பேரருள் இன்பம் அளித்த பெருந்துறைமேய பிரானைச்
சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய்"

-திருவாசகம்.

*இயற்கை அதன் உள்ளுறை என்னும் இரண்டின் சாயல்களே கோயில்களாயின.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபக்தியில் உயர்ந்து நின்ற மண்டோதரியார்; மற்றும் இராவணேஸ்வரன் ஆகியோர் வாழ்ந்து சிவம் பெருக்கிய பூமி என்ற வகையில் இலங்கையைச் "சிவபூமி" என்று திருமூலர் அழைத்துப் போற்றியுள்ளார். திருமூலர், அகத்தியர், இராவணேஸ்வரன் ஆகியோர் ஒரே காலத்தவர் எனவும் நண்பர்களாக வாழ்ந்தனர் என்றும் குறிப்புக்கள் உள்ளன. புராதன சிவ ஈச்சரங்களான திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம், மாமாங்கேஸ்வரம், முன்னேச்சரம் என்பவற்றுடன் இராவணேஸ்வரனைத் தொடர்புபடுத்தும் பல செவிவழிச் செய்திகள், புராண இதிகாச வரலாறுகள் என்பன, அவற்றின் தோற்றுவாய், பின்புலம் என்பவற்றில் உள்ள உண்மையைச் சூட்சுமமாக உணர்த்துவதாக அமைகின்றன.

இராவணன் வெறுமனே இதிகாச, புராணங்களில் வரும் கற்பனைப் பாத்திரம் அல்ல என்றும்; நிஜமாகவே புராதன காலத்தில் இலங்கையை ஆண்ட ஒரு மாமன்னன் என்றும்; சிவபக்தன் என்றும்; சிவநெறி இலங்கையில் பரவுவதற்குக் காரணன் ஆக இருந்தவன் என்றும் கூறப்படும் கருத்துக்கள் ஆய்வாளர்கள் மத்தியில் தற்காலத்தில் வலுப்பெற்று வருகிறது.

இலங்கையின் வரலாற்றுக் காலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டிலிருந்து ஆரம்பம் ஆகிறது என வரலாற்று நூலாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இலங்கைக்கு விஜயன் வந்தபோது கி.மு.543- சிவலிங்க வழிபாடு இங்கு இருந்துள்ளமைக்கு ஆதாரங்கள் உள்ளன. இலங்கையில் அப்போது ஐந்து ஈச்சரங்கள்- திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம், முன்னேச்சரம், நகுலேச்சரம், தொண்டீச்சரம் (சந்திரசேகர ஈச்சரம்) இருந்தமைபற்றி மகாவம்சம் என்னும் சிங்கள வரலாற்று நூலில் குறிப்புகள் உள்ளன. வரலாற்று ஆய்வாளர் போல் இ.பீரிஸ் என்பவர், விஜயனது வருகைக்கு முன்பிருந்தே பல காலங்களாக, இவ்வைந்து சிவ ஈச்சரங்களும் இலங்கையின் நாற்றிசைகளிலும், அமைந்திருந்தன எனக் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவிலிருந்தும் யாத்திரிகர்கள் இச்சிவாலயங்களுக்கு வருகைபுரிந்து, ஈஸ்வரனைத் தரிசித்து அருள்பெற்றமை பற்றியும் தல புராணங்களில் குறிப்புகள் உள்ளன. இலங்கையில் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில், புத்தமதம் பரவத் தொடங்கிய காலம் வரை, மன்னர்களும், நாட்டு மக்கள் அனைவரும் சிவநெறிக் கலாசாரமரபுகளைப் பின்பற்றி வாழ்ந்து வந்தனர் என்பது தெளிவு. அதன்பின்னர் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் வாழ்ந்து வந்த தமிழ் மக்களிடையேயும்; ஏனைய பகுதிகளில் வாழ்ந்து வரும் தமிழ்மக்களிடையேயுமே சைவ நெறியும் சைவப்பண்பாட்டு மரபுகளும் தனித்துவமாகத் தழைத்தோங்கி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நவம்பர் | 07 | ஐப்பசி | 21 | புதன் | மெய்கண்டதேவர் |
| நவம்பர் | 28 | கார்த்திகை | 12 | புதன் | ஆறுமுகநாவலர் |
| டிசம்பர் | 01 | கார்த்திகை | 15 | சனி | மெய்ப்பொருளார் |
| டிசம்பர் | 12 | கார்த்திகை | 26 | புதன் | இராமநாதர் |

*ஆற்றல் உள்ள இடத்தில் அகம்பாவமும் தானே வந்து சேர்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பத்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த

– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

## 07. காருணியத்திரங்கல்

67. போற்றியென் போலும் பொய்யர் தம்மையாட் கொள்ளும் வள்ளல்
போற்றிநின் பாதம் போற்றி நாதனே போற்றி போற்றி
போற்றிநின் கருணை வெள்ளப் புதுமதுப் புவனம் நீர்தீக்
காற்றிய மானன் வானம் இன்சுடர்க் கடவு ளானே.

**ப-ரை:**

என் போலும் பொய்யர் தம்மை ஆட்கொள்ளும் வள்ளல் போற்றி- என்னைப் போன்ற மெய்யடியார் போல் நடிக்கும் பொய்யர்களையும் அடிமைகொண்டருளும் வள்ளலே காத்தருள்க; நின்பாதம் போற்றி போற்றி- நின் திருவடிக்கு வணக்கம் வணக்கம்; நாதனே போற்றி போற்றி- தலைவனே காத்தருள்க காத்தருள்க; புவனம் நீர் தீ காற்று வானம் இருசுடர் இயமானன் கடவுளானே- நிலம் நீர் நெருப்பு காற்று விசும்பு ஞாயிறு திங்கள் உயிர் என்னும் எண்வகைப் பொருள்களையும் அட்டமூர்த்தங்களாகக் கொண்டு அவற்றுள் மூர்த்திமானாக விளங்கும் கடவுளே, நின் கருணை வெள்ளம் புது மது போற்றி- நினது அருட் பெருக்காகிய புதியதேன் என்னைக் காத்தருள்க.

என்போலும் பொய்யர் தம்மை அடிமை கொண்டருளும் வள்ளலே காத்தருள்க; நின்திருவடிக்கு வணக்கம் வணக்கம்; நாதனே காத்தருள்க காத்தருள்க; புவனம் நீர் தீ காற்று வானம் ஞாயிறு திங்கள் உயிர் என்னும் எண்வகைப் பொருள்களையும் அட்ட மூர்த்தங்களாகக் கொண்டு அவற்றுள் மூர்த்திமானாக விளங்கும் கடவுளே நின் அருட்பெருக் காகிய புதியதேன் என்னைக் காத்தருள்க என்பதாம்.

என்போலும் பொய்யர் என்றது மெய்யன்பின்றி என்னைப் போன்று மெய்யர்போல் நடிக்கின்ற பொய்யர்களை, "நாடகத்தாலுன்னடியார் போல் நடித்து" (சதகம்11) என அடிகள் அருளியமையுங் காண்க. அத்தகைய பொய்யரையும் இறைவன் ஆட்கொள்ளுதலின் "பொய்யர் தம்மை யாட்கொள்ளும் வள்ளல்" என்றார். "பொய்யவனேனைப் பொருளென வாண்டொன்று பொத்திக் கொண்ட, மெய்யவனே" (நீத்7) எனவும் "வான் பழித்திம் மண்புகுந்து மனிதரை யாட்கொண்ட வள்ளல்" (குயிற்4) எனவும் வருவன காண்க. தகுதியுடையார் தகுதி இல்லார் எனும் வேறுபாடு கருதாது தகுதியில்லாரையும் ஆட்கொண்டு வரையாது வழங்குதலின் வள்ளல் என்றார். வள்ளல் அண்மைவிளி. போற்றி நின்பாதம் போற்றி என்பதில் போற்றி என்பது வணக்கம் என்ற பொருளிலும், நாதனே போற்றி என்பதிற் காத்தருள்க என வேண்டிக் கோடற் பொருளிலும் வந்தன.

*தத்துவங்களுக்குச் சிகரமாக, வேத முடிவாக இருப்பது உபநிஷத்துக்களே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புவனம் நீர் தீ காற்று இயமானன் வானம் செஞ்சுடர் வெண்சுடர் என்னும் இவையன்றி உலகத்துப் பொருள்கள் பிற இன்மையின் இவ்வெட்டுப் பகுப்பையும் எட்டு முகூர்த்தங்களாகக் கொண்டு தான் அவற்றில் மூர்த்திமானாக விளங்குபவன் என்பதும். அங்ஙனம் விளங்கினும் அவற்றிற்கு அப்பாற்பட்டும் உளன் என்பதும் "புவனம் நீர் தீக், காற்றியமானன் வானம் இருசுடர் கடவுளானே என்பதால் இனிது விளங்கும் இறைவனுக்கும் அட்ட முகூர்த்தமுண்மை, "நிலம் நீர் நெருப்புயிர் நீள் விசும்பு நிலாப் பகலோன், புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்" (தோணோ5) "அட்டமூர்த்தி யழகன்" (சென்னிப்2) "அட்டமூர்த்தி யழல் போலுருவன்" (தே.ஞான 253:8) "அட்டமா வுருவினானே யாவடு துறையுளானே" (தே.நாவு 57:3) "அட்ட மூர்த்தியை மட்டவிழ் சோலை யாரூரானை" (தே.சுந் 59:2) என வரூஉம் திருவாக்குக்களானும் அறிக. இயமானன்- உயிர். "இயமானனாம்விமலா" சிவபுராணம் 36. கடவுள் என்றது கடத்தல் என்னும் பொருளுடைத்தாய் உலகப்பொருள்கள் எல்லாவற்றை யுங் கடந்து எங்கும் நிறைந்துள்ள இறைவனை ஆகுபெயராய் உணர்த்தியது.

இறைவனது கருணை வெள்ளம்போன்றமையின் "கருணை வெள்ளம்" என்றார்.

"தன் கருணை வெள்ளத் தழுத்தி" அம் 5.
"வான் கருணை வெள்ளப் பிரான்" கோத் 16.
"தன் கருணை வெள்ளத்து மன்னுற" பொன்னூசல் 3.

என அடிகள் பிறாண்டும் அருளியவாறுங் காண்க.

கருணையைப் புதுமது என்றார். உலகத்துத் தேன் போலாது புதிது புதிதாக இனிமை தந்து கொண்டிருக்கும் தேனாதல்பற்றி தெவிட்டாத தேன் என்றவாறு "புணர்ந்தாற் புணருந் தொறும் பெரும்போகம் பின்னும் புதிதாய்" (9) எனத் திருக்கோவையாரில் வருதலும் ஈண்டைக் கேற்ப அறியற்பாலது. மது- தேன். கருணையைத் தேன் என்றல், "கருணை வான்றேன் கலக்க" (அண்டப் 180) என்புழியுங் காண்க.

இதன்கண், பொய்யர்தம்மை ஆட்கொள்ளும் வள்ளல், "நாதனே போற்றி நின் கருணை வெள்ளப்புதுமது போற்றி" என்பவற்றால் இறைவன் பேரருளை வேண்டிக்கோடல் புலப்படுதலின் காருணியத்திரங்கல் என்னும் ஏழாம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 63.

**68. கடவுளே போற்றி யென்னைக் கண்டுகொண் டருளு போற்றி**
**விடவுளே யுருக்கி யென்னை ஆண்டிட வேண்டும் போற்றி**
**உடலிது களைந்திட் டொல்லை உம்பர்தந் தருளு போற்றி**
**சடையுளே கங்கை வைத்த சங்கரா போற்றி போற்றி.**

**ப-ரை:**

கடவுளே போற்றி- உலகப் பொருள்கள் எல்லாவற்றையுங் கடந்து நிற்கும் இறைவனே நினக்கு வணக்கம். என்னைக் கண்டுகொண்டு அருளுபோற்றி- அடியேனை இடர்க் கடற் புகாவண்ணம் திருவருணோக்கஞ் செய்து அருளுவாயாக நினக்கு வணக்கம். விட உன் உருக்கு என்னை ஆண்டிட வேண்டும் போற்றி- இருவகைப் பற்றுக்களையும் யான் விடுதற்கு அன்பால் என் உள்ளத்தை உருகச் செய்து ஆளாக நின்பால் வைத்துக்கொள்ள வேண்டும் நினக்கு வணக்கம். உடல் இது களைந்திட்டு ஒல்லை உம்பர் தந்தருளு போற்றி-

*அறவழியில் வராத செல்வம் தேய்ந்துவிடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைவயத்தாற் கிடைத்த தூலதேகமாகிய இந்த உடம்பினை நீக்கி விரைவாக மேலாகிய வீட்டின்பத்தைத் தந்தருள்வாயாக; நினக்கு வணக்கம் சடையுளே கங்கை வைத்த சங்கரா போற்றி- பெருக்கெடுத்து வந்த கங்கையால் உலகிற்குத் தீங்குண்டாகாதவாறு திருச்சடையினுள்ளே அக்கங்கையை வைத்தருளிய சங்கரனே நினக்கு வணக்கம்.

கடவுளே நினக்கு வணக்கம். அடியேனை திருவருணோக்கம் நல்கி அருளுவாயாக நினக்கு வணக்கம். உலகப் பற்று விடுதற்கு என் உள்ளத்தை அன்பால் உருகச் செய்து என்னை ஆட்கொள்ள வேண்டும்; நினக்கு வணக்கம். தூலதேகமாகிய இவ்வுடம்பினை நீக்கி விரைவாக மேலாகிய வீட்டின்பத்தைத் தந்தருளுக; நினக்கு வணக்கம். சடையின் கண்ணே கங்கையை வைத்தருளிய சங்கரனே நினக்கு வணக்கம் என்பதாம்.

கடவுள் எல்லாவற்றையும் கடந்தவர். பதிஞானத்தானன்றிப் பசு பாச ஞானங்களால் அறியப்படாதவர். போற்றி- எல்லாம் வணக்கப் பொருளன. கண்டுகொண்டு அருளு- துயர்புகா வண்ணம் திருவருள் நோக்கஞ் செய்து அருளுவாயாக. "யான் துயர்புகா வண்ணம் அருள் செய்து" (அற்2) என வருதலும் காண்க. விட என்னும் எச்சத்திற்குச் செயப்படுபொருள் வருவிக்கப்பட்டது. உள்- உள்ளம்.

ஆண்டிட வேண்டும் என்பது முன்னர் ஆட்கொள்ளப்பட்ட தம்மை மீட்டும் ஆட்கொள்ள வேண்டும் என வேண்டிக்கொண்டதாகாது ஆட்கொண்ட தம்மைப் புறத்தே பிரியவொட்டாது "ஆளாக நின்பால் வைத்துக்கொள்ள வேண்டும்" என்னும் பொருளில் வந்தது. "புறமெனைப் போக்கல் கண்டாய்" (சத 62) என அடிகள் அருளியமை ஈண்டு அறியற்பாலது.

உம்பர் தந்தருளுதற்கு எடுத்த இவ்வுடல் தடையாக விருத்தலின் இவ்வுடம்பினை நீக்கி விரைவாக மேலாகிய வீட்டின்பத்தைத் தந்தருள வேண்டும் என்பார், "உடலிது களைந்திட்டொல்லை யும்பர் தந்தருளு" என்றார். "பிறப்பறுக்க லுற்றார்க் குடம்பும் மிகை" (குறள் 346) என்றார் திருவள்ளுவரும். "உடலைச் சிதையாத தெத்துக்கு" (குழைத்2) "செடிசேருடலைச் செலநீக்கிச் சிவலோகத்தே நமை வைப்பன்" (யாத்.4) எனவும் அடிகள் அருளியமையும் ஈண்டறியற்பாலன.

கங்கை வைத்த- பொங்கும் புனற் கங்கையை வைத்த. "பொங்கும் புனற் கங்கை தாங்கி" (திருக்கோவை 75) என வருதலுங் காண்க. சடையுளே கங்கை வைத்தமை உலகத்தைக் காத்தற்பொருட்டாதலினாலும், சங்கரா என விளித்தமை சுகத்தைச் செய்பவனே என்பதாதலாலும் அடிகள் முன்னர் வேண்டிய வேண்டுகோளுக்கு இயைந்த கருத்துடை அடைகொளி யணியாய் அமைந்தன.

இதன்கண், என்னைக் கண்டுகொண்டருளும்; என்னை ஆண்டிட வேண்டும்; உடலிது களைந்திட் டொல்லை யும்பர் தந்தருளு" என இறைவன் கருணையை வேண்டி இரங்குதலினால் காருணியத்திரங்கல் என்னும் ஏழாம்பத்து நுதலியபொருள் போதருதல் காண்க. 64

(தொடரும்...

---

**தரையில் நின்று பார்க்கின்றவனுக்கு மரத்தைவிடப் புல் சிறிதாய் தெரியும். அவன் மலைமீதிருந்து பார்க்கும்போது மரத்துக்கும் புல்லுக்கும் வித்தியாசமில்லை. ஒரே பச்சைப் படலமாகத் தெரியும். உலகப் பற்றுடையவனின் பார்வைக்குத்தான் அரசன், ஆண்டி, தந்தை, மகன் என்கின்ற அந்தஸ்து பேதங்கள். ஆனால் தெய்வ தரிசனம் பெற்றபின் எல்லாம் ஒரே தோற்றம். -இராமகிருஷ்ணர்.**

*தியானம் செய்வதால் மனம் உறுதியடைகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீகப் பெருவாழ்வு

– **திரு குமாரசாமி ஸ்ரீஸ்கந்தராஜா** அவர்கள் –

இவ்வுலகில் வாழும் மக்கள் எல்லோருமே எப்போதும் குறைவில்லாமல் சந்தோசமாக வாழ வேண்டும் என்றுதான் நினைக்கிறார்கள். சந்தோசம் என்பது இரண்டு வகை. கொஞ்ச நேரம் மட்டுமே அனுபவிப்பது ஒரு விதமாகும். மற்றையது எப்போதுமே குறையாமல் நிலைக்க வைத்திருப்பது இன்னொரு விதமாகும். கொஞ்ச நேரம் இன்பம் கொடுப்பது காமம். இதில் காமம் எனப்படும் வார்த்தை எல்லாவித உலகியல் ஆசைகளையும் குறித்து நிற்கிறது. இன்றைய அவசர உலகில் கீழ்த்தரமான காம இன்பங்களையே உண்மையான இன்பமென்று, அறியாமை மயக்கத்தினால் பெருமளவு உலக சமுதாயம், இத்தகைய கீழ்த்தரமான காம இன்பங்களையே எப்போதும் அனுபவிக்கப் பேராசை கொண்டு, அதன் பின்னாலேயே ஏங்கி அலைந்து திரிந்த வண்ணம் அதற்கு அடிமைச் சேவகம் செய்துகொண்டும் மனம் போன போக்கில் காட்டுமிராண்டி வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அது காரணமாக மக்கள் தம் அன்றாட வாழ்க்கையைத் தொலைத்து விட்டு, தமது உண்மை இன்ப வாழ்க்கையையும் வீணாகவே அழித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் சொந்த அறிவைப் பயன்படுத்தி, இன்றைய வாழ்க்கையை எவ்வாறு நாம் வாழவேண்டும், என்ற சிந்தனைப் போக்கு வெகுவாகவே அருகிவருகிறது.

இன்றைய காலத்தே எமது சமூகம் இதனை நன்கறிந்துகொண்டு சுயமாகச் சிந்தித்து வாழும் விழிப்புணர்வும் தெளிவும் பெற்றுக்கொண்டு, அறிவியல் வாழ்க்கை வாழ முன்வரவேண்டும். ஆனால் பெரும்பாலான மக்கள் தம் அறிவுத் திறனைப் பயன்படுத்திக்கொண்டு, இன்பமயமான வாழ்க்கையை வாழ எண்ணியவாறு, இன்பத்தையே இலட்சியமாகக் கொண்டு, இன்பத்திற்காகவே ஏங்கிக்கொண்டும் நிகழ்கால வாழ்வை அறியாமை இருளில் காலம் கடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நாம் வாழும் இவ்வுலகில் நாம் வாழுங் காலமெல்லாமே, எதோ ஒரு வகையில் நமது சக்தியையும்மீறி நாம் அனுபவிக்கும் சில, பல இன்பங்களுக்கிடையே நம்மை இடைவிடாது, வலுவான பல விதத் துத் துயரங்களும், துன்பங்களும் நம்மைத் தொடர்கின்றன. மிரட்டவும் செய்கின்றன. ஆனாலும் நம்மிற் பெரும்பாலானோர் இதைப்பற்றிப் பெரிதும் கவனத்திலெடுப்பதில்லை. பிறக்கின்றோம் வளர்கின்றோம் ஓரளவு கல்வியைக் கற்றுத் தொழில் பெற்ற பின்னர், திருமணம் செய்கின்றோம். நம் மனம் போகிற போக்கில் வாழுகிறோம். மேலும் குழந்தைகளைப் பெற்று அவர்களையும் ஆளாக்குகின்றோம். அதன் பிறகு பேரப் பிள்ளைகளைக் கவனிப்பதிலேயே காலத்தைக் கடத்துகின்றோம். இறுதியில் வயோதிபம் காரணமாக நோய்வாய்ப்பட்டு மரணிக்கின்றோம். இதனையே இலௌகீகம் என்கின்றோம். இவ்வுலகியலில் மனிதர்கள் தாம் வாழுங் காலத்தில் மரணத்தைப் பற்றிப் பெரும்பாலானோர் சிந்திப்பதில்லை. எந்த வேளையிலும் மரணம் நம் வாழ்வை முடிவுறுத்தலாம் என்பதை மறந்து வாழ்க்கை நடத்துவதற்கான சூழ்நிலையையே இலௌகீக வாழ்வு என்பது. அதிலும் ஒவ்வொரு

*சட்டைப் பையிலுள்ள ஒரு பூந்தோட்டத்தைப் போன்றது புத்தகம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தில் யாராவது திடீரென்று இறந்து விட்டதை இலௌகீகர்கள் கண்ணுற்றால் அந்த நேரம் மட்டும் கொஞ்சம் ஞானோதயம் சிந்தையில் தோன்றும். "என்ன உலக வாழ்வு இது?" என்று அழுகிறார்கள், பிதற்றுகின்றார் கள், சிந்திக்கின்றார்கள், பிறகு தம்முள்ளும் கதைக்கின்றார்கள். இவை எல்லாம் நிலை அற்றன" என்பார்கள். சிறிது நாட்களில் அந்த ஞானம் தூசுபோல் பறந்துவிடும். நாம் நமது அயலில் இயற்கை மரணம் எய்துபவர் களை அவதானித்தால் நல்ல சுறுசுறுப்பாக காளைபோல் திரிந்து உழைப்பவர்கள்கூட அடியற்ற மரம்போல் திடீரென தரையில் விழுவர். பின்னர் வாய் பேசவில்லை, கண் கள் மூடிவிட்டன என்பர். சற்று நேரத்தின் பின் அவர் இறந்துவிட்டார் என்பதை அயல வர்கள் உறவினர்களுக்கு அறிவிப்பார்கள். பின்னர் ஓரிரு தினங்களில் உற்றார் உற வினர்கள் யாவரும் கூடி இறுதிக் கிரியை களையும் முடித்து விடுவார்கள். ஆனால் அன்று முதல் இறந்தவருடைய நெருங்கிய உறவினர்கள் தவிர்ந்த ஏனையோர் அந் நிகழ்வை மறந்து விடுவார்கள். அத்தகைய நிகழ்வின் பின் யாவரும் தமது வழமையான அலுவல்களை வழமைபோலத் தொடர்வர். ஆனாலும் மிக நெருங்கிய உறவினர்கள் அதனைக் கண்ணுற்று மிகவும் மனம் வருந் திக் காணும் சம்பவங்களில் சிலருக்கு அந் நிகழ்வு ஆன்மீகத் தேடலுக்கான ஞானக் குருவாயும் அந் நிகழ்வு வந்து அமைந்து விடுவதும் உண்மையே!

மனிதர்களுக்கு ஏற்படும் அவஸ்தை களில் உயிர் வெளியேறும் தருணம் உண் டாகும் மரணவேதனை மிகவும் கொடியது. அதே போன்றே அகால மரணங்களும் அமை கின்றன. அந்தோ! மரண வேதனையில் உதி ரும் ஒரு சொட்டுக் கண்ணீரும் அளவற்ற சஞ் சலத்தின் சாரமாகும்.! சஞ்சலம் உண்டா வதற்குக் காரணமாயிருப்பது கணவன், மனைவி, பிள்ளைகள், தாய், தந்தை, உற வினர்கள் மற்றும் சொத்துக்கள், செல்வங் கள் இவைகளையெல்லாம் விட்டுப் பிரிந்து நமது ஆவி துறக்கப்போகிறதே! என்ற ஆசாபாச நினைவுகள்தான் இறப்பவர்களை வருத்துவது.

அதேசமயம் நமது உலகப் பற்று கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து உயிரையும் பறித்து, உடல் சக்தியையும் பறித்துவிடும். எல்லா ஆத்துமாக்களுக்கும் அவரவர் உயிர் நீங்கும் சமயம் என்ன நினைவு இருக்கிறதோ அதே வாசனையுடன் மறுபிறவி ஆரம்பம் ஆகிறது என்று சான்றோர்கள் சொல்லியிருக் கின்றனர். இத்தகைய சுழற்சிமுறைப் பிறப்பு இறப்பு என்னும் இழி நிலைக் கொடூரத் திலிருந்து மீட்சிபெற, மனித சமுதாயத்திற்கு ஒரு வழியும் இல்லையா? நிச்சயமாக இருக் கிறது! ஒரே ஒரு வழிதான் அது. தெய்வத் தைச் சரணடைந்துகொண்டு, எப்போதும் தருமத்தின் வழியே சிந்தித்துப்பேசி ஒழுக்க வாழ்வு வாழ்ந்தால் போதுமானது. இதுவே மனித குலம் சதாவாழும் வழி. இதுவே நம் அனைவரினதும் வாழ்க்கை வழி.

இம் மண்ணில் மனிதப் பிறவியை முற்றும் முழுமையாக முடிவுறுத்தி வேரறுக் கவே மனிதர்கள் தெய்வத்தால் பிறக்க வைக்கப்படுகின்றார்கள். இதனையே நமது சான்றோர் முற்றுவிப்பேறு என்கின்றார்கள். நமக்கு இத்தகைய தெய்வீகப் பேரின்பம் ஆனது ஒருமுறை வந்துவிட்டால் எப்போதும் நம்மைவிட்டுப் பிரியாமல் நிலைத்திருக்கும். இத்தகைய பேரின்பமானது எக்காலத்தும் எம்மை விட்டகலமுடியாதது. அதுவே முற்று விப் பேறு அல்லது மோட்சம் அல்லது வீடு பேறு என்னும் பேரின்ப நிலையாகும். அத் தகைய தெய்வீகப் பேரின்பத்தின் பெருமை தெரியாததால்த்தான் மக்கள் இலௌகீக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை வாழ்கின்றார்கள். ஏனெனில், அத்தகைய தெய்வீகப் பேரின்பத்தை அடைய உலகியற் காமம் தடையாக இருக்கிறது. சிற்றின்பம் சிறிது பொழுதில் அனுபவித்துத் தீர்த்துவிடலாம். ஆனால் இந்த ஆசை தீராது மறுபடியும் எண்ணத்தில் எழும். மறுபடியும் சிற்றின்பம் துய்க்க வேண்டும் என்ற தவிப்புப் பேரவா அவரவர் எண்ணத்தில் மேலெழும். இத்தொடரானது தொடர் பிறவிச் சுழற்சிக்கு வித்தாக விளைகிறது. இதற்கு மேலும் வேண்டும் என்ற தேவைப்பாடு எதுவுமே இல்லாதது மான, யாவருக்கும் நிலையான பேரின்பமே தெய்வீகப் பேரின்பம். இதுவே எல்லா மனிதர்களையும், எல்லாவிதத் துயரங்களிலிருந்தும் விடுவிக்கும். ஆயினும், இதனை எல்லா மக்களும் அறிவால் உணர்ந்து பின்பற்றிப் போற்றி முழுமை அறிவுடையோராக வாழ்ந்தால் எவருக்கும் எவ்வித துயரங்களும் எக்காலத்தும் அணுகாது.

பிறவி எடுத்த எல்லா உயிர்களுக்கும் நிச்சயமாக ஏற்படவிருக்கும் மரணத்தையும் மரண வேதனையையும் தெய்வநெறி நிற்கும் பக்தர்கள் தம் ஞானக்கண்ணால் அறிந்து பார்த்து, அதனை நிவர்த்திப்பதற்கான காரியங்களை எப்போதும் செய்வதுடன், தெய்வத்தில் சரணாகதியை வைத்துக்கொண்டு மரணத்தை வெல்லும் உபாயத்தையும் தெய்வ சங்கல்பத்துடன் சேர்த்துவிடுகின்றனர்.

எப்போதும் மாந்தருக்கு மனத்துக் கண் மாசற்ற தூய உள்ளத்துடன் தெய்வப் பற்றும் பெருகப் பெருக, ஏனைய பற்றுக்கள் யாவும் அகன்றுவிடும். தெய்வ அருள் மட்டும் கைகூடி வரும் "தெய்வமே! உன் அருளாலேயே யாவும் நடைபெறுகின்றன. ஆதலால் உன்னையே சரணடைந்தேன். என் உயிர்த் துணை நின்பதமே!" என்று அல்லும் பகலுமாகப் பிரார்த்தித்து தெய்வத்திடம் சங்கமித்து விடுகின்றனர். இத்தகைய அணுகுமுறை காரணமாக உண்மையாகவே தெய்வத்திடம் சரணடைபவர்களுக்கு, மரணபயம் இல்லாது ஒழிகிறது. எனவே உயிர்பிரியும் தருணமும், இத்தகையோர்கள் மேன்மை பொருந்திய தெய்வத் திருவடியில் வாழும் பாக்கியத்தை அடைவதுடன் தெய்வத்துடனான நித்தியப் பேரின்பப் பெருவாழ்விலே, யாதொரு குறைவுமின்றி, நித்திய மகிழ்வுடன் கூடிய தெய்வீகப் பேரின்பப் பெருவாழ்விலே எப்போதும் நீடு வாழ்வர், என்பது வெள்ளிடைமலை.

## யானையின் அடக்கம்

கோயில் யானை ஒன்று நன்றாகக் குளித்துவிட்டு நெற்றியில் பட்டை தீட்டிக்கொண்டு சுத்தமாக வந்து கொண்டிருந்தது. ஒரு ஒடுக்கமான பாலத்தில் அது வரும்போது எதிரே சேற்றில் குளித்துவிட்டு ஒரு பன்றி, வாலை ஆட்டிக்கொண்டே வந்தது.யானை ஒரு ஓரத்தில் ஒதுங்கி நின்று அதற்கு வழிவிட்டது. அந்தப் பன்றி, எதிரே இருந்த இன்னொரு பன்றியிடம், "பார்த்தாயா, அந்த யானை என்னைக் கண்டு பயந்து விட்டது!" என்று சொல்லிச் சிரித்தது.

அந்த யானையைப் பார்த்து இன்னொரு யானை, "அப்படியா, நீ பயந்து விட்டாயா?" என்று கேட்டது. அதற்குக் கோவில் யானை கீழ்க்கண்டவாறு பதில் சொன்னது. "நான் தவறி இடறிவிட்டால் பன்றி நசுங்கிவிடும். மேலும் நான் சுத்தமாக இருக்கிறேன். பன்றியின் சேறு என்மேல் விழுந்து நானும் அசுத்தமாகி விடுவேன். இந்தக் காரணங்களால், நான் ஒதுங்கிக்கொண்டேன்".

*நீதி:* **தன் பலம், பலவீனம் தெரிந்தவர்கள் அடக்கத்தில் சிறந்தவர்களாக இருப்பார்கள்.**

*கோபம் அன்பை அழிக்கிறது, செருக்கு அடக்கத்தை அழிக்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தக் கிருஷ்ணனின் அற்புத லீலைகள்

(தொடர்ச்சி...

– **திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்** அவர்கள் –

## வெண்ணெய் திருட்டு

யசோதை வெண்ணெய் கடையத் தொடங்கினாள். தனக்கு வெண்ணெய் தரவேண்டுமெனக் கண்ணன் அடம்பிடித்தான். கொஞ்சம் வெண்ணெயை யசோதை கொடுத்ததும், பக்கத்துவீட்டுக்குச் சென்று, வெண்ணெயுடனே கண்ணன் அற்புதமாக ஆடத் தொடங்கினான். வீட்டிலுள்ளோர் கைகொட்டி ரசித்து மகிழ்ந்தார்கள். கோபி ஓடிச்சென்று பந்துபோல வெண்ணிற வெண்ணெயை அன்போடு கொடுத்தாள். அழகாகச் சிரித்து, அவளது கழுத்தைக் கட்டிக் கொண்டு பவள இதழ்களிலே அமுத முத்தம் தந்தான் குழந்தைக் கண்ணன். இது குழந்தை முத்தமாய் இல்லை! பின் ஒயிலாக பின்னழகு துலங்க பார்த்த வர்கள் மயங்க நடந்தான். இப்போது வெண்ணெய்க் காடிய பிள்ளையை ஆழ்வார்களும், மகான்களும் வர்ணிக்கிறார்கள்.



பன்னிருநாமன் கண்ணன் நற்குணங்கள் பன்னிரண்டிற்கும் உறைவிடமானவன். ஆழ்வார்கள், ஆச்சார்யர்கள் இக் குணநலன்களை தம் பாசுரங் கள், ஸ்தோத்திரங்களால் கண்டு வியந்து போற்றி அனுபவித்துள்ளனர். ஸ்ரீ ஸ்வாமி தேசிகர் "லீலை களில் வல்லவன்!" எனப் புகழ்கிறார். அவன் பரமன் அன்றோ. அனைத்தும் அவன் உடைமை எனும் போது கண்ணன் ஏன் வெண்ணெய் திருட வேண்டும். சரீரம் தந்து, அனுபவிக்க எல்லாம் தந்த இறைவனை மனிதன் மறந்துவிடுகிறானே! அதனால் துன்பம் துயரம் போன்ற மூலிகை களால் மனதைப் பாற்கடலாகத் தூயதாக்கி கடைய வேண்டும். நமது கெட்ட குணங்கள் அசுரர்கள். நல்ல குணங்கள் தேவர்கள். அவன் நாமாம்ருதம் எனும் மத்தாலே நினைவெனும் கடைதலாகிய செயலைச் செய்ய நம் ஆத்மாவே இங்கு வெண்ணெயாகும். இப்படி அதிகப் பிரயாசத்தாலே வந்த வெண்ணெயை வந்து எடுத்துக்கொள்வான். தன்னையே வேண்டி நிற்போருக்கு தானே வந்தமைவான். தயிர் வெண்ணெய் ஆகியவற்றைத் திருடிச் செல்லும்போது, அவனது பிஞ்சுப் பாதங்களில் ஒட்டிக்கொண்டிருக்கும் வெண்ணெயும்

*வாழ்க்கைக்குத் துணையாக இருந்து திருத்த வல்லவர்களே நண்பர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயிரும் பாதச் சுவடுகளாக தரையில் பதியுமாம். இந்தச் சுவடுகளே அவன் ஒளிந்திருக்கும் இடத்தைக் கோபியருக்குக் காட்டிக் கொடுத்துவிடுமாம். கண்ணனின் இந்த விளையாடலை நினைவுபடுத்துமுகமாகவும், அவன் நம் வீட்டிற்கு வரவேண்டும் என்பதற்காகவும் தான் கோகுலாஷ்டமி தினத்தில் கண்ணன் பாதம் பதிக்கிறோம்.

கண்ணன் குழந்தையாக இருந்தபோது யசோதை ஒருநாள் நாரதரைச் சந்தித்தாள். அப்போது, "என் இல்லத்தில் எவ்வளவோ தின்பண்டங்களும், பால், தயிர், வெண்ணெய் நிரம்பி வழிந்திருக்கிறது. அதையெல்லாம் விட்டுவிட்டு கிருஷ்ணன் தன் நண்பர்களுடன் கோபிகைகளின் இல்லங்களுக்குச் சென்று வெண்ணெய் திருடி உண்கிறானே. எனக்கு அவமானமல்லவா!" என்று சொல்லிக் கலங்கினாள். அதற்கு நாரதர் கோபிகாஸ்திரீகளை சாதாரணமாக எண்ணவேண்டாம். பல ஆயிரம் வருடங்களாக தவம் செய்த மகரிஷிகள், தாங்கள் படைக்கும் உணவை உண்ண வேண்டும் என்று வரம் கேட்டார்கள். அதற்குப் பெருமான் "இந்தப் பிறவியில் உங்களுக்கு இந்தப் பாக்கியம் இல்லை. நான் கிருஷ்ணனாகப் பிறக்கும்போது, நீங்கள் கோபிகாஸ்திரீகளாகப் பிறப்பீர்கள். அப்போது உங்கள் இல்லத்தில் உள்ள உணவை நானே விரும்பிவந்து உண்ணுவேன்" என வரம் கொடுத்தார். அந்த வரத்தின்படி அவர்கள் வீட்டில் தேடிச்சென்று உண்ணுகிறார் என்றார் நாரதர். மத்தால் அடித்து, உறியை உடைத்து வெண்ணெய் உண்டதால் இன்றும் கிருஷ்ண ஜெயந்தியன்று உறியடி உற்சவத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள்.

ஒருநாள் கர்கர் நந்தகோபர் வீட்டிற்கு வந்தார். முனிவர்தானே சமைத்துச் சாப்பிட விரும்பி பாயாசம் தயார் செய்தார். அதில் துளசி இலை ஒன்றைப் போட்டார். இந்த நைவேத்தியத்தைச் ஸ்ரீமந் நாராயணனுக்குச் சமர்ப்பிக்க எண்ணி கண்ணை மூடித் தியானித்தார். அப்போது எங்கிருந்தோ ஓடிவந்த கண்ணன் ஓட்டத்தை நிறுத்தி பூனைபோல நடந்து, பாயாசத்தைச் சட்டென்று எடுத்து மடக்மடக்கென்று பருக ஆரம்பித்தான். முனிவர் அப்போது கண் விழித்தார். கண்ணனின் செயல் கண்டு வருந்தி நைவேத்தியம் செய்வதற்குள் பாயாசத்தைப் பருகிவிட்டானே! என்று யசோதையிடம் புலம்பினார். கண்ணனை அழைத்து யசோதை கண்டித்தாள். அவனா பயப்படுவான்?

"அம்மா! கோபிக்காதேம்மா, இவர் தான் என்னை அழைத்தார். அதனால் வந்து பாயாசம் குடித்தேன்" என்றான் மழலை கொஞ்சிட. "அடப்பாவி, நான் எப்போது இவனைக் கூப்பிட்டேன்" என்று முனிவர் திகைத்தார். பிறகு யமுனை நதிக்குச் சென்று நீராடி வந்து, மீண்டும் பாயாசம் தயாரித்தார் முனிவர். "மாதவா, கோவிந்தா" என்று கூறி அதை நாராயணர்க்கு அர்ப்பணித்தார். தூங்கிக்கொண்டிருந்த கண்ணன் சட்டென்று கண் விழித்தான். எவருக்கும் தெரியாமல் வந்து பாயாசத்தைப் பருகினான். இதைக் கண்ட முனிவர் பெரிதும் வருந்தினார். அப்போது நான்கு திருக்கரங்களுடன் ஸ்ரீமந் நாராயணனாக முனிவருக்கு காட்சி தந்தருளினான் கண்ணன். மகிழ்ச்சியில் திக்குமுக்காடிய முனிவர் கண்ணனைத் தூக்கி மடியில் அமர்த்திக்கொண்டு மீதிப் பாயாசத்தையும் பருகச் செய்தார். அங்கே வந்த யசோதையிடம் "அம்மா! ஸ்ரீமந் நாராயணனே உனக்கு மகனாக அவதரித்துள்ளார்" என்றார் முனிவர். ஆனால் மகாவிஷ்ணுவாகிய தன் திருவுருவை மாயையால் மறைத்துவிட்டான் கண்ணன். யசோதைக்கு குழந்தையாகவே தென்பட்டான் அவன்.

*ஆசைகள் வளர வளர தேவைகளும் வளர்ந்துகொண்டே போகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகுலவாசிகள் அனைவரும் கண்ணன் குழந்தையாக தொட்டிலில் கிடக்கும் அழகைக் கண்டு மெய்மறந்தனர். அவ்வளவு அழகோ அழகு. நந்தகோபரின் வாரிசாக வந்துசேர்ந்த அந்தக் குழந்தையைக் காண தயிர்க்காரி ஒருத்தியும் வந்தாள். தொட்டிலில் படுத்திருக்கும் மாயக் கிருஷ்ணனின் அழகைக் கண்டதும் தன்னையே மறந்தாள். மெய் மறந்த நிலையில் வீதிக்கு வந்தவள், "பால், தயிர்" என்பதற்கு பதிலாக கோவிந்தா, தாமோதரா, மாதவா என்று சத்தமாகக் கூவினாள் என்று லீலாசுகர் சிலாகிக்கிறார்.

குழந்தை கண்ணன் மூன்றுமாதக் குழந்தையாக இருந்தபோது தடால்னு என்றொரு சத்தம். "ஐயோ மோசம் போயிட்டேனே கண்ணா!" என்று கதறியபடி ஓடி வந்தாள் யசோதா. தொட்டிலில் கண்ணைக் கவரும் பஞ்சணையில் தூங்கிக்கிட்டிருந்தான் கண்ணன். அவனா தூங்குவான்? கண்ணை மூடியாரையோ எதிர்பார்க்கிறமாதிரி படுத்திருந்தான். ஸ்வாமியோட அனுக்கிரகம் கிடைக்கிறதற்கு எத்தனை புண்ணியம் செய்திருக்கவேண்டும். உத்கசன் என்ற தவசீலன், லோமாட்சரிசியின் ஆசியின்படி சகடாசுரனாக வண்டிச்சட்டத்திலே வந்து யார் கண்ணிலேயும் படாமலிருந்தான். மூன்றுமாதக் குழந்தையான கண்ணன் திருவடி தன் தலையிலே படாதா என்ற தவிப்பிலே இருந்தான். கண்ணன் கண்விழிச்சார். காலை நீட்டி உதைத்தார். வண்டிச் சட்டம் உடைந்து தடால் என்று சத்தம் கேட்டது. உத்கசனுடைய ஆசை நிறைவேறியது. ஸ்வாமி அவனுக்கு அனுக்கிரகம் செய்தார். இந்தச் சத்தத்தைக் கேட்ட யசோதை பதறியடிச்சு ஓடிவந்து குழந்தையை அள்ளி நெஞ்சோடு நெஞ்சாக அணைத்தாள்.

கள்ளக் குறும்பன் லீலைகள் கணக்கிலடங்குமோ
கொள்ளை கொள்ளும் பேரழகால் என்மனதைத் திருடினான்
உள்ளமதில் உத்தமனைச் சிறை வைத்தேனே
மெள்ள எங்கு ஓடினானோ மாயக்காரச் சிறுவன். (தொடரும்...

## அழிவுக்குக் காரணம்

ஒரு தவளையைப் பிடித்து தண்ணீரில் போட்டுக் கொதிக்க வையுங்கள். தண்ணீரின் வெப்பம் அதிகரிக்கும்போது, தவளை தன் உடலை அந்த வெப்பநிலைக்கு ஏற்ப மாற்றிக் கொண்டே வரும். வெப்பம் ஏற ஏற தவளையும் அந்த வெப்பநிலைக்கு ஏற்ப தன் உடலை மாற்றிக்கொள்ளும். தண்ணீர் கொதிநிலை அடையும்போது, வெப்பத்தைத் தாங்க முடியாமல் தவளை பாத்திரத்தில் இருந்து வெளியே குதிக்க முயற்சி செய்யும். ஆனால் எவ்வளவு முயற்சி செய்தாலும் தவளையால் வெளியேற முடியாது. ஏனென்றால் வெப்பத்துக்கேற்ப தன் உடலை மாற்றிக்கொண்டே வந்ததால் அது வலுவிழந்து போய் இருக்கும். சிறிது நேரத்தில் அந்த தவளை இறந்துவிடும். எது அந்தத் தவளையைக் கொன்றது...?

பெரும்பாலானோர் கொதிக்கும் நீர்தான் அந்தத் தவளையைக் கொன்றது என்று சொல்வீர்கள். ஆனால், உண்மை என்னவென்றால், "எப்போது தப்பித்து வெளியேற வேண்டும்" என்று சரியாக முடிவெடுக்காத அந்தத் தவளையின் இயலாமைதான் அதைக் கொன்றது. நாமும் அப்படித்தான் எல்லோரிடமும் சூழ்நிலைக்கேற்ப அனுசரித்துப் போகிறோம். ஆனால், நாம் எப்போது அனுசரித்துப் போகவேண்டும், எப்போது எதிர்கொள்ள வேண்டும் என்பதைத் தெரிந்து வைத்திருக்கவேண்டும். மனரீதியாக, உடல்ரீதியாக, பண ரீதியாக மற்றவர்கள் நம்மை நசுக்க ஆரம்பிக்கும்போது, நாமும் சுதாகரிக்காமல் போனால் மீண்டும் அதையே தொடர்ச்சியாகச் செய்ய ஆரம்பிப்பார்கள். உடலில் வலிமை இருக்கும்போதே, அவர்களிடமிருந்து தப்பித்து விடுதல் நன்று. நாம் அனுமதிக்காமல் நம்மை அழிக்க எவராலும் முடியாது.

*இறைவனிடம் அன்பு வளர்ந்தால் உலகப் பற்றுக்கள் தேயத் தொடங்கிவிடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகனும் மூட்டையும்

– திரு பொ. சின்னையா அவர்கள் –

பொய்யாமொழிப் புலவர் தொண்டை நாட்டில் பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றியவர். வயிரபுரம் என்ற கிராமத்தில் கல்வி கற்றவர். அற்புதமாய்க் கவிபாடும் ஆற்றல்மிக்க இவர் "தஞ்சை வாணன்கோவை" என்னும் நூலை இயற்றியவர். சிவன்மீது பேரீடுபாடு கொண்டவர். ஒரு முறை இவரிடம் சிலர் வந்து முருகப்பெருமானைப் பற்றி பாடல் இயற்றித் தரும்படி வேண்டினர். ஆனால் சிவபெருமானை மட்டும் பாடும் இயல்புகொண்ட அவருக்கு முருகப்பெருமானைப்பற்றிப் பாட விருப்பமில்லை. எனவே அவர்களைப் பார்த்து "கோழியையும் பாடி குஞ்சையும் பாடுவேனோ?" என்று கேட்டு அவர்களை அனுப்பிவிட்டார்.



சிலநாட்கள் சென்ற பின்னர் இவர் மதுரைக்குச் செல்லவிரும்பி புறப்பட்டு வழியில் திருச்சிராப்பள்ளியில் தங்கித் தாயுமானவரையும் தரிசித்து ஒரு காட்டின் வழியாக மதுரைக்குப் புறப்பட்டார்.

அவர் சென்றுகொண்டிருந்த அந்தக் காடு கற்களும் முட்களும் நிறைந்ததாய் வெப்பம் மிக்க அனல் கொளுத்தும் தன்மையுடையதாகவும் காணப்பட்டது. மிகுந்த சிரமத்துடன் வெய்யிலில் சென்று கொண்டிருந்தார்.

அப்பொழுது முருகப் பெருமான் ஒரு கொடிய வேடன் வடிவில் அங்கு வந்து அவர்முன் தோன்றி "நீ இக் காட்டின் வழியில் செல்லுதல் கூடாது" என்று கூறித் தடுத்தார். புலவர் தான் கள்வனிடம் சிக்கிக்கொண்டுவிட்டேன் எனக் கருதி அச்சம் கொண்டு நடுநடுங்கி நின்றார். அவர் நடுக்கத்தைக் கண்ட வேடனாக வந்த முருகப்பெருமான் "நீ யார்?" என்று கேட்டார். உடனே நான் ஒரு புலவன் என் பெயர் பொய்யாமொழி எனக் கூறினார். உடனே முருகன் புன்சிரிப்புடன், "நீர் புலவரோ? உனக்குக் கவி பாடத் தெரியுமா?" என்று கேட்டார். அதற்குப் புலவர் தெரியும் என்று பதில் கூற முருகப்பெருமான் "என்மீது சரம் போக்காகப் பாடல் ஒன்றைப் பாடுக" என்றார்.

*அறிவு, ஒழுக்கம் முதலியவற்றைத் தேடி ஓயாமல் மக்கள் உழைக்க வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர் யோசித்தார் பிறகு உன் பெயர் என்ன என்று கேட்டார். இந்தக் கள்வனிடமிருந்து கவிபாடியாவது தப்பிக்கலாம் என்று கருதினார் போலும்.

முன் ஒருமுறை முருகனைப் பாடமாட்டேன் என்று கூறி மறுத்ததை எண்ணிய முருகனாக வந்த வேடன் என் பெயர் "முட்டை" என்றார். உடனே புலவரும் முட்டை என்ற சொல் வெண்பாவில் அமையும்படி பாடல் ஒன்றைப் பாடினார்.

அப்பாடலைக் கேட்ட முருகவேள் உம்முடைய பாட்டில் பொருள் குற்றம் உள்ளது. புலவராய் இருப்பவர் பொருட்குற்றமுடைய பாடலைப் பாடலாமோ? என்று கேட்டார். பொய்யா மொழிப் புலவர் திகைப்படைந்தார். காட்டில் வாழும் வேடன் பாடலின் பொருளை அறிவானோ? வழிப்பறி செய்யும் திருடனாய் வாழும் இவன் என் பாடலில் குற்றம் காணமுடியுமா? என்று எண்ணி திகைப்படைந்தார்.

என் பாடலில் என்ன குற்றம் என்று வியப்புடன் கேட்டார் புலவர். எங்கே பாடலை ஒருமுறை பாடுங்கள். அத்துடன் அதன் பொருளையும் கூறுங்கள் என்றார் முருகன். புலவர் பின்வரும் பாடலைப் பாடி தன் பொருளையும் விளக்கினார்.

பொன்போலும் கள்ளிப் பொறி பறக்கும் கானலிலே
என் பேதை செல்லற் கியந்தனளே - மின்போலும்
மாயவேள் முட்டைக்கு மாறாய தெய்வர்போம்
கானவேள் முட்டைக்கும் காடு.

மின்னலைப் போல ஒளிவீசும் சிறப்பான வேலாயுதத்தை உடைய முட்டை என்பவருக்கு எதிரிகள் செல்கின்ற வேல் முட்கள் மிகுந்திருக்கின்றதும் கால்களில் தைக்கக்கூடியதுமான காட்டில் கள்ளிச் செடியிலிருந்து பொன்போன்ற நிறமுடைய தீப்பொறிகள் பறந்து செல்கின்ற பாதை வழியே என்னுடைய மகள் தன் தலைவனுடன் செல்வதற்கு இணங்கினளே! என்ற பாடலைப் பாடினார்.

இதனைக் கேட்ட வேடுவ வடிவில் வந்த முருகன் பச்சைநிறமுடைய கள்ளிச் செடியே பற்றி எரிகின்றது என்றால் காய்ந்த முள் எவ்வாறு தீப்பற்றாமல் இருக்கமுடியும் என்றார். இச்செய்யுள் பொருள்குற்றம் உடையதன்றோ? என்று தொடர்ந்து கூறினார். புலவர் துணுக்குற்றார். உண்மைதான் இப்பாடல் குற்றமுடையதுதான் என்று எண்ணினார்.

அப்போது வேடராக வந்த முருகன் புலவரைப் பார்த்துப் பொய்யாமொழியாரே! உம்முடைய பெயரை அமைத்து நான் பாடட்டுமா? என்று கேட்டார். மிகுந்த வியப்புடன் புலவர் சரி என்றார். உடனே முருகன் பின்வரும் பாடலைப் பாடினார்.

விழுந்ததுளி அந்தரத்தே வேமென்றும் வீழின்
எழுந்துசுடர் சுடும் என்னேங்கிச் - செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தில் பெய்வளையும் சென்றனனே
பொய்யாமொழிப் பகைஞர் போல்

கடுமையான மேகங்கள் தம்மிடமிருந்து மழைத்துளியாக கீழே விழத்தொடங்க முற்படின் வானத்திலேயே வெப்பமடையும் என்றும் அப்படி மழைத்துளி விழுந்தாலும் கீழே உள்ள அனல் ஆனது மேலெழும்பி மேலே சென்று அனலுண்டாகுமென்றும் அச்சம் கொண்டு மழை பெய்யாத கொடுமையான கடலினையுடைய காட்டிலே வளையல் அணிந்த என் பெண் தன் கணவனுடன் போயினாள். இப்பாடலைக் கேட்டு புலவர் பெரிதும் வியப்படைந்தார்.

*நாட்டில் மழைவளம் சுருங்கினால் தான தர்மங்களும் சுருங்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடனாக உள்ளான். திருடன்போல் வழி மறித்து துன்பப்படுத்துகின்றான். எனது பாடலில் குற்றங்களைக் கூறியதுடன் நம் கருத்தை வைத்து அப்படியே சரியான பாடலையும் கூறியுள்ளான். திருடனுக்கு இத்தகைய புலமைத் தன்மை ஏது? என்று தயங்கி மருண்டு நின்றார்.

அவருடைய மருட்சியையும் தயக்கத்தையும் கண்ட முருகன் என்ன யோசிக்கிறீர்? முன்னொரு முறை கோழியையும் பாடி குஞ்சையும் பாடுவேனோ என்று சிலரிடம் கூறினீரே? இப்பொழுது குஞ்சை மட்டுமின்றி முட்டையையே பாடிவிட்டீர்களே! என்று சொன்னார்.

அவர் சிந்தனையைத் தெரிந்து கொண்ட முருகன் தன்வேடர் வடிவத்தை மறைத்து உண்மைத் தோற்றத்தைக் காட்டி நின்றார். புலவர் முருகனின் வடிவைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தார். பின்னர் அவரைக் கைகூப்பி வணங்கிப் பெருமானே! அறியாமல் பேசிவிட்டேன், என்னை மன்னித்தருள வேண்டும் என்று கூறிப் பணிவுடன் நின்றார்.

முருகப் பெருமான் சிரித்துக்கொண்டே அவருக்கு நல்லாசி கூறி அவரை அனுப்பி வைத்தார். பொய்யாமொழிப் புலவரும் மகிழ்வுடன் மதுரையை நோக்கிச் சென்றார். அது முதற் கொண்டு முருகப்பெருமானையும் வழிபடுகின்ற பக்தராக மாறினார்.

## சந்நிதி புகழ்பாடும் குறள்வெண்பாக்கள்

கருணை மழைபொழியும் கந்த னடியை
உருகி வணங்கவினை யறும்.

கூர்வேல் அழகன் கதியென்று நம்பினார்
சீர்பெற்று வாழ்வார் சிறந்து.

வண்ணக் குலதிலகன் வண்ணமயில் வாகனன்
எண்ண வருவானெம் மடிக்கு.

சந்நிதி வேலனை சொல்லிமகிழ் வார்க்கவன்
அன்பினதுண் மையுணர்த்து வான்.

உம்மீது சந்நிதியில் பாடி நிதம்வணங்கு
மெம்மை உமக்கடியா ராக்கு.

இருள்மயம் சேராது காப்பான் முருகன்
அருள்மிகு நெஞ்சுள்ள வரை.

ஆன்மீகத் தொண்டன் கலாநிதி ஸ்வாமிகளை
தேன்பொழிந் தின்புறப் பாடு.

-சீ. சாந்தநாதன்.

*பிரியமான வேலை எதுவும் கஷ்டமானதே அல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்



(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்

**81. அனைத்து நூற்பொருளும் ஐந்தெழுத்தின் பொருளேயாம்**

அருள் நூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின்
பொருள் நூல் தெரியப் புகின்.

**பொருள்:**

அருள் நூலாகிய ஆகமங்களும், அற நூலாகிய வேதங்களும், இவையல்லாத பிற நூல்களும் ஆகிய யாவும் திருவைந்தெழுத்தின் பொருளை விளக்கும் நூல்களேயாம்.

**சொற்பொருள்:**

அருள் நூலும்- அருள் நூல் ஆகிய ஆகமங்களும், ஆரணமும்- அறநூல் ஆகிய வேதமும், அல்லாதும்- இவ்விரு முதல் நூல் அல்லாத புராணம், இதிகாசம் முதலிய ஏனைய எல்லா நூல்களும், தெரியப் புகின்- ஆராய்ந்து பார்த்தால், ஐந்தின் பொருள் நூல்- திருவைந்தெழுத்தின் பொருளை விரித்துக் கூறும் நூல்களாகவே முடியும்.

**விளக்கம்:**

இறைவன் அருளிச் செய்தவை முதல் நூல்கள் எனப்படும். அவை வேதமும் ஆகமமும் ஆகும். அவற்றுள் வேதம் பொது நூல் என்று கொள்ளப்பெறும். ஆகமம் சிறப்பு நூல் என்று கூறப்படும்.

பொதுநூல் என்பது உண்மையை முற்றாக உணர்த்தாது ஓரளவாக உணர்த்துவது. உலக மாந்தர் உண்மையை ஓரளவே உணரவல்லவர். அவர் பொருட்டாகச் செய்யப்பட்டதே பொதுநூல்.

சிறப்பு நூல் உண்மையை முற்ற உணர்த்துவது. சத்தி நிபாதர் முற்ற உணர வல்லவர். அப் பக்குவர் பொருட்டாகச் செய்யப்பட்டதே சிறப்பு நூலாகும்.

பொது நூலின் நோக்கம், மக்களுக்கு அறம் முதலியவற்றை உணர்த்தி அவர்களை உலகியலில் நிறுத்துவது. இம்முறையில் அமைந்த பொது நூலாகிய வேதம் அறநூல் எனப்படுவதாயிற்று.

சிறப்பு நூலின் நோக்கம், உலகியலில் உவர்ப்புற்ற சத்தி நிபாதர்க்கு இறைவனது திருவருளைத் தெளிவித்து அவரை அருள்நெறியில் நிறுத்துவது. அம்முறையில் அமைந்த சிறப்பு நூலாகிய ஆகமம் அருள் நூல் எனப்படுவதாயிற்று.

*உறுதியின்றிச் செய்யப்படும் வழிபாடுகள் போலியாகவே முடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்செய்யுளில் ஆகமத்தை அருள் நூல் என்று குறிப்பிட்டமையால் ஆரணமாகிய வேதம் அறநூல் என்பதுதானே பெறப்படும்.

இம்முதல் நூல்களை அடியொற்றி எழுந்த வழி நூல், சார்பு நூல்களாயிருப்பவை. மிருதி, புராணம், இதிகாசம் என்பவை.

இந்த எல்லாவகை நூல்களின் கருத்தையும் ஆராய்ந்து பார்த்தால், அவையெல்லாம் திருவைந்தெழுத்தின் பொருளாகிய பதி பசு பாசங்களை விளக்கிக் கூறும் நூல்களாய் இருத்தல் புலனாகும்.

ஆசிரியர் உமாபதி சிவம் சிவப்பிரகாச நூலில்,

"பலகலை ஆகம வேதம் யாவையினும் கருத்துப்
பதி பசு பாசம் தெரித்தல்" எனக் கூறியுள்ளமை காணலாம்.

எனவே, எல்லா நூற்பொருள்களும் திருவைந்தெழுத்தினுள் அடங்கியுள்ளன என்பது இனிது விளங்கும். அவ்வம்மதத்தினர் தாம் கொண்டுள்ள முடிவைப் பல வகையாக விளக்காமல் சுருக்கமாக ஒரு தொடரில் அமைத்துக் கூறுவதுண்டு. அவ்வாறு சுருக்கமாகத் தொகுத்துக் கூறும் தொடர் "மகாவாக்கியம்" எனப்படும். வடமொழி வேதம் ஒவ்வொன்றிற்கும் மகா வாக்கியம் உண்டு. அவ்வாறே சிவ நெறிக் கொள்கையின் முடிவைத் தொகுத்துக் கூறும் மகா வாக்கியமாக விளங்குவது திருவைந்தெழுத்தாகும்.

திருவைந்தெழுத்து எல்லா நூற்பொருளும் திரண்டு கூடிய பெரு மொழியாய் இருப்பது என அதன் சிறப்பை இம் முதற் செய்யுளில் கூறினார் ஆசிரியர்.

### 82. ஐந்தெழுத்தில் நிற்கும் பொருள்கள்

இறை சத்தி பாசம் எழில் மாயை ஆவி
உற நிற்கும் ஓங்காரத்துள்

**பொருள்:**

ஓங்காரத்தின் பரிணாமம் ஆகிய ஐந்தெழுத்தில் இறையும், அதன் சத்தியும், தளையாகிய ஆணவமும், எழில்மிக்க மாயையும், ஆன்மாவும் என்பவை பொருளாகப் பொருந்தி நிற்கும்.

**சொற்பொருள்:**

(சி,வா,ய,ந,ம என்னும் ஐந்தெழுத்தில்) இறை- இறைவன், சத்தி- அவனது ஆற்றல், பாசம்- தளையாகிய ஆணவமலம், எழில் மாயை- எழில் மிக்க மாயை, ஆவி- உயிர் என்பவை, உற நிற்கும்- பொருளாகப் பொருந்தி நிற்கும், ஓங்காரத்துள்- ஓம் என்னும் பிரணவத்திலும் அவ்வாறேயாம்.

**விளக்கம்:**

"சிவாயநம" என்னும் ஐந்தெழுத்தில் அவ்வெழுத்துக்களின் பொருள்கள் இவை என்பதைப் புலப்படுத்துகிறார் ஆசிரியர்.

இவருக்குக் காலத்தால் முற்பட்டதாகிய உண்மை விளக்கம் என்னும் நூல்

"சிவன் அருள் ஆவி திரோதம் மலம் ஐந்தும்
அவன் எழுத்து அஞ்சின் அடைவாம்" எனக் கூறிற்று.

*உலகில் உள்ள எல்லா மதங்களுக்குமே மூலம் வேதம்தான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே சிகாரம் சிவன்; வகாரம் அருட்சத்தி; யகாரம் ஆன்மா; நகாரம் திரோதான சத்தி; மகாரம் ஆணவமலம் என்றதாயிற்று.

இவ்வாறு அந்நூல் சிவாய நம என்னும் ஐந்தெழுத்தில் அவ்வெழுத்துக்கள் நின்ற வரிசை முறையிலேயே அவற்றின் பொருளை வரிசைப்படுத்திக் கூறியுள்ளமை காணலாம்.

ஆயின் நம் ஆசிரியர் உமாபதிசிவம் அதுபோல வரிசை முறையில் பொருள் கூறவில்லை என்பது காணத்தக்கது. முன்னே உள்ள சிகார வகாரங்களின் பொருளை "இறைசத்தி" என வரிசையாகக் குறிப்பிட்டவர், அடுத்து அம்முறையை மாற்றி, அவ்வைந்தெழுத்தைப் பின்னிருந்து நோக்கிப் பொருள் கூறலுறுகிறார். பின்னிருந்து நோக்கினால் ம, ந,ய என வரும். அவற்றின் பொருளையே பாசம், எழில், மாயை, ஆவி எனக் குறிப்பிடுகிறார். எனவே மகாரம் பாசம்; நகாரம் மாயை; யகாரம் ஆன்மா என்றதாயிற்று.

இவ்வாறு ஆசிரியர் மாற்றி வைத்துப் பொருள் கூறக் காரணம் என்ன என்று கேட்கலாம். ஆசிரியர் அவ்வாறு கூறியதற்கு ஒரு நோக்கம் உண்டு. அடுத்த செய்யுளில் ஊன நடனமும், ஞான நடனமும் ஐந்தெழுத்தில் அமைந்திருப்பதைக் குறிப்பிடுகிறார்.

சி, வா என்பது ஞான நடனம்
ம, ந என்பது ஊன நடனம்
ய என்பது இவ்விரண்டிற்கும் நடுப்பட்டது.

இவ்வாறு அடுத்த செய்யுளில் கூறுவதற்கு ஏற்ப இம்முதற் செய்யுளில் பொருள்களை இறை, சத்தி, பாசம், எழில் மாயை, ஆவி என அமைத்துக் கொண்டார். இவ்வமைப்பை நோக்கினால், ஞான நடனம் எனப்பட்ட இறையையும் சத்தியையும் முதலில் கூறினார் என்பதும், அடுத்து ஊன நடனம் எனப்பட்ட பாசத்தையும் மாயையும் கூறினார் என்பதும், பின்னர் அவற்றின் இடைப்பட்டதாகிய உயிரைக் கூறினார் என்பதும் புலனாகும்.

சி, வா, ய, ந, ம என்பவற்றில் ஆசிரியர் கொண்ட இப்பொருளமைப்புக்கு நேரே இடமில்லை என்பது தெளிவு. ஆகவே, முதலில் நிற்கும் சி, வா என்பவற்றை அப்படியே முறை நிரல் நிறையாகக் கொண்டு இறையும் சத்தியும் எனப் பொருள் கூறினார். எஞ்சிய எழுத்துக்களை இறுதியில் நின்று எதிர் நிரல் நிறையாகக் கொண்டு ம, ந, ய என வைத்துப் பாசம், மாயை, ஆவி எனப் பொருள் கூறினார்.

எனவே அடுத்த செய்யுளின் நிலைக்கு ஏற்ப இச் செய்யுளில் பொருள்களை இறை, சத்தி, பாசம், மாயை. ஆவி எனக் கூறினாராயினும் சி, வா, ய, ந, ம என்பவற்றின் பொருள் முறையே இறை, சத்தி, ஆவி, மாயை, பாசம் என்பனவேயாம் என அறியலாம்.

திருவைந்தெழுத்தில் நகாரம் திரோதான சத்தியைக் குறிக்கும் என்பதே வழக்கு. மேலே காட்டிய உண்மை விளக்கச் செய்யுளும் அவ்வாறே குறித்தது காணலாம். ஆயின் நம் ஆசிரியர் நகாரத்தின் பொருள் மாயை எனக் கூறியிருப்பது நோக்குதற்குரியது. இதில் மாறுபாடு ஏதும் இல்லை. மாயை கன்மங்கள் திரோதான சத்திக்குக் கருவியாய் அமைதலின், திரோதான சத்தியைக் கூறவே மாயை கன்மங்களையும் கூறியதாகக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறே மாயையைக் கூறவே, அதனைக் கூட்டுவிக்கின்ற திரோதான சத்தியையும் கூறியதாகக் கொள்ளுதல் வேண்டும்.

ஆசிரியர் மகாரத்திற்குப் பாசம் எனப் பொருள் கூறினாராயினும், பாசங்களுள் முதலாவதாகிய ஆணவ மலத்தையே தலைமை பற்றி இங்கு கொள்ளுதல் வேண்டும்.

(தொடரும்...

*மனத்தூய்மை இல்லாமல் ஒரு காரியத்தையும் சாதிக்க முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்றுப்பெற்ற தாயாரைப் போற்றுவோம்

– **திரு முருகவே பரமநாதன்** அவர்கள் –

திரை இசைப் பாடல்களிலே தமிழ்ச் சமுதாயம் தோய்ந்து நிற்கும் காலகட்டத்தில் நாம் வாழ்கிறோம். நேயர் விருப்பம், பாட்டுக்குப் பாட்டு, பொன்மாலைப் பொழுது, பட்டிமன்றம், அரட்டை அரங்கம் எல்லாமே திரைக்கவிதைதான். தென்னகச் சொற்பெருக்காளரும் அதையே பெரிதும் எடுத்தாள்வர். இலக்கிய அந்தஸ்து உடையன அப்பாடல்கள் எனக் கருதும் காலமிது. பாடல்கள் மக்களைக் காந்தமாய்க் கவர்கின்றன. நம் பண்டைய இலக்கியங்கள் பீரோவிற் தூங்குகின்றன. ஒரு சிலர் தட்டிப் பார்ப்பர். அவை வாழும் இலக்கியங்கள், வாழ்வளிக்கும் இலக்கணங்கள். நெஞ்சைத் திருத்தும் பொருண்மை நிறைந்தன. காலத்தையும் கடந்து நிற்பன. எனினும் திரையிசைப் பாடல்களைத் தள்ளிவிட முடியாது. வானொலிகள், தொலைக்காட்சிகள் போன்ற ஊடகங்களைப் பயன்படுத்துவோர் பலர். அவைமூலம் சுவைஞர்கள் இவற்றை அனுபவிப்பர், விமர்சனமுஞ் செய்வர். இவற்றிலே விரும்பிய பாடலை நேயர் கேட்கலாம். இந்த அலை வரிசையில் அவரவர் விருப்பங்கள் வானலையில் ஒலிபரப்பப்படும். தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும். இவ்வரிசையில் அன்னையின் பெருமை, பொருண்மை பேசும் பல பாடல்களை நேயர்கள் விரும்பிக் கேட்பர். நாமெல்லாம் அதை இரசிப்போம். அனுபவிப்போம். பல பாடல்கள் நம் நெஞ்சோடு பேசும். ஒரு பாடலின் வரிகள் இவை.

அன்னையைப் போலொரு தெய்வமில்லை - அவள்
அடிதொழ மறுப்பவர் மனிதரில்லை மண்ணில் மனிதரில்லை
துன்பமும் துயரமும் ஏற்றுக் கொண்டு
சுகம் பெற வைத்திடும் கருணை வெள்ளம்......
....................................

பாடலைப் போற்றும் அளவுக்கு அம்மா போற்றப்படுவதாய் இல்லை. எனினும் ஆதி முதல் இத்தேதி வரைக்கும் பக்தி இலக்கியங்களிலும், அகப் பொருட்துறையிலும் நீதி நூற்களிலும் அம்மாவின் பெருமை அழுத்தந்திருத்தமாய் பொறிக்கப்பட்டுள்ளமை சிந்திக்கத் தக்கது. ஒளவையார் பாடியதை மாற்றி .......... பின்னடிக் கிடைஞ்சல் என வாய்கூசாமற் பேசுகிறார்கள். இந்த அமைப்பு இன்று நேற்றல்ல பட்டினத்தார் காலத்திலேயே இருந்ததென்பதை அவரே பாடியுள்ளார்.

ஓயாமற் பொய்சொல்வர் நல்லோரை நிந்திப்பர் உற்றுப்பெற்ற
தாயாரை வைவர் சதிஆயிரஞ் செய்வர் சாத்திரங்கள்
ஆயார் பிறர்க்குப காரஞ்செய் யார்தமை அண்டினர்க்கு ஒன்று
ஈயார் இருந்தென்ன போயென்ன காண்கச்சி ஏகம்பனே

பட்டினத்துப் பிள்ளையார் பாடல் 19.

*இப்பாடலின் பொருள்:*

திருக்காஞ்சியில் எழுந்தருளியுள்ள ஏகாம்பர நாதனே! ஓயாமல் பொய் பேசுவார்கள். நல்லவர்களைக் குறை கூறுவார்கள், தவஞ்செய்து பெற்ற தாயாரைத் திட்டுவார்கள்.

*தந்தை பிள்ளைக்கு நல்கத்தக்கது கல்விச் செல்வமே ஆகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஞ்சனைகள் பல செய்வார்கள். ஞான நூல்களை ஆராய்ச்சி செய்யமாட்டார்கள். மற்றவர்கட்கு உபகாரஞ் செய்யமாட்டார்கள், தங்களை அடைந்தவர்கட்கு ஒன்றுங் கொடுக்க மாட்டார்கள். இவர்கள் இவ்வுலகில் இருந்தாலென்ன போனாலென்ன?

விழுமியம் பூத்துக் குலுங்கும் அன்னையின் பெருமை, மனிதத்தில் மட்டுமன்றி, பிற சீவராசிகளிலும் நிறையக் காணலாம். மனிதத் தாய் சேய் உறவு, கருவிற் கொப்பூழொடும், முலைப்பாலொடும் தொடர்புடையது. இ∴து வாத்ஸல்ய உறவு எனப் பெரிதும் பேசப்படுகிறது. பாலுண்ணிகள் (மிருகங்கள்), பறவைகளைப் பார்த்தாற் புரியும். பசுவும் கன்றும், காகமும் குஞ்சும், சிட்டும் பார்ப்பும் இதற்கு உதாரணம். பார்ப்பு- குஞ்சு. இந்த இணைப்பு மனிதம் பேணும் மகத்துவமான, பக்குவம், பண்பு, பேரப்பிள்ளை, பூட்டப்பிள்ளை, அயலார் பிள்ளை, அக்கா தங்கை பிள்ளையென்று பாசம், பட்சம் படரும். ஒரு சிலர் பெற்றவளைப் பேணத் தவறலாம். பலர் தந்தை தாயைப் பேணுவர். கலிகாலம் சற்று மாற்றம் காணுவதுபோற் தெரிகிறது. ஆலமரமும் விழுதும் போன்றதே பெற்றோர் பிள்ளைகள் நிலை. குழந்தைகள் பெற்றோரிற் தங்கி வாழ்ந்தார்கள், பெற்றோர் முதியோரானாற் பிள்ளைகள் ஆலம் விழுதுபோல அவர்களைத் தாங்கி வாழவேண்டும்.

பெற்று, வளர்த்து பேரிட்டு, துன்பமும் துயரமும் ஏற்றுக்கொண்டு எம்மைச் சுகம் பெற வைக்கும் கருணை வெள்ளத்தைப் பட்டினத்தார் தன் தாயின் இறுதிக் கிரியை செய்யும் வேளையில் போற்றி மதித்தார்.

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையல் என்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாள்

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
அந்தி பகலாய்ச் சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார்

நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த் தெடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண் டென்னைக் காப்பாற்றுந் தாய்

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலுந் தோண்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகில் இட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந்தாய்

வட்டில்- ஏணை. பட்டினத்தார் பாடல் (1924) பக் 143 44

இவ்வண்ணம் பெருமதிப்புக்குரிய தாயாக இறைவனைப் பாடினார். தாயன்பு யாவர் அன்பிலும் மேலானது. அது கனிந்த அன்பு, தீராத அன்பு, ஆற்றல் மிக்க அன்பு, மாணிக்க வாசகர், தாயைப்பற்றிப் பேசும் சில வாசகப் பொருளை இனிச் சிந்திப்போம்.

நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே.

சிவபுராணம் 60-61

*அறத்தை அடிப்படையாகக் கொண்ட எதுவும் சிதைவுபடாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாயா அன்பினை நாள்தொறுந் தழைப்பவர்
தாயே ஆகி வளர்த்தனை போற்றி
போற்றித் திரு அகவல் 86-87

தாயிற் பெரிதும் தயவுடைய தம்பெருமான்
திருப்பூவல்லி 3

நாயேனைத் தாய்போல் தலை யளித்திட்டு
திருவம்மானை 4.

தாயான தத்துவனைத் தானாய் உலகேழும் ஆயானை
திருவம்மானை 7

தாயிலாகிய இன்னருள் புரிந்த என்தலைவன்
திருச்சதகம் 39

தாதாய் மூவேழ் உலகுக்கும்
தாயே நாயேன் தனையாண்ட பேதாய்
புணர்ச்சிப்பத்து 9

தாயாய் முலையைத் தருவானே தாரா
தொழிந்தாற் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ
ஆனந்தமாலை 6

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பிடித்தபத்து

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி
பிடித்தபத்து 9

இந்தப் பால்நினைந்தூட்டும் தாயின் பெருமதி பெரிது. இத்தாயை மறக்கலாமா மனம் வருந்த வைக்கலாமா. மாமியைப் புண்ணாக்கும் மருமக்கள் நிறைந்த நம் சமுதாயம் இப்பாடலை நெஞ்சிற் பதிக்க வேண்டும். மனைவிவழி வாழும் மகனும் மனதிற் கொள்ளல் நன்று. பசிவரும் நேரமறிந்து பால் புகட்டுவது ஒன்று. இறைவனை நினைந்து பிள்ளை நல்லாய் வரவேண்டும் என ஊட்டுவது இன்னொன்று. தாயான இறைவனின் அன்பை தாயோடு ஒப்பீடு பண்ணி சாலப் பரிந்து எனப் பாடும் மாணிக்கரும் நமக்குத் தாய்தான். நாம் குடியிருந்த கோயில் அன்னைதானே. அதைத்தான் ஔவையார் தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை என்றார். அன்னைக்கு யாருமே ஈடாகமாட்டார். ஈன்றாளுமாய் எனக் கெந்தையுமாய் என்பது அப்பர் வாக்கு. தாயினும் நல்ல தலைவனென்றடியார் தம்மடி போற்றிசைப்பார்கள் என்கிறார் சம்பந்தர். தாயவளாய்த் தந்தையாகி என்பது சுந்தரர் கூற்று.

இறைவனைத் தாயாகவும், தாயினும் மேலானதாயாகவும், தாயனைய தந்தையாகவும் பக்தி இலக்கியங்கள் பேசுகின்றன. ஈடிணையற்ற தாயின் ஆளுமைகள் இறைவனிடமே

*பிறரிடம் குற்றம் காண்பதால் உன் மனம் மாசு அடையும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிகொண்டிருப்பது பேருண்மை. இந்தத் தாய்மை பற்றியும், தாய்த் தத்துவம் பற்றியும் வள்ளலார் பேசும் பாணியையும் நாம் மனத்திற் பதித்தல் இன்னோர்படி தாய்- சேய் உறவை வலுப்படுத்தும், வளமும்படுத்தும்.

காய்எலாம் கனிஎனக் கனிவிக்கும் ஒருபெருங்
கருணைஅமு தேஎனக்குக்
கண்கண்ட தெய்வமே கலிகண்ட அற்புதக்
காட்சியே கனகமலையே
தாய் எலாம் அனைய என் தந்தையே ஒருதனித்
தலைவனே.........

காய்போல் அமைந்த மனக் கடினத்தையே இறைவன் கனிபோல மெதுவாக்குகிறார். மென்மனம் எவ்வளவு மேலானது. வன்மனம், கன்மனமும் ஆக மனித மனம் இருந்தால் மனித நேயம், பாசம், பட்சமே அற்றுப்போகிறது. அன்பகத்தில் இல்வாழ்க்கையை வள்ளுவர் அன்புடைமை அதிகாரத்தில் விளக்குகிறார்.

அன்பகத் தில்லா உயிர்வாக்கை வன்பாற்கண்
வற்றல் மரந் தளிர்த் தற்று

திருக்குறள் 78.

வலிமையான நிலத்திலே ஈரம் இருக்காது. ஈரம் இருந்தாற்றான் மரம் வாழும். வரண்ட பாலை நிலத்தில் மரம் ஈரப் பச்சையாய் இருக்காது. எனவே தளிர்க்க வாய்ப்பில்லை. (பட்ட மரம் தளிர்க்காது) இதேபோல இல்லறம் செழிக்க, இல்லறம் என்ன துறவறத்துக்கும் அன்புதான் முக்கியம். இந்த மன உருக்கத்தை நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்துருக என அருணகிரியார் பாடுகிறார். இதை மாணிக்கவாசகரும் குறிப்பிட்டுள்ளார். காயைப் போன்ற மனத்தை கனியாக்க வல்லபுலவன் இறைவனெனக் காட்டும் வள்ளலார். தந்தையாய் அமைந்த இறைவனின் இனிமையான அன்பைத் தந்தையில் வைத்துப் பேசும்போது தாயின் சிறந்த அன்போடு ஒப்பீடு செய்கிறார். அதுதாயெலாம் அனைய தந்தை என்ற தொடராற் தெளிவாகிறது. பொறுமைக்குத் தாயைவிட ஒருவருமே இல்லை. பிள்ளைகள் பிழைவிட்டாலும், எதிர்த்தாலும் குற்றம் செய்தாலும் மனம் புண்பட நடப்பினும் அவள் சகிப்புத் தன்மையோடு நடந்து பாசமும் பரிவும் காட்டுவாள். இரும்பொறை என்ற தொடரால் இதை விளக்கினார் கம்பர். சம்பந்தரும் தாயினும் நல்ல தலைவன் என்று கோணேஸ்வரப் பெருமானைப் பாடுகின்றார். திருமுறை 3-125.5

இந்தத் தாய் எல்லாவற்றையும் பொறுப்பாள். தன் பிள்ளை கொலைஞனாக, சூதாடியாக, கட்குடியனாக இருப்பதை இம்மியளவும் விரும்பாள். அந்தப் பழியெலாம் அவளையே சாருமாதலின்

ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக்களி குறள் 923.

ஈன்றாள் முகத்தேயும் களி இன்னாது- யாது செய்யினும் உவக்கும் தாய் முன்பாயினும் கள்ளுண்டு களித்தல், இன்னாதாம், மற்றுச் சான்றோர் முகத்து என்- ஆனபின், குற்றம் யாதும் பொறாத சான்றோர் முன்பு களித்தல் அவர் விரும்பார். களி- கட்குடிப்பதால் வரும் மகிழ்ச்சி. இக்குறளிலும் தாயின் மேன்மை பேசப்படுகிறது.

இராமலிங்க சுவாமிகள் உலக அனுபவத்தை வைத்து இன்னொரு பாடலிலே பெற்றவளின் பெருங்குணங்களில் ஒன்றான பிள்ளைகளின் குணம், போக்கு, தரம் சூழ்நிலை,

*ஒன்றினைச் செய்யுமுன் அதன் பொருளை உணர்ந்திருக்க வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயசு அறிவு போன்றவற்றை மனதிற்கொண்டு அவர்களை வழிநடத்தும் பாரிய பொறுப்புணர்வை இறைவனோடு சேர்த்துப் பேசி- அவளைப் போல நீயும் என்னைப் பற்றி நன்கு அறிவாய். எனவே என்னைக் கோபிக்காமல்- அணைத்து ஆதரி என்று கேட்கிறார்.

பெற்றதம் பிள்ளைக்குணங்களை எல்லாம் பெற்றவள் அறிவளே அன்றி
மற்றவர் அறியார் என்னை ஈன்ற வள்ளலே மன்றிலே நடிக்கும்
கொற்றவ ஓரெண்குணத்தவ நீகுறிக்கொண்ட குணங்களை எல்லாம்
முற்று நன்கறிவாய் அறிந்து மென்தன்னை முனிவதென் முனிவு தீர்த்தருளே.

அடிப்பதும் அணைப்பதும் அன்னையின் கைதான். அடித்துவிட்டு மனம் நோபவளும் அவளேதான்.

தடித்த ஓர் மகனைத் தந்தை ஈண்டு அடித்தால்
தாயுடன் அணைப்பள்தாய் அடித்தால்
பிடித்தொரு தந்தை அணைப்பன்இங் கெனக்குப்
பேசிய தந்தையும் தாயும்
பொடித்திரு மேனி அம்பலத் தாடும்
புனிதநீ ஆதலால் என்னை
அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்
அம்மை அப்பாஇனி ஆற்றேன்

அருட்பா ஆறாந் திருமுறை 21

தாய் நாடு, தாய்மொழி, தாயகம், தாயத்தமிழ், பூமித்தாய், தாயோடு தொடர்புடைய பற்றான பிடிமானங்கள். தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா எனக் குழந்தைகட்கும் புத்தி புகட்டினார் பாரதியார்.

வலிமை சேர்ப்பது தாய் முலைப்பாலடா
தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே

பாரதியார்.

எனவே பெற்றவளையும், பெற்றவனையும் பேணுவோம். தாயாயும் தந்தையாயும் எம்மை வாழ வைக்கும் இறைவனையும் வணங்குவோம்.

தாய்க்கு மேலொரு கோயிலில்லை
தந்தைக்கு மேலோரு தெய்வம் இல்லை.

தாயோடு அறுசுவைபோம் தந்தையொடு கல்வி போம்.

-ஔவையார்.

**வானத்தில் இருக்கும் சந்திரன் தன்னிடமுள்ள இருளைப் போக்கிக்கொள்ள நினைக்காமல் உலகத்தின் இருளைப் போக்கவே கருணையோடு ஒளியை வழங்குகிறது. அதேபோல அருளாளர்கள் தங்களுக்குத் துயரம் இருந்தாலும் அதை மறந்து மற்ற உயிர்களின் துயரத்தைப் போக்கவே முற்படுகிறார்கள்.**

*நல்ல சகவாசம் இல்லாவிட்டால் அது தொல்லைகளை உண்டாக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

(தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| ச. தங்கமலர் | சுழிபுரம் | 5000. 00 |
| இ. சிவராஜாமூலம் S. பிரதீபா நினைவாக | கரவெட்டி | 10000. 00 |
| வி. இராஜேஸ்வரி | பருத்தித்துறை | 1000. 00 |
| திருமதி ஸ்ரீ. வேதநாயகி | கனடா | 10000. 00 |
| வே. சம்பந்தநாதன் G.S | புன்னாலைக்கட்டுவன் | 3000. 00 |
| சி. கணேஸ்வரி | கரவெட்டி | 5000. 00 |
| ம. கௌசலாதேவி | சண்டிலிப்பாய் | 5000. 00 |
| செ. தம்பையா | துன்னாலை | 1000. 00 |
| ஐ. குகேந்திரராணி | சுன்னாகம் | 1புட்டி அரிசி |
| K. சிவப்பிரியா | நவாலி | 1000. 00 |
| கந்தசாமி நினைவாக | ஆனைக்கோட்டை | 1000. 00 |
| நிமலன் சுந்தரமூர்த்தி | சாவகச்சேரி | 10000. 00 |
| ஜெயந்தன் சுந்தரமூர்த்தி | சாவகச்சேரி | 5000. 00 |
| இராசரத்தினம் குடும்பம் | கோப்பாய் | 2000. 00 |
| K. கஜேந்தினி | வவுனியா | 5500. 00 |
| கே. கெசிகேஸ்வரன் | கொக்குவில் | 1000. 00 |
| வி. அக்ஷனா, வி. அக்ஷியா | சண்டிலிப்பாய் | 5000. 00 |
| ந. உஷேனி | நல்லூர் | 2புட்டி அரிசி |
| ஆ.சு. செல்வரட்ணம் நினைவாக திருமதி சற்குணதேவி, திருமதி காவேரிமூலம் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| N. பரஞ்சோதி | கொழும்பு- 15 | 1000. 00 |
| வே. பேரம்பலம் | கொக்குவில் | 2000. 00 |
| வி. லவின் | காங்கேசந்துறை | 5000. 00 |
| பத்மலோஜினி இமானுவேல் | லண்டன் | 5000. 00 |
| க. பூரணானந்தன் | லண்டன் | 1000. 00 |
| த. விஜயராணி | புத்தூர் | 2000. 00 |
| ம. மோகனதாஸ் | கனடா | 2000. 00 |
| பா. கேதீஸ் | உரும்பராய் | 3000. 00 |
| சி. ஞானரத்தினம் | கனடா | 5000. 00 |
| செ. செல்வரட்ணம் | சுழிபுரம் | 1000. 00 |
| மணியம் இன்பெக்ஸ் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| கி. ஜெயரூபன் | டென்மார்க் | 20000. 00 |
| க. சிவராஜா | அவுஸ்திரேலியா | 7000. 00 |

*எதை நாம் அறியவில்லையோ அது நம்முடையது அல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நா. ஜெயபாஸ்கரன் குடும்பம் | | 10000. 00 |
| திரு முத்தையா குடும்பம் | சுழிபுரம் | 1000. 00 |
| T. கனாதீபன் | தெகிவளை | 15000. 00 |
| ம. கபினி | கொழும்பு | 5000. 00 |
| ஸ்ரீ. செந்தூரன் | டென்மார்க் | 2000. 00 |
| ச. குகனேஸ்வரன் | நீர்வேலி | 2000. 00 |
| K. தனுஷன் | சங்கானை | 2000. 00 |
| கு. அருள்குமரன் குடும்பம் | உடுப்பிட்டி | 7000. 00 |
| து. பாலசுப்பிரமணியம் | வதிரி | 15000. 00 |
| S. ராஜேஸ்வரி | அச்சுவேலி | 2000. 00 |
| வி. தயாநிதி | கிளிநொச்சி | 500. 00 |
| கா. தயாபரன் | கொழும்பு | 6மூடை அரிசி |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 2புட்டி பருப்பு |
| கா. தங்கமலர் | கிளிநொச்சி | 500. 00 |
| வி. சிவரட்ணம் | கனடா | 2000. 00 |
| வி. பேரிஞ்சா | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| கே. பாலகுமார் | அவுஸ்திரேலியா | 10000. 00 |
| S. மாதுமை | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| பு. ஜெகமணி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| அ. டொனாட் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| க. கணேசபிள்ளை | பத்தமேனி | 5000. 00 |
| ராசன் குடும்பம் இலந்தைக்காடு | வல்வெட்டி | 1மூடை அரிசி |
| சற்குணச் செல்வன்<br>அர்சுன்<br>அபிராம் } | நெதர்லன்ட் | 10000. 00 |
| கோ. கீர்த்திக் | மட்டக்களப்பு | 500. 00 |
| த. விக்னேஸ்வரன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| சி. நிதுஷன், சி. அனுஜன் | நோர்வே | 5000. 00 |
| மு. சுஸ்ருதன் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| செ. அம்பிகாரெத்தினம் | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| கமலா குணசிங்கம் | சாவகச்சேரி | 1000. 00 |
| வை. சரஸ்வதி | சாவகச்சேரி | 1000. 00 |
| ஞானாம்பிகை ராசதுரை | சாவகச்சேரி (கனடா) | 3000. 00 |
| கைலாயபிள்ளை கடம்பமூர்த்தி | கனடா | 5000. 00 |
| J. பிரபாகரன் ஆசிரியர்மூலம் சந்தியாப்பிள்ளை நினைவு | மட்டக்களப்பு | 5000. 00 |
| சிவகுருநாதன் ஜெயராம் இணுவில் (மலையக மகளிர் இல்ல மேம்பாட்டுக்காக) | | 25000. 00 |
| நடராசா, யோகரத்தினம் நினைவாக ந. ஸ்ரீதரன்மூலம் | யாழ்ப்பாணம் | 7000. 00 |

(தொடரும்...

*சாந்தமான மனதில் வலிமை புதுப்பிக்கப்படுகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புத அவதாரம்

– திரு வி.எஸ். ஸ்ரீ கந்தசாமி அவர்கள் –

அகிலாண்டேஸ்வரியாக உலகாளும் அன்னையின் அண்ணல் சத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈசானம் என ஐந்து முகங்களோடு அதோமுகமும் கூடிய பரமசிவனின் படைப்பே ஆறுமுகநாயகன்.

அன்பின் எல்லை விரிவடைய அறிவின் கூர்மை நேர்மையாக வாய்மையில் வாழ்க்கை வளமாக அஞ்ஞான இருள் நீக்கி மெய்ஞான ஒளியில் தனக்குள் இருக்கும் சக்தியை உணர்ந்து பத்தியோடு வணங்கி நல்ல புத்தியோடு வாழ உருக்கொண்டு வந்த உன்னத அவதாரம் முருக அவதாரம்.

சிவபெருமானுடைய ஐந்து திருமுகங்களும் உமை அம்மையின் திருமுகமும் ஒன்று சேர்ந்து ஆறுமுகங்களாயின என்பாருமுள்ளார்கள்.



இறைவனின் ஒவ்வொரு அவதாரங்களும் திருவிளையாடல்களும் அதன்மூலம் வெளிப்படும் உயர்ந்த சிந்தனைகளும் தெளிவும் வாழ்வில் துலங்க வைத்து வாழ்க்கைத் தத்துவத்தை விளங்க வைக்க வந்தது தான் வீரவேல் கைக்கொண்ட கந்தனின் கருணை மிக்க அவதாரம்.

ஓம் எனும் பிரணவத்தின் வடிவாக நின்று பரந்து விரிந்த உலகத்து உயிர்கள் சிறந்து உய்யும் பொருட்டு தர்மம் தங்கு தடையின்றி நிலைக்க வாழ்வு தழைக்க இன்பத்தில் மக்கள் மனம் மகிழ பத்தி நம்மை அழைக்க அருளாய் வந்த அழகன் முருகன் தொண்டைமானாற்றங்கரை அருகே செல்வச்சந்நிதி வேலனாக அமர்ந்து பவம் நீக்கி சுபம் தரும் சுப்பிரமணியப் பெருமான் ஆபத்தில் அருந்துணையாய் வரும் அற்புத நாயகன். சீலமிகு செந்திருவுருவங் கொண்டு ஞாலத்தில் ஞான வடிவழகனாக சந்நிதியான் ஆச்சிரமத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் அன்னதானக் கந்தன் பசியோடு வருவோர்க்கு ருசியாக உணவு தரும் ஒப்பிலா மாமணிக் கிரிவாசன்.

முருக அவதாரம் அவனி ஆனந்தம் பெற புவனம் புத்துணர்வில் திகழ நம் கவனம் கார்த்திகை மைந்தனிடம் களிப்புற அகம் விழிப்புற யுகபாரம் நீக்க வந்த அற்புத அவதாரம்.

தந்தைக்கு உபதேசம் செய்வதற்காக மட்டும் வந்த அவதாரம் அன்று. அது; தனக்கு தானே மகனாகிய தத்துவன்'' எனத் தணிகைப் புராணம் எழுத வைத்த தக்க அவதாரம். தனக்கு மகனாகப் பிறக்கவேண்டும் என அகில உலக நாயகனை ஆதங்கத்துடன்

*மனம் வாக்கு செயல்களிலும் ஒரே மாதிரியாக இயங்குபவரே நல்லோர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரம் கேட்க வைத்த பேரவதாரம். முன்பு ஒருநாள் பிரம்மாவின் அகத்தில் அவதரித்த சனத்குமாரர் எல்லாம் ஒன்றே; அதுவும் நன்றே என்பதில் ஒன்றிவிட்ட பிரம்மஞானி; சனத் குமாரர் சொன்னது நடக்கும் அவர் காணும் கனவுகள் பலிக்கும், இவ்வாறான அசாத்தியத் திறமைகளைச் சாத்தியமாக்கிக் கொண்ட சனக்குமாரர் சத்தியத்தை மட்டுமே பத்திய மாக்கி நித்திய வாழ்க்கையில் பேரானந்தம் கொண்டிருந்த வேளையில் தேவ, அசுர யுத்தம் அவரது எண்ணத்தில் சிறு வண்ணமாக வந்தோடி யது. அந்த யுத்தத்தில் தானே, தேவர் படை களுக்கு ஒரு முதன்மைத் தளபதியாக இருந்து வழிநடத்திச் சென்று அசுரர்களை அழிப்பதாகக் கனவுக் காட்சி கண்டார்.

தனக்குப் பின்னால் மாட்சிமை தந்து அகில உலக நாயகனின் அருமைப் பிள்ளை யாக உதித்து அறுபடைகளை ஆட்சிசெய் யப் போகிற முன்னோட்டம்தானோ இக்கனவு என்ற கண்ணோட்டம் கொண்டு நினையாமல் ஏதோ ஒரு நிகழ்விற்கு வந்த நிஜமோ என மேலும் சிந்தியாது தன் கருமமே கண்ணாயினார்.

அவர்தம் கனவை நனவாக்க தம் நினைவில் கொண்டு ஆணவம் கன்மம் மாயை யில் சிக்கி சரியை கிரியை யோகம் ஞானம் என்பதை மறந்து அற உணர்வுகளைத் துறந்து கலியுகத்தில் வாழுகின்ற மக்களைக் கரை யேற்ற கந்தன் வந்தான் என்பதை உணர்ந்த சனக்குமாரர் தன் மகனாகப் பிறந்தால் தான் இது நடக்கும் என்பதை அறிந்த சிவபெரு மான் தம் தேவி உமையம்மையுடன் சனத் குமாரரின் ஆச்சிரமத்திற்கே வந்தார்.

மங்கையொரு பாகம் கொண்ட கங்கை நாயகன் அங்கயற்கண்ணியுடன் வந் ததை அறிந்ததும் அதனை லட்சியம் செய் யாமல் எல்லாம் பிரம்மம்தான். பிரம்மத்தில் ஏற்றத் தாழ்வு இல்லை என்பதைச் சிந்தனை யில் கொண்டு தந்தையாகப் போகிறவரைச் சிந்தை செய்யாது நிஷ்டையில் ஆழ்ந்திருந் தார் நான்முகனின் நன்மகன்.

கண்டம் கறுத்த கழுத்துடையான் பொறுத்துப் பார்த்து வெறுத்துக் கோபம் கொண்டு சனத்குமாரா! பெரிய ஞானியான நீ எம்மை அவமதித்து லட்சியம் செய்யாது இருக்கின்றாய்; அவமதிப்பது சரிதானா? நான் சாபமிட்டால் நீ என்ன ஆவாய் தெரியுமா? என்றார். அதற்குச் சனத்குமாரர் இந்த உல கத்தில் தோன்றிய அனைத்து உயிர்களை யும் ஒரே வடிவாக அதுவும் இறைவடி வாகவே பார்க்கின்றேன். உங்கள் சாபம் என் ஆத்மாவை ஒன்றும் செய்யாது என்றார். இதன் உண்மையை உணர்ந்த சிவபெரு மான் இவர் மாபெரும் ஞானி என்று நினைந்து மட்டற்ற மகிழ்ச்சியடைந்தார்.

சனத்குமார உன் சக்தியையும் அளப் பரிய ஞானத்தையும் நான் ஆராதிக்கின்றேன், ஆகவே உனக்கு வேண்டிய வரத்தைக் கேள் என்றார். சனத்குமாரர் உடனே நான் எதன்மீதும் பற்றில்லாதவன், கற்றதும் பெற்ற தும் நான் உற்றதும் ஞானமே. தேவையுள்ள வனுக்குத்தான் ஆசைவரும் ஆசை வந்த வனுக்குத்தான் வரம் வேண்டும் எனச் சிரம் தாழ்த்திச் சொல்லி உங்கள் வரத்தினால் எனக்கு எந்தப் பயனும் இல்லை நான் ஆசைகளைக் கடந்தவன். ஞான பூசையிலே புகுந்தவன். உங்களுக்கு ஏதேனும் வரம் வேண்டுமானால் கேளுங்கள் தருகின்றேன் என்றார்.

சனத்குமாரரின் சலனமற்ற வார்த்தை கள் சர்வலோக நாயகனைச் சந்தோஷிக்கச் செய்தது. பரவசத்தில் பரமேஸ்வரன் தனக் கும் வரம் கொடுக்க ஒரு புண்ணிய பாலகன் இருக்கிறானே என்று புளகாங்கிதமடைந்தார். சனத்குமாரா! நீ எனக்குப் பிள்ளையாகப்

*எதற்கும் தயாராக இருப்பவனை நோக்கித்தான் வாய்ப்புக்கள் தேடிவரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறக்கவேண்டும். இதுவே நீ எனக்குத் தரவேண்டிய வரம் என்றார். சனத்குமாரன் சிவபெருமானைப் பார்த்து நான் உங்களுக்குப் பிள்ளையாகப் பிறக்கவேண்டும் என்று அம்மையோடு சேர்ந்து என்னிடம் வரம் கேட்காதபடியால் நான் உமக்குப் பிள்ளையாகப் பிறப்பேன். ஆகவே உமக்கு மட்டுமே பிள்ளையாகப் பிறக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள் என வாக்களித்தார்.

இதுகேட்டு மண்ணிலும் விண்ணிலும் நம் கண்ணிலும் கருணை தரும் அகிலாண்டேஸ்வரி கலங்கிப் போனார். சனத்குமாரா உன்னைப் பெற்றெடுக்கும் பாக்கியம் எனக்கில்லையா என்று கேட்ட தேவிக்கு ஆறுதலாகச் சொன்னார் சனத்குமாரர் ஒரு தாயின் கருவில் நான் உருவாக விரும்பவில்லை. என்றாலும் என்னைத் தாங்கள் மகனாகவே ஏற்றுக்கொள்ளும் காலம் கனிந்து வரும் என வாக்குத்தந்தார். சனத்குமாரர் சண்முகனாக இறைவன் கேட்டபடி பிள்ளையாக,

எந்தை பிரானுக்கு இரு மூன்று வட்டமாய்
தந்தை தன் முன்னே அச் சண்முகம் தோன்றலாற்
கந்தன் சுவாமி கலந்தங்கி இருந்தலால்
மைந்தன் இவன் என்று மாட்டிக் கொள்ளீரே!

அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனி ஆகப்
கருணைகூர் முகங்களாறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்(கு) உதித்தனன் உலகம் உய்ய.

-கந்தபுராணம்.

செய்தலுமிறைவன் நெற்றி செறிதகு விழியினின்றும்
மெய்தரு பொறிகளாறு விரைவுடன் னல்கி யங்கி கைதனிற் கொடுப்ப
போந்து நற்சரவணத்தில் உய்த்தனன் பொறிகள் ஆறும்
வாய்ந்த ஆனனம் ஆறுள மதலையே ஆக ஆங்கி

பின்னலஞ் சடைப் பிரானும் பிறைநுதலுமையோடேகி
அன்ன புத்திரனைக் கண்டே யார்வமாய்க் கரத்திலேந்திச்
சின்ன மெல்லிடையாள் தானும் திருமுலை அமுதமூட்ட
உள்ளரு முருகன் கையில் ஒப்பிலாயுதங்கள்நல்கி

-பிள்ளையார் புராணம்.

கலியுக நாதன் கந்தன் வந்து அவதரித்த வரலாறு திரிபுராரஹஸ்யம் என்ற நூலில் சொல்லப்பட்டுள்ளது.

அற்புத அவதாரம் எடுத்த தத்துவ நாயகன் குருவாய் வந்து நமக்கு அருளி நம் புத்தியால் பத்தி செலுத்தி முத்தி எனும் ஞானம் அளிக்கும் கடவுள் ஆற்றங்கரை அருகே அருள்பாலிக்கும் சந்நிதிச் சரவணனைச் சரணடைந்து அருள் பெறுவோம் அனுதினமும்.

*மன்னிக்கப்பட வேண்டியவரைத் துன்புறுத்தக்கூடாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# மண்டூர்க் கந்தசுவாமி கோயில்

– திரு மூ. சிவலிங்கம் அவர்கள் –

## மண்டூர் கந்தசுவாமி பெருவிழாத் தொடர்

இரண்டாம் மூன்றாம் நான்காம் திருவிழாக்களும் கோயில் கணக்கில் நடைபெறும். வழமையாக ஆலயம் கொடியேற்றத்துடன் உள்ளும் புறமும் சோடனைகளாலும், அலங்கார மின்னொளியாலும் பிரகாசிக்கும். மேற்கூறிய மூன்று விழாக்களிலும் விநாயகர் முருகன் அலங்கரிக்கப்பெற்ற சிறிய தேரி (ஏடக அமைப்பு)னுள் சகல அலங்காரத்துடன் யாவும் வெள்ளைத் துணியால் மூடியவண்ணம் உள்வீதியுலா வருவர்.

ஐந்தாம் திருவிழா மண்டூர் கவுத்தன்குடி வேளாளர் (வண்ணக்கர் சமூகத்தினரின்) உபயமாகும். இன்றிரவு வெளிவீதியில் சங்குகளை ஊதும் பணியாளர் சங்கூதிச் செல்வர். இதனைச் சந்தி மறித்தல் என்பர். இவ்விழாவில் சுவாமி உள்வீதி வெளிவீதிகளில் உலாவந்து சிறப்பிப்பர். ஐந்தாம் திருவிழா முதல் இருபதாம் திருவிழா வரை இவ்வூர் அயலூர்கள் மக்களின் குடும்ப அமைப்பு முறையில் சேர்ந்து நடாத்தப்படும் 5-10ஆம் விழாக்கள் இரவு மட்டும் நடைபெறும். 11-20ஆம் விழாக்கள் பகலும் இரவும் இருவேளை நடைபெறும். இதனை இரட்டைத் திருவிழா என்பர். 21ஆம் திருவிழா தீர்த்தத் திருவிழா இவ்விழாக்களை மேலும் அறிவோம்.

## இவ்வாலயத்தின் பெருவிழாக்காலச் சிறப்பு

முதல்நாள் விநாயகர் சிறிய ஏடகத்தில் கொடியேற்றத்துடன் வெளி வீதியுலாவில் ஆறு கொடிமரம் நாட்டுதல் நடைபெறும். 2-4ஆம் நாளில் சிறிய ஏடகத்தில் விநாயகரும் முருகனும் தனித்தனியே உள் வீதியுலா மட்டும் நடைபெறும். ஐந்தாம் நாள் முருகன் மயில் வாகனத்திலும் விநாயகர் மூஷிக வாகனத்திலும் உள்வீதி வெளிவீதியில் பவனி வருவர். 5-10ஆம் விழாக்கள் இவ்வாறு இரவுவேளை மட்டும் நடைபெறும்.

11-20ஆம் விழாக்களில் முற்பகலிலும் இரவிலுமாக இருவேளை சுவாமி வீதியுலா வருவர். பதினொராம் பதின்மூன்றாம் நாள் சுவாமி புஷ்ப விமானத்திலும் பிள்ளையார் யாளி வாகனத்திலும் உலா வருவர். காலைப் பூசைவேளை தெய்வானை அம்மன் சப்பறத்திலும் உலா வருவர். சுவாமி வீதியுலா வரும்போது வெள்ளைத் துணியால் மூடி மறைக்கப்பட்டிருக்கும். சுவாமி வெளிவீதி வரும்போது வள்ளியம்மன் சந்நிதி முன் தரித்து நிற்க முருகனை வள்ளியம்மன் சந்நிதிக்குள் எடுத்துச் சென்று பூசை முடிந்தபின் வெளியே வந்ததும் ஊர்வலம் தொடரும். சுவாமி காவும் பணி மண்டூர் கவுத்தன்குடி வேளாளரின் பொறுப்பாகும். அவர்களில் ஏனையோர் சுவாமியினருகே கூட வருவர். ஊர்வலத்திற்கு முன்னால் பண்டைய மரபுப்படி (இன்று உடை, நடை, பாவனை மாறினாலும்) வேடுவச் சிறுவன் பண்டைய வேடுவரின் உடை நடையில் கையில் வில் அம்பு ஏந்தியவண்ணம் இருபுறமும் நோக்கியவாறு சுவாமியின் பாதுகாவல் கடமையாக முன் செல்வர்.

*யாரும் பாராட்டாத இடத்தில் சாதனை நிகழ்த்துவதில் பயனில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடுவரைத் தொடர்ந்து தேசத்து வண்ணான் ஒரு சீலையை ஏந்தியவாறு பின்னடையாகச் செல்வர். இவை யாவும் பெருவிழாக்காலப் பண்டைய பாரம்பரிய நிகழ்வின் தொடராகும்.

## தீர்த்தத் திருவிழாவின் சிறப்பு

மண்டூர்க் கந்தசுவாமி கோயில் பண்டைய பாரம்பரியங்களைப் பேணி வருவதால் முருகப்பெருமானின் அருள் வளம் மிகுந்து வழிபடுவோர் சீருஞ்சிறப்பும் பெற்று நிறைவுடன் வாழும் பேறு பெற்றவர்கள். அடியார்கள் ஏனைய பெருவிழாக்களில் விரதமிருந்து பக்தி பூர்வமாக வழிபட்டு இறையருளை வேண்டுவதால் அவர்களின் துன்ப துயரங்கள் குறைகளைத் தீர்த்தோம் என ஆலய மூலவர் வழங்கும் அருட்சிறப்பே தீர்த்தமாடியதும் தீர்த்தம் என மாறியுள்ளது. இவ்விழாவில் சுவாமி பல அற்புதங்களுடன் தீர்த்தமாடியதும் தீர்த்தம் அடியார் களுக்கு வழங்கப்படுகிறது. இதனை வாங்கிப் பருகுவதுடன் அவர்களின் இறை நம்பிக்கையால் மன நிறைவும் நல்வழிப் பாதையும் தெய்வீக இன்பமாகவே அமைகிறது. பெருவிழாக்காலத் தீர்த்த விழாக்கால நிகழ்வு அடியார்களின் மனநிறைவைத் தருவதே சைவ சமயத்தின் பேருண்மையாகும். எமது சைவ ஆலய தரிசனைமூலம் துன்பங்கள் பல வந்தாலும் இவ் விழாக்களால் சிவநெறி காட்டும் அற்புத நிகழ்வால் நாமும் உய்வடைகிறோம்.

## மண்டூர்க் கந்தசுவாமி கோயிலின் தீர்த்தத் திருவிழா

இவ்வாலயத்தின் பெருவிழாக்கால நிறைவு விழாவாக 21ஆம் விழாவாகத் தீர்த்தத் திருவிழா நடைபெறும். வழமைபோல் ஆலய விதிமுறைக்கமைவான நிகழ்வுகள் சுறுசுறுப்பாக நடைபெறும். காலைப் பூசையைத் தொடர்ந்து வீதியுலா வெளிவரும். வழமையாக இவ் ஆலயத்தின் வடக்கே சிறிது தூரத்தில் பாயும் மூங்கிலாறு வாவியில் சங்கமமாகும் இடத்தில் நடைபெற்றது. பிற்காலத்தில் மூங்கிலாறு தமது ஆற்றுப்படுக்கையைச் சற்றுத் தொலைவிற்கு மாற்றியதால் மேலும் சிறிது தூரஞ் சென்று வாவிக்கருகே தீர்த்த விழா நடைபெறும். இவ்விழா வெகுசிறப்பாக நடைபெறும். நிறைவில் பிரதேச செயலர், தேசத்துக் குருக்கள், முற்கூறிய நான்கூர் கணக்கப்பிள்ளைமார் சிறப்பான பிரமுகர்கள் யாவரையும் பெருமைப்படுத்தி மஞ்சள் காப்பு நூல் கட்டி, பட்டுத்தீர்த்தம் வழங்கி மாலைசூடி முதன்மை அளிப்பர். தொடர்ந்து யாவருக்கும் தீர்த்தம் வழங்குவர்.

சுவாமியுடன் யாவரும் ஆலயத்தை நாடுவர். வரும் பாதையில் ஆரார்த்தி எடுக்கும் சிறுமியர் வில்லேந்தும் வேடன் ஆகியோர் தெய்வானை அம்மன் சந்நிதி முன் வரும்போது மயங்கி விழுவர். பின்னர் இவர்களை வள்ளியம்மன் ஆலயத்திற் சேர்த்ததும் சற்று நேரத் தில் சுயநினைவு பெறுவர். இந்நிகழ்வு இவ்வாலயத்தின் அற்புதமாக விளங்குகிறது. இதனை முன்னரும் அறிந்தோம். தொடர்ந்து வீதியுலா நிறைவில் முருகன் வள்ளியம்மன் சந்நிதியில் சேர்ந்து ஓய்வெடுப்பார். முருகப்பெருமான் வள்ளியம்மன் சந்நிதிக்கு வந்ததும் பண்டைய முறைப்படி பெருமானுக்கு தேனும் தினைமாவும் கலந்து திருவமுது படைத்துப் பூசை செய்வர். அன்று மாலையில் முருகப்பெருமான் தமது சந்நிதியை அடைவார். அன்று மதிய நேரப்பூசை நடைபெறாது. மாலையில் வழமையான பூசை நடைபெறும்.

*புத்திசாலிகள் எதையும் உபயோகமில்லாததாக நினைப்பதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயப் பெருவிழாவில் பல ஊர்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கூடுவதால் மக்களின் வசதிக்காகவும் குற்ற ஒழிப்பிற்காகவும் தற்காலிக பொலிஸ் நிலையம், பிரதேச செயலகம், தற்காலிக நீதிமன்றம் அமைவது வழக்கம். யுத்த காலத்தில் நீதிமன்றம் இயங்கவில்லை. இத் தற்காலிக பணிமனையிற் கடமையாற்றும் இறுதி மூன்று நாட்களும் அலுவலர்கள் பலரும் ஆலயநிதி மூலம் உபசரிக்கப்படுவர்.

## மண்டூர்க் கந்தசுவாமி கோயிலில் பாரம்பரிய வேடுவர் பூசை

இவ்வாலயத்தின் பெருவிழாக்காலத் தீர்த்தத் திருவிழா நிறைவடைந்த பின் மூன்றாம் நாள் பகல் பூசை முடிந்ததும் ஆலயத்தின் பின்னால் குமாரத் தம்பிரான் சந்நிதியில் வேடுவர் பூசை நடைபெறும். முற்காலத்தில் தவிட்டுக் கொளியவரிசியில் ஆக்கிய அன்னமும், மான் இறைச்சிக் கறியும் வழங்கப்பட்டதாக அறிய முடிகிறது. இன்றைய ஆசாரம் பேணும் முறையில் அவ்வழக்கம் மாறியுள்ளது. இன்று சுத்தமான மரக்கறிகளிலான பல் சுவைக் கறிகளும் நெல்லரிசிச் சோறும் படையலாக நிவேதனஞ் செய்யப்படுகிறது. இப்படையல் அன்றைய பாரம்பரிய முறைப்படி மண்முட்டிகளில் சோற்றன்னமும் கறிகளும் படைத்து கப்புகனரால் பூசைகள் நடாத்தப்படும். இதனை இடும்பன் பூசை என்றும் வேடர் பூசை என்றும் அழைப்பர். இவ்விழா ஆலயச் செலவில் சிறப்பாக நடைபெறுகிறது. நிறைவில் முற்கூறிய பெரியார்கள் முதலில் பெருமதிப்பளிக்கப்பட்டு குடுக்கை அன்னமும் தரப்படும்.

## அடுக்குச் சடங்கு

தீர்த்தத் திருவிழாவில் மூன்றாம் நாள் மாலைப்பூசை முடிந்ததும் ஆலயத்தின் வெளி வடக்கு வீதியில் பெரிய பந்தலமைத்து இச்சடங்கு நடைபெறும். இச்சடங்கில் முற்காலத்தில் கள்ளுடன் மடைப்பலி கொடுத்து வேடரின் வெறியாட்டு விழா நடைபெற்றது. தற்போது பொங்கலும் பலகார வகைகளும் படைக்கப்படுகின்றன. இப்படையல் படைக்கப்படும் சமயத்தில் இதற்கென அமைந்த சிறப்பான ஒலியில் மேளம் அடிக்கப்படும். (இவ்வாலயத்தில் அடிக்கப்படும் மேளம் பல அர்த்தத்துடன் அடிக்கப்படுகிறது. பூசை நேரத்தையும், உள்வீதி உலா நேரத்தையும் வெளிவீதியுலாவிற்கான நேரத்தையும் வீதிகளின் திசை மாறுவதையும் சுவாமி வீதியுலா முடிந்து ஆலயத்தை அடைவதையும் குறிக்கும் வகையில் பல்வேறு ஒலியில் அமைவது பண்டைய முறையாகும். இதனால் மக்கள் வீட்டிலிருந்தவாறே ஆலய விழாக்களின் அணுகுமுறையை உணர்வர்.)

பூசைக்கான மடைப்பலி வழங்கிய பின் பூசை செய்யும் வேலனார் உருக்கொண்டு திருவாக்குரைப்பார். ஆலயத்தில் ஏற்படும் குறைகளை நீக்கி எதிர் காலத்தில் ஏற்படும் பலாபலன்களையும் கூறுவர். யாவரும் பய பக்தியுடன் கேட்பர். இவரின் திருவாக்கை மண்டூர் முருகன் கூறுவதாகவே கருதுவர்.

இவ்வாலயத்தில் அன்றிரவே கொடியிறக்கம் நடைபெறும். (கொடியேற்றத்தன்று நாட்டிய கொடி மரத்திற்கு பெருவிழாக்காலம் முழுவதும் மடைப்பலியுடன் பூசைகளும் நடைபெறும். அடுக்குத் திருவிழா அன்று பிரதேச செயலர், வண்ணக்கர், நாலூர் கணக்கப்பிள்ளைமார், பெரிய கப்புகனார், பூசைக் கப்புகனார்மார் மற்றும் ஊர்ப்பிரமுகர்கள்,

*பேராசைக்காரர்கள் அதிஷ்டத்தில் நம்பிக்கை கொள்வார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா சனங்கள் யாவரும் அடங்கிய கூட்டம் நடைபெறும். அன்றே கொடிமரம் பூசையின் பின் இறக்கப்படும். இத்துடன் சகல ஆலயப் பணிகளும் நிறைவு பெறும்.

அதன்பின் கூட்டத்திற் கலந்துகொண்ட பிரமுகர்கள் யாவரும் தென்னம் பாலையில் கட்டிய தீப்பந்த வெளிச்சத்தில் விருந்துபசாரத்திற்காக வண்ணக்கரின் வீட்டுக்கு அழைத்துச் செல்லப்படுவர். வண்ணக்கர் வீட்டில் தூய பல்வகை மரக்கறிகளில் சமைக்கப்பெற்ற அறு சுவை அன்னம் வழங்கப்படும். இப்பாரம்பரியம் மண்டூர் மக்களின் விருந்தோம்பலின் பண்டைய முறையைத் தெரிவிப்பதாகும்.

(தொடரும்...

## கங்கையாள் கண்டன் சக்தியே செல்வச்சந்நிதியான் பக்திவேல்

அச்சமும் அன்புந் தோன்ற வடியினை பணிந்து சூழ்வோர்
உச்சியில் கரங்களேற்றவொளி விழியருவி சூழ
விச்சுவருபனான செல்வச்சந்நிதிப் பெருமான்றிரு வேலினை
முச்சகம்முழுதும் போற்றும் முதல்வனைத் துதிப்போம் யாண்டும்!

வேதகாரணமான வேலவனே வேதமோர் நான்கும் நீ!
பாதமோர் நான்கும் நீ பதங்களோர் நான்கும் நீ
போதலை மலையமார் புவனகாரண குருவும் நீ!
செந்திவேல் மோகனப் பெருமையை நவில வல்லாரெவர்!

புராதனத் தெய்வமென்றும் நீ புறப்பரிய முள்ளிலும் மாயை
விராவு மெய்க்கரியும் நீ மிகுமுபடத வேல்நிதியும் நீ!
சராசர செல்வச்சந்நிதிக் குருவும்நீ தத்துவ வேல்நுனி கதிர்காமரும்நீ!
பராபர பொருளென பஞ்சேந்திரியமொழிய பகரவல்லாரெவர் வேலா!

முவர் காரணரும் நீயேமுன்று காணக்காலமும் நீயே வேல்!
முவகையுலகும் நீயே மொழியுமுச்சுடரும் நீயே வேலா!
முவகையுயிரும் நீயே முவகை யுருவமும் நீயே சந்நிதியானே!
செல்வச்சிலம் பொலிக்கந்தனே நினதருளென்றும் தெளிய வல்லார் வேலா!

லோகாய அருளும்நீ மறமும்நீ அன்பும்நீ பண்பும்நீ!
தெருளுற நீதிநீ மருளுறு மாயைச் செல்வம்நீ வறுமைநீ!
வாமருள் வெருளும்நீ தேற்றுறத் தெய்வமான செல்வச்சந்நிதியும் நீ!
மேவுவேல் குருவின் குணங்களைக் குறிக்க வல்லான் செந்தில் மோகனனாய் நீயே!

ஏகநீயே யனேகநீயே இருளும்நீயே ஒளியும்நீயே வேலா!
போகிநீயே யோகிநீயே புலவரெலாம் போற்றிப்பாடும் செல்வச்சந்நிதியானே!
சாகரமேழும் நீயே தடவரசிவ சக்திகானம் மேவும் சத்குரு சங்கரவேலா!
போகமாய் நின்று யோகத்தை மறந்து நின்னடிமலர்மருவ வல்லவர்க்கருள் வேலா!

-க. தெய்வேந்திரம்-

*சரியாகப் பார்க்க முடியாதவன் நிதானமாகப் போகட்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 15

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 பொறுப்புணர்ச்சி இல்லையெனில் வெறுப்புணர்ச்சி தோன்றும்
மறுப்பின்றிக் கிடைப்பவைகள் ஒறுப்பாகிப்போகும்
சிறுப்பினைகள் மேலோங்க உறுப்புகளும் சோர்ந்து
அறுத்துவிடும் மானிடப் பிறப்பினையே அறிந்திடுவீர்.

02 எண்ணத்தில் அசுரகுணம் வண்ணத்தில் தேவகணம்
உன்னுக்குள் இருக்கின்ற காலம் மட்டும்
விண்ணுக்குள் இருக்கின்ற இறைவனார் இறங்கிவந்து
மண்ணுக்குள் உன்செயலால் மகிழ்வாரோ சொல்வாய்.

03 கால்கழுவி ஆலயத்துள் செல்வதிலோர் அர்த்தமுண்டு
மலங்கழுவி வந்துள்ளேன் ஏற்றிடெனை என்பதாகும்
கால்கழுவிச் சிலமாந்தர் மலஞ்சுமந்து வந்திங்கு
பால்பழம்தான் கொடுத்திட்டால் பரம்பொருளார் ஏற்பாரோ.

04 கோடி கொடுக்கின்ற கொடையினொடு ஊருலகில்
நாடிக்கொடுக்கின்ற நன்மையிலும் மேலிங்கு
கூடித் திரிகின்ற குவலயத்துள் ஒருவனது
தேடிக் கிடைத்திட்ட நின்மதியைக் காத்தலாகும்.

05 கோயிலும் எனதென்பார் கோபுரமும் எனதென்பார்
வீதியும் எனதென்பார் விக்கிரகம் எனதென்பார்
இத்தனையும் உடையோற்கு இன்னொன்றும் இங்குண்டு
நாமே நமக்கில்லை என்பதுவும் அவர்க்கேயாம்.

06 பெருந்தன்மை காட்டுதலைப் பலவீனம் என்றுசிலர்
கருதுவதால் பலகருமம் பலனின்றிப் போவதுண்டு
வருந்திப்பின் இருந்துநாம் பெருந்துயரம் கொள்வதிலும்
அருந்தன்மை அதுவென்று மதிப்பளித்தல் பலனாம்.

*மற்றவர்களின் வடுக்கள் நமக்குப் பாடமாக அமையவேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 தாழ்வு மனப்பான்மையது வாழ்வுக்கு உகந்ததன்று
வீழ்வுக்கு அதுவே காரணம் என்பர் ஆனாலும்
ஆழ்வுக்கும் மீள்வுக்கும் ஆதாரம் எதுவென்றால்
தாழ்வு மனப்பான்மையே பின் உயர்வுக்கு வழித்துணையாம்.

08 பேசிப் பேசிச்சிலர் பெருந்தகைகள் போலிருப்பர்
பேசாமல் சிலபேர்கள் பெரும்பணிகள் பலமுடிப்பர்
தேசத்தில் பெருந்தகையாய் இருப்பவர்கள் யாரென்றால்
பேச்சிலும் செயலிலும் ஒன்றாக இருப்பவரே.

09 சொத்தும் தமதென்பார் சுகமும் தமதென்பார்
பேரும் தமதென்பார் புகழும் தமதென்பார்
இத்தனையும் தமதென்று அறிந்தவற்கு அறியவொன்று
வாழ்வே நமக்கில்லை என்பதையும் அறிதலாகும்.

10 கருமம் ஒன்றுமக்குக் கைகூடும் வேளையிலே
உருவத்தைப் பார்த்தனை உமதாக்கல் நன்றன்று
தர்மத்தின் வழியதற்கு நீர்தகுதியுண்டோ என்றறிந்து
இருகரம் நீட்டுதலே பெருமனிதம் ஆக்கிடுமாம்.

---

**நல்லைக்குமரன் 2018 உற்சவகாலத்தை முன்னிட்டு வழங்கப்படுகின்ற உயர்விருதான "யாழ் விருது" பெற்ற சிவத்திரு செந்திவேல் மோகனதாஸ் சுவாமிகளை மனமார வாழ்த்துகின்றேன்.**



சிந்தை தெளிவும் சீரார்ந்த பண்பும்
சந்நிதி ஆச்சிரம சீராளன் - பந்தியில்
சிவத்திரு மோகனதாஸ் சுவாமிகள் மேன்மை
புவனம் எந்நாளும் புகழும்.

ஆற்றோர குமரனுக்கு ஆற்றும் பணிதானும்
ஏற்றமிகு "யாழ்விருது" ஆற்றுகைக்கு - ஊற்றாக
இரப்போர்க்கு அன்னமிடும் இணையற்ற அறமும்
சிரம்தனில் குவிந்த சிறப்பு.

பல வருடங்களுக்கு மேலாக தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய முன்றலில் ஆச்சிரமம் ஒன்றினை அமைத்து மக்களுக்கு சிறந்த பணியாற்றி வருகின்ற இறைபணி என்பது பெரிதும் மகத்தானதொன்றாகும்.

இறைவனை வணங்குவது சிறப்பாகும். அதற்கு மேலாக வழங்குவது மிகச் சிறப்பாகும் என்பது இறைவனது விருப்பம். அதற்கமைவாக மனிதனுக்கு முதன்மைத் தேவையான அன்னப் பணியாற்றி வருகின்ற சிவத்திரு செந்திவேல் மோகனதாஸ் சுவாமிகளுக்கு 21.08.2018இல் "யாழ்விருது" கிடைப்பது மனித சமுகம் நல்லதொரு சேவையாளனை தேர்வு செய்திருப்பது மட்டற்ற மகிழ்ச்சி தருகின்ற ஓர் செய்தியாகும்.

தாங்கள் உடல் உள நலம்பெற்று பல்லாண்டு வாழ இறைவனை வேண்டி தங்களை வாழ்த்தி எனது வாழ்த்துதனை தெரிவித்துக்கொள்கின்றேன்.

-கே.ஆர். திருத்துவராஜா-

*அழகற்ற அகத்தைவிட அழகற்ற முகம் மேல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் கணேசாய நம என்னும் திருமந்திர மகிமை

– **திரு ஆர்.வீ. கந்தசுவாமி** அவர்கள் –

திருமகள் ஓங்கியுறையும் திருநகரம் நந்துரம். இந்நகரின் அருகில் ஒரு வேடச்சேரி இருந்தது. அச்சேரியில் விப்பிரதன் என்னும் ஒரு வேடன் இருந்தான். அவன் ஆலகால நஞ்சினுங்கொடியவன். வழிப்பறி செய்வதில் மிகவும் வல்லவன். வழிப்போக்கர்களை மடக்கி ஒடுக்கி அவர்களின் பொருட்களைப் பறித்துக் கொள்வான்.

ஒருநாள் ஓர் அந்தணன் அவ்வழியே வந்தான். வேடன் அவனைக் கண்டு, நமக்கு இன்று நல்ல பொருள் கிடைக்கும் என்று கருதி அந்தணனைப் பின்தொடர்ந்தான். அந்த அந்தணன் புலியைக் கண்ட ஆட்டுக்குட்டிபோல் நடுங்கி ஓடினான். விப்பிரதன் விரைந்து அவனைத் தொடர்ந்து ஓடியும் அந்தணனைப் பிடிக்க முடியவில்லை. அதனால் மனம் வருந்தி திரும்பி வரும் வழியில் விநாயகர் திருக்கோவிலும் தீர்த்தமும் இருந்தன. விப்பிரதன் களைப்பினால் அப்புனித தீர்த்தத்தில் முழுகினான். நீர் விடாயினால் தீர்த்தத்தினைப் பருகினான். அங்குள்ள மரநிழலில் தங்கியிருந்து ஓய்வெடுத்தான்.



தவத்திற் சிறந்த முற்கல முனிவர் அவ்வழியே வந்தார். வேடன் வாளை உருவி அவரை வெட்டுவதற்கு ஓங்கினான். முனிவர் பெருமான் அவனை உற்றுப் பார்த்தார். அவருடைய திருக் கண்ணோக்கால் அவன் வாளும் அறியாமையும் கீழே விழுந்தன. பரம ஞானியின் பார்வையால் அவனை விட்டு அறியாமை அகன்றது. நல் உணர்வு தோன்றியது.

வேடன் முற்கல முனிவருடைய பாதங் கள்மீது வீழ்ந்து வணங்கினான். "அடியேன் செய்த பாவங்கள் அளவற்றவை. உய்யும் வகையருளி என்னைக் காத்தருள்வீராக" என்று கூறி அழுதான். பன்முறை தொழுதான். அவருடைய திருவடி களை உடும்புபோல இறுகப் பற்றிக்கொண்டான்.

அடைக்கலம் புகுந்தவரை ஆட்கொள்வது ஆன்றோர் கடன். முற்கல முனிவர் அவன் மீது கருணை கொண்டார். அவனை நீராடி வரச் செய்து அவன் தலையில் தமது

*கோபம் களைபோன்றது, வெறுப்பு மரம்போன்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கரத்தை வைத்து "ஓம் கணேசாய நம" என்ற திருமந்திரத்தை உபதேசித்தார். ஓர் உலர்ந்த தடியை அங்கு நட்டார். "அன்பனே இத்தடிக்கு நாள்தோறும் காலம் தவறாமல் நீர் ஊற்றுவாயாக". விநாயகரைத் தியானித்து இம்மந்திரத்தை செபித்துக் கொண்டிரு. உனக்கு எல்லாச் சித்திகளும் கைகூடும். சிலகாலம் பொறுத்து நாம் இங்கு வருவோம் என்று கூறிவிட்டுச் சென்றார்.

விப்பிரதன் என்ற அவ்வேடன் குரு மொழிப்படி அந்தத் தடியின் அருகில் அமர்ந்து விநாயக மந்திரத்தை உருவேற்றிக் கொண்டிருந்தான். தடிக்கு மூன்று காலங்களிலும் நீர் ஊற்றிவந்தான். ஆயிரம் ஆண்டுகள் கடந்தன. அத்தடி தளிர்த்துப் பூத்தது. அப்போது முற்கல முனிவர் அங்கு வந்தார் வேடனுடைய அன்பையும், உள்ளத்தின் உறுதியையும் கண்டு வியந்தார். கமண்டல நீரை அவன்மீது தெளித்தார். அவனுடைய பாவங்கள் பறந்தோடின. அவனுடைய புருவ நடுவில் தும்பிக்கை உண்டாகியது. முனிவர் அவனைத் தழுவி பிரணவ மந்திரத்தை உபதேசித்தார். நீ ஒரு கற்பக காலம் வாழ்வாய், இத்தடி கற்பகதருவாக விளங்கி நினைத்ததை வழங்கும்" என்றார்.



விப்பிரதன் புருவ நடுவில் தும்பிக்கை தோன்றியதால் புருசுண்டி என்று பெயர் பெற்றான். பின்னர் புருசுண்டி ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்தான். அவர் முன் விநாயகப் பெருமான் காட்சி கொடுத்தார். புருசுண்டி விநாயகரைத் தரிசித்து துதித்தார். வீடுபேற்றை வேண்டினார். கணேசர் கருணை புரிந்து மறைந்து அருளினார்.

புருசுண்டி விநாயக சொரூபத்துடன் சீவன் முத்த ராகத் தவம் செய்துகொண்டிருந்தார். தமது சுற்றத்தார் கள் நரகில் வேதனையடைந்துள்ளார்கள் என்பதை நாரத முனிவர் கூறக்கேட்டு, சுற்றத்தாருக்கு நற்கதி வழங்க வேண்டும் என்று எண்ணினார்.

மாசிமாதம் அமரபட்சத்தில் செவ்வாய்க் கிழமையில் வரும் சங்கடஹர சதுர்த்தி விரதத்தை அனுஷ்டித்தார். அவ்விரத பலனை விநாயகருடைய திருக்கரத்தில் நரகில் உள்ள சுற்றத்தாருக்குச் சேரவேண்டும் என்று தத்தம் செய்தார். அதனால் நரகில் கிடந்த சுற்றத்தார்கள் பாவம் தீர்ந்து விண்ணுலகம் சேர்ந்தார்கள்.

நாமும் சங்கடஹர சதுர்த்தி விரதத்தை அனுஷ்டித்து நம் மூதாதையர் மோட்சம் அடைய செய்வோமாக.

**உலகம் வீரர்களுடையது. சத்தியமான வார்த்தை. வீரனாக இரு எப்போதும். "அச்சமில்லை, அச்சமில்லை" என்று சொல்லிக்கொள். பிறருக்கும் இதைச் சொல். "அஞ்சாதீர்கள்! அஞ்சாதீர்கள்" அச்சம் மரணம், அச்சம் பாவம், அச்சம் நரகம், அச்சம் அதர்மம், அச்சம் தீயொழுக்கம், உலகத்திலுள்ள தவறான எண்ணங்கள் எல்லாம் பயத்திலிருந்துதான் பிறந்திருக்கின்றன.**

*கல்வியின் வேர் கசப்பானது, ஆனால் கனியோ இனிப்பானது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதப் பண்புகளும் மதமும்

– **திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு** அவர்கள் –

எமது ஆசைக்குக் காரணம் என்ன? எம்மைத் தவிர இன்னொன்று இருப்பதாக எண்ணுவதால்த்தான் அதனிடம் ஆசை வருகிறது.

ஆனால் சிவம் ஒன்றே எல்லாமாக உள்ளது என்று எமது சமயம் கூறுகின்றது. அவன் அன்றி வேறொன்றும் இல்லை. அதனைப் புரிந்துகொண்டால் பிரச்சினைகள் எழ இடமில்லை.

ஒரு மாடு கண்ணாடியில் தன்னைப் பார்த்துவிட்டு தனக்கு முன் இன்னுமொரு மாடு இருக்கிறது என்றெண்ணி முட்ட வருகிறது.

மனிதனும் கண்ணாடியில் தனது பிரதிபிம்பத்தைப் பார்க்கின்றான். ஆனால் அங்கு இன்னுமொரு மனிதன் இருக்கின்றான் என்று எண்ணுகின்றானா? இல்லையே இரண்டும் ஒன்றுதான் என்று சாந்தமாக இருக்கின்றான்.

இவ்வண்ணம் நாம் பார்க்கும்போது அனைத்துமே ஒன்றுதான். இரண்டாவது பொருள் ஒன்று உண்டு எனப் பார்க்கும்போதுதான் எமக்கு ஆசை வருகின்றது. கோபம் வருகின்றது. கோபம் வரும்போது பாவங்களை நாம் செய்யவேண்டி வருகின்றது.

அதனை விட்டு எல்லாமே ஒன்றுதான் என்ற ஞானம் வந்துவிட்டால் வேறு ஒரு பொருள் இல்லை என்ற முடிவுக்கு நாம் வருகிறோம். அதனால் ஒன்றைத்தேடி அலையும் சிரமம் எமக்கு இல்லை. ஆசை எம்முள் எழாது. கோபம் உண்டாக வாய்ப்பும் இல்லை. பாவம் செய்யவும் வாய்ப்பு இல்லை. காரியம் இல்லை, ஜனனம் இல்லை, துன்பமும் இல்லை. எப்படி?

இந்த ஞானத்தை நாம் எப்படிப் பெறுவது! எப்படியும் பெற்றுத்தான் ஆகவேண்டும். நம்மைப் பெற்ற அன்னை எம் உடல் வளரப் பால் தருகின்றாள். அதேபோன்றுதான் அறிவு என்னும் ஞானப்பாலை அம்பாள்தான் எமக்கு ஊட்டவேண்டும்.

இதற்கு நாம் அவள் பாதங்களைக் கெட்டியாகப் பற்றிக்கொள்ள வேண்டும். அவளது சொரூபத்தை எம்மனதிலே பதிக்க வேண்டும். அவள் பற்றிய சிந்தனைகளை எம்முள்ளே சர்வமும் கரைக்க வேண்டும். அப்போது எமக்கு ஞானம் வரும். அப்போதுதான் மனிதனும் தெய்வம் ஆகின்றான்.

மனிதன் தெய்வமாகுமுன் அவன் தன்னை மனிதன் ஆக்கியாக வேண்டும். ஏன் தெரியுமா?

சில மனிதர்கள் வடிவத்திலே மனிதராக இருந்தாலும் சொல்லிலும் சிந்தனையிலும் செயலிலும் மிருகங்களாகவே இருக்கின்றார்கள். இவர்களையே முதலில் மனிதராக்க வேண்டும்.

இவர்களது சிந்தனையில் சொல்லில் செயலில் பண்பை வளர்த்தாக வேண்டும். மற்றோரையும் இவர்கள் மதிக்கப் பழக்கியாக வேண்டும். பணிவை அவர்கள் மனதில் வளர்த்தாக வேண்டும். "நான் பெரியவன்" என்ற இவர்களது அறியாமையை அகந்தையை உடனடியாக அகற்றியாக வேண்டும்.

சிலர் இருக்கின்றார்கள் எம்மை எல்லோரும் மதிக்கவேண்டும், பாராட்ட வேண்டும் ஆனால் நாம் மாத்திரம் மற்றவரை மதியாது "ஏனோ தானோ" என்றிருந்து விடலாம் என்று எண்ணுகிறார்கள். இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்குச் சாத்தியமா? மரியாதை என்பது கொடுத்துப் பெற வேண்டியதோர் பண்பு. நாம் மாத்திரம் மதிக்கப்பட வேண்டும். மற்றவரை நாம் மதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றிருப்பது மிகமிகத் தவறு. இவர்களிடம் தெய்வ அனுக்கிரகம் சிறிதும் இல்லை என்றே கொள்ள வேண்டும்.

எனவே இத்தகையவர்கள் எல்லாம் முதலில் மனிதனுக்கு அவசியம் இருக்க வேண்டிய மனிதப்பண்புகளைப் பெற்ற பின்பே தெய்வமாகலாம். மனிதன் மனிதனாகிவிட்ட பின்னரே தெய்வமாக முடியும். தெய்வம் ஆவதென்றால் அசல் தெய்வமாவதல்ல. தெய்வம் என மற்றவர் போற்றுமளவுக்கு உயர் நிலையை, நல்ல நடத்தைகளை அவன் பெறவேண்டும். செய்தாக வேண்டும்.

மனிதப்பிறவி எடுத்ததன் பயன் அன்பு செலுத்தி ஆனந்தமாக வாழுதல். தருமம் செய்து ஈற்றில் இறைபதம் அடைதல். எங்கு அன்பு இருக்கின்றதோ அங்கு ஆனந்தம் இருக்கின்றது. தெய்வீகம் இருக்கின்றது. ஈர்ப்பு இருக்கின்றது. அதிகாரத்தால் சாதிக்க முடியாததை அன்பால் சாதித்து விடலாம். அன்பு செலுத்தும்போது துன்பமே தெரிவதில்லை. பகிரும்போது அன்பு பெருகும் துன்பம் குறையும். எனவே, எத்தனை கஷ்டங்கள் நேர்ந்தபோதும் சினத்தை அடக்கி நிதானத்தைக் கடைப்பிடித்து அன்பு செலுத்துங்கள். வெற்றி உங்களதே. இதற்கு சமய வழிபாடு துணை நிற்கும்.

அறியாமலா சொன்னார்கள்? அன்பே சிவம் என்று!

## வற்றாத நிலாவரைகள்

ஆன்மீக நெறிநின்று, ஆசகற்றும் ஆசான்களே,
ஆசிரியத் தெய்வங்களாக வணங்கப்படுகிறார்கள்;
தான்வாழ எண்ணாது தன்னினம் வாழவேண்டி
தம்மை அடையாளப்படுத்தும் பெட்டகமே ஆசிரியன்.

தேனாகும் கல்வியை மட்டுமல்ல தேசத்திற்கான
தெவிட்டாத வாழ்வினையும் ஊட்டவல்ல
பேனாவைத் தானாக ஊற்றெடுத்து உயிர்பெறப்
பொறுப்பாகும் பேராசானே நல்லாசிரியன் ஆசான்.

ஏன்? எதற்கு, எப்படி, எதனால் என்றவாறு
எல்லாவித தேடல்களையும் உள்வாங்கவல்ல
மேன்மைதரு பக்குவம், பண்பாடு, பாரம்பரியமதை
மெச்சத்தக்கவாறு பேணுபவனே ஆசிரியனாவான்.

தான் ஒரு வழிகாட்டியாய் தக்கவொரு அறிவூட்டியாய்
தம்மக்கள் என்ற உணர்வோடு தடிதனை விடுத்து
வான்மழைபோல வற்றாத நிலாவரையாய்
வெல்க தம் சேவையால் விடியட்டும் இம்மண்.

- கே.எஸ். சிவஞானராஜா -

*போரின் லட்சியம் அமைதி, வியாபாரத்தின் லட்சியம் ஓய்வு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனின் அவதார மகிமை

– **திருமதி பரமேஸ்வரி நடராஜா** அவர்கள் –

ஆதிப் பரம் பொருளே அவனியின் அகல் விளக்கே
நிதி நிறை நின்மலனே நித்திய சத்தியனே நின்பாதம்
போற்றி போற்றி

நாவினிக்க உன்நாமம் பேசவேண்டும்
நல்லதையே மனம் என்றும் நாடவேண்டும்
களிப்பூட்டும் காட்சியெங்கும் காண வேண்டும்
கன்னல் மொழி காதினிலே ஒலிக்கவேண்டும்

அவனியெல்லாம் ஒரு குடைக்கீழ் ஆள்பவனே
அன்பு நிறை அரசன் அந்தப் பரம்பொருளே
அன்னை தந்தை வாழ்ந்த முறை அறிவோமே
அன்பாலே அனைவரையும் அணைப்போமே.

என்புருக இறைநாமம் சொல்வோமே
அன்புடனே அவன்பாதம் தொழுவோமே
இன்பமய ஜோதியாம் இறைவனவன்
அன்புருவாய் அவதரித்தான் அவனியிலே.

அன்பினில் அரவணைக்கும் அன்னையாய்
பண்புடனே வழிநடத்தும் தந்தையாய்
அருள்வழி காட்டிடும் குருபரனாய் - அந்தப்
பரம் பொருளே அவதரித்தார் பக்குவமாய்.

பக்தி செய்வோர் இதயமென்றும் பசுமையானது
சத்தியத்தின் மூச்சே அங்கு நிறைந்திருப்பது
கர்மவினை அணுகாது காத்து நிற்பது
கருணை நிறை கடவுளின் பிரேம சக்தியே.

அன்பே சிவம் சிவமே தவம்
அன்பே தவம் தவமே சிவம்
சிவ தொண்டு செய்து வாழ்தலே
சீரிய அரிய பெரிய தவமாகும்.

*தற்பெருமை கொண்ட மனிதனுக்கு விரோதிகளே வேண்டியதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு மதம் அது இந்து மதம்
அனைவரையும் இணைக்கின்ற இனிய மதம்
யாவர்க்கும் எளியவழி அன்பு வழி
பாரினிலே உயர்ந்தவழி பண்பு வழி.

சக்தியளிக்கும் இந்தத் தார்மீகவழி - சொந்தப்
புத்தியை ஒளிரச் செய்யும் புண்ணிய நெறி
மனிதநேயம் மலரச் செய்யும் மங்கல நெறி
வெற்றிப் பாதையைத் திறந்து வைக்கும் அற்புத நெறி.

அற்புதமாகவே குரு சொன்ன நன்னெறி
அற்புத நெறியாமந்தச் சிவ நெறியே
இந்து மதம் இது அன்பு மதம் - இது
சொந்தமதம் யாவர்க்கும் சொந்தமதம்.

இறைவனின் வாக்கே குருவாக்கு
இறை அவதாரமே குருவாகும்
பிரேமையுடனெம்மை அழைத்துச் செல்லும் சற்குருவே
பேரின்பப் பாதையில் வழிநடத்தும் சற்குருவே சிவமாகும்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

E.mail: suthanm329@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீமத் ஞானதேவன் சுவாமிகள்

– திரு அ. சிவரூபன் அவர்கள் –

நடமாடும் கோயில்களாக விளங்குபவர்கள் ஞானிகள். ஞான உணர்வால் இறைவனை பிரத்தியட்ஷமாக கண்டு இன்புற்று அவனடி சேர்தலாகிய முத்திப் பெருவாழ்வை பெறுபவர்கள். ஞானிகள் சித்தர்கள் உலக வாழ்வில் தாமரை இலை தண்ணீர்போல் ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்ந்து பிறவியின் நோக்கத்துக்கு அர்த்தம் கொடுப்பவர்கள். இவர்கள் இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம் என்ற சிந்தனையாளர்கள் - நோக்காளர்கள். இத்தகைய ஞானிகளின் வரிசையில் ஞானதேவன் சுவாமிகளும் நோக்கத்தக்கவர்.



ஞானதேவன் சுவாமிகள் மன்னார் மாவட்டத்தின் மாதோட்டம் என வர்ணிக்கப்படுகின்றதும் வரலாற்றுப் பெருமைமிக்க திருக்கேதீச்சர கோயில் சூழலிலமைந்தது மான வங்கம் மலிகின்ற கடல் எனப் போற்றப்படுகின்ற வங்காலைப் பதியில் 1943.06.28இல் அவதரித்தார். இவரது தந்தையார் பெயர் வெலிச்சோர் மனுவேல் ரவ்வல். தாயின் பெயர் அவுரான் வரோனிக்கா குருஸ். இவரது பிள்ளைத் திருநாமம் மனுவேல் நிக்கோ தேமோஸ் ரவ்வல். கிறிஸ்தவ குடும்பத்தில் தோன்றியவர். இவருடன் பிறந்தவர் பெண்பால் இருவர் ஆண்பால் அறுவர். இவர் நான்காவது பிள்ளையாவார். மொத்தம் 9 பிள்ளைகள். செல்வச்சிறப்பு கல்விச்சிறப்பு பண்புச் சிறப்பும் மிக்க குலத்திலே பிறந்தவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை வங்காலை புனித றோ.க பாட சாலையில் (இன்றைய மன். புனித ஆனால் ம.ம.வி) பயின்றார். பின்னர் மன்னார் எருக்கலம்பிட்டி ம.ம.வியிலும் அநுராதபுரம் சென் ஜோசப் பள்ளியிலும், கொழும்பு சிறிய குருமடம் நுகேகொட, யாழ் சென் ஹென்றிஸ் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் தனது கல்வியைத் தொடர்ந்தார். இளவாலை சென் ஹென்றீஸ் கல்லூரியில் க.பொ.த உயர்தரத்தில் சித்திபெற்று பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு தெரிவானார். மிகத் திறமைவாய்ந்த மாணவனாக பாடசாலை காலத்தில் திகழ்ந்தமையால் இரட்டிப்பு தர உயர்வு பெற்று மிகக் குறைந்த வயதிலேயே பல்கலைக்கழகம் சென்றார்.

கொழும்பு நுகேகொட சிறிய குரு மடத்தில் கத்தோலிக்க குருவாக பயில்வதற்கு பெற்றோரால் அங்கு சேர்க்கப்பட்ட இவர் இடையில் அங்கிருந்து வெளியேறி இளவாலை சென் ஹென்றிஸ் கல்லூரியில் கற்று அங்கிருந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவானார்.

இவர் பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொண்ட காலத்தில் இவருக்கு நெருப்புக் காய்ச்சல் ஏற்பட்டது. பௌத்த பிக்கு ஒருவர் சிகிச்சை செய்து குணப்படுத்தினார். இச்சம்பவம்

*அறியாமையைத் தவிர வேறு இருள் கிடையாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது வாழ்வில் திருப்பத்தை ஏற்படுத்தியது தவநெறியில் தலைப்பட்டார்.

அதாவது முத்தமிழை ஓதித் தளராதே என்று அருணகிரிநாதர் கூறியதுபோல பல்கலைக்கழகக் கல்வியை துச்சமென மதித்து அதனையும் உலக வாழ்வையும் துறந்து பௌத்த துறவியானார். அதாவது லௌகீக வாழ்க்கைப் பயணத்தை முடிவுறுத்திய நிக்கோ தேமோஸ் ரவ்வல் ஆன்மீக பயணத்துள் நுழைந்து ஞான தேவன் ஆகினார். ஞானதேவன் என்பது இவரது தீட்சா நாமமாகும்.

டொடந்துவ என்ற இடத்திலுள்ள ஆச்சிரமத்தில் பௌத்த துறவியாகவிருந்த போது ஆழ்ந்த தியானத்திலிருப்பார். இவ் ஆச்சிரமத்தில் இவரின் குருவாக விளங்கியவர். ஜேர்மன் நாட்டவரான "ஞான போனிக்க" என்ற தேரராவர். இவராலேயே ஞானதேவன் என்ற தீட்சா நாமம் நிக்கோ தேமோஸ் ரவ்வல் அவர்களிற்கு சூட்டப்பட்டது.

ஞானதேவன் சுவாமிகள் சிறுவனாக இருந்த காலத்தில் மிகவும் அழகான தோற்றமும் சுறுசுறுப்புடையவராகவும் இருந்தார். சிவந்தமேனி, சுருட்டை முடி, இரக்க சுபாவம், அறநெறி நிற்றல், பெற்றோர் சொல் தட்டாமையாகிய பண்புகள் இயல்பாகவே ஒன்றித்திருந்து அழகு செய்தன. இதற்கப்பால் அழுக்கறுத்த தூய சிந்தை அந்தண்மை, அடக்கம் என்பவற்றை அணியாகக் கொண்ட புனிதராகவும் மிளிர்ந்தார். இம் மேலான பண்பியல்புகளை இவரின் வாழ்க்கைச் சுவடுகள் அடையாளப்படுத்துகின்றன.

சுவாமிகள் சிறுவனாக இருந்த காலத்தில் ஒருமுறை இவரது தாய், வயலில் வேலை செய்து கொண்டிருந்த இவரது தந்தைக்குச் சாப்பாட்டினை ஓடிப்போய்க் கொடுத்து வருமாறு கூற இரண்டரைக் கிலோ மீற்றர் தூரம் வரையான வயலிற்கு ஓடிப் போய் சாப்பாட்டைக் கொடுத்துவிட்டு ஓடி வந்துள்ளார். பெருமூச்செறிந்து நின்ற மகனைப் பார்த்து ஏன் களைத்துப் போயிருக்கிறாய் எனத் தாய்கேட்டபோது நீங்கள் தானே ஓடிப்போய் ஓடிவா என்று கூறினீர்கள் அதுபடியே செய்தேன் என்றாராம்.

சுவாமிகள் சிறுவனாய் இருந்த காலத்தில் ஒருநாள் இரவு படுத்துறங்கும் போது நடுநிசியளவில் இவரது தந்தையின் கனவில் உனது கால் உதைக்கும் பிள்ளை புனிதமானது உதைக்காதே என ஒருவர் கூற திடுக்கிட்டு விழித்துப் பார்த்தபோது தனது கால்களுக்கிடையில் ஞானதேவன் கிடந்ததைக் கண்டு வியந்துபோனார். பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள் மாசறு காட்சியர் என்று சேக்கிழார் சுவாமிகள் கூறுவது போல அழுக்கறுத்த தூயசிந்தையுடைய பரிசுத்தராக ஞானதேவன் சுவாமிகள் விளங்கினார்.

சுவாமிகள் மகியங்கனைக் காட்டுப் பகுதியில் குகைகளில் ஆழ்ந்த தியானத்தில் இருப்பாராம். இவ்வாறு தியானத்திலிருக்கும் போது சிறுத்தைகள் இவரை முகர்ந்து செல்லுமாம். ஒன்றும் செய்யாதாம். சைவ சித்தாந்தக் கோட்பாட்டுப்படி உடலிற்குள் உயிரிருக்கின்றது. உயிருக்குள் இறைவன் தோன்றாத் துணையாக இருக்கின்றான். புனிதருக்குள் ஆன்மாவைச் செயற்படுத்துவது இறைவனே இத்தகையோரை விலங்கினங்கள்கூட ஒன்றும் செய்யா.

ஞானதேவன் சுவாமிகள் துறவுநிலை பூண்ட பின்பு பல மதக் கடலுக்குட்புகுந்து உண்மை மணிகள் பலவற்றை திரட்டி வைத்த பண்டாரமாகத் (பண்டகசாலை) திகழ்ந்தவர். கிறிஸ்தவம், இஸ்லாம், பௌத்தம், சமணம், இந்து ஆகிய மதங்களை நனி நுணுகி ஆராய்ந்தவர். கிரேக்கம், பாளி, சமஸ்கிருதம், தமிழ் ஆகியவற்றில் ஆழ்ந்த

*சிந்தனை மூடநம்பிக்கையின் எதிரி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலமை உடையவராக விளங்கினார். இவர் வாசித்த நூல்கள் ஏராளம் ஏராளம். முற் குறிப்பிட்ட மதம் சார்ந்த நூல்கள், வேத, ஆகம, சித்தாந்த தத்துவநூல்கள், பிற தத்துவநூல்கள், அர்த்த சாஸ்திரம் என நூல் மலையை ஆய்ந்த சிறந்த ஞானசீல மாகத் திகழ்ந்தவர். இவர் வாசித்த நூல்கள் பலவற்றிலும் குறிப்புகள் எழுதியிருந்தமை பொறுமையாக ஆயிரக்கணக்கான அவ்வளவு நூல்களையும் வாசித்தமையைச் சான்று பகருகின்றது.

பதி, பசு, பாசம் என்ற முப் பொருட்களும் என்றும் உள்ளவை என்ற கொள்கையுடைய சித்தாந்த தத்துவ சமயத் தைத் தழுவிய ஞானதேவன் சுவாமிகள் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆல யத்தின் அடியார் பசிப்பிணி தீர்க்கும் அன்ன தான வைபவத்தைத் தினமும் நடத்திவரு கின்றதும், சமய நிகழ்வுகள், சமயம் சார்பான நூல் வெளியீடுகள், அறப்பணிகள் எனப் பலவகையிலும் பன்மைத் தொண்டாற்றி வரும் வணக்கத்திற்குரிய மோகனதாஸ் சுவாமிகளின் ஆச்சிரமத்தில் நீண்டகாலமாக இருந்து தவப்பணியாற்றியவர். இவர் இங் கிருந்து வெளியேறி பிற இடங்கள் சென்று வருவார். ஆனாலும் அடிக்கடி சந்நிதியான் ஆச்சிரமத்திற்கு வரத் தவறுவதில்லை. சந்நிதியான் ஆச்சிரமமும் மாதம் மாதம் குறித்த தொகைப் பணத்தை இவரது வங்கிக் கணக்கிற்கு அனுப்பி வந்தது. ஞான தேவன் சுவாமிகளைத் தாங்கி நின்ற தசைப் பொதி இயல்புநிலையில் தளர்வுற்றது. உல கியல் நடைமுறைக்கமைய வைத்திய சாலையை உறவினர் நாடினர். வைத்திய சாலையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. வைத்தியசாலையில் அளிக்கப்பட்ட சிகிச்சை பயனளிக்காத நிலையில் அவரது ஆன்மா பஞ்சபூதங்களான தேகத்தைவிட்டு நீங்கியது. சுவாமிகள் 13.12.2017 அன்று ஞான சமாதி அடைந்தார்.

அவர் உயிரோடு இருந்த காலத்தில் ஐந்து தரம் இவ்வுலகில் மீண்டும் பிறப்பேன் எனக் கூறினாராம். சுவாமிகளினுடைய அவ தாரம் எங்கோ எப்போது நிகழும் என்பது உறுதியானதாகும்.

காவியுடுத்தும் தாழ் சடை வைத்தும் காடுகள் புக்கும் தடுமாறிக் காய்கனி துய்த் தும் காயமொறுத்தும் காசினி முற்றும் திரி யாதே என்ற அருணகிரியாரது வாக்கிற்கிணங்க மிகவும் எளிமையான கோலத்தோடும் சீவனொடுக்கம் பூதவொடுக்கப் தேறவுதிக்கும் பரஞானம் என்ற தோற்றப்பொலிவோடும் வாழ்ந்த மெஞ்ஞானதேவனாக மிளிர்ந்தார் எனின் மிகையன்று.

பலவகை மதக்கடலுட் புகுந்து சைவ சமயம் மெய்ச்சமயம் என சைவத்தின் பெருமைக்கு வளமூட்டிய ஞானதேவன் சுவாமி களின் சமாதித்தினத்தை சந்நிதியான் ஆச் சிரமம் அனுஷ்டிக்க வேண்டுமென்பது சைவப் பெருமக்களது வேணவாவாகும். வணக்கத்திற்குரிய மோகனதாஸ் சுவாமிகள் சைவப் பெருமக்களது இவ் விருப்பத்திற்கு செயல்வடிவம் கொடுப்பார் என்பது திண்ணம்.

சந்நிதியான் ஆச்சிரமத்திலே ஞான தேவன் சுவாமிகளின் திருவுருவப்படம் ஞானி யர் வரிசையில் வைக்கப்பட்டுள்ளது. சுவாமி களது உடன் பிறப்புக்களான சகோதரர் முன்னாள் வலயக் கல்விப் பணிப்பாளர் (மன்னார் வலயம்) திரு ம.ஆ. றெவ்வல் அவர்களும் அவர்தம் பாரியாரும், சகோதரி ஒருவரும் கலந்து சிறப்பித்தமை அவர்கள் பிற மதங்களை மதிக்கின்ற மேலான பண் பினை எடுத்துக் காட்டுகின்றது. இந்துக்கள் சார்பிலும் சந்நிதியான் ஆச்சிரமம் சார்பிலும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.**

*வெற்றி எண்ணத்தைப் பொறுத்தே அமைகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இது உணவல்ல மருந்து

– **திருமதி வ. தபேந்திரநாதன்** அவர்கள் –

சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் அன்னதானப் பணியினை உலக மக்கள் அனைவரும் வியந்து பேசுகின்ற நிலையில் அண்மையில் இடம்பெற்ற சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகளின் அன்னதான நிகழ்வு பற்றி...

சந்நிதியான் ஆச்சிரமத்தில் அன்னதான நிகழ்வுகள் இடம்பெறுகின்ற நேரங்களில் ஐயா சாதாரண நேரங்களில் செயற்படுவதுபோல் அல்லாது அவரின் செயற்பாடுகள் அனைத்தும் சற்று வித்தியாசமாகவே இருக்கும்.

31.08.2018 அன்று வெள்ளிக்கிழமை சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்ட யாழ் மாநகர சபையின் கௌரவிப்பு நிகழ்வும் ஐயாவின் 69ஆவது பிறந்த தின நிகழ்வும் நிறைவடைந்த பின்னர் அன்னதான நிகழ்வு ஆரம்பமாகியது. நீண்ட நிரலில் அடியவர்கள் அன்னதானக் கந்தனின் அன்னத்தை ஒரு பிடியாவது உண்ணவேண்டும் எனக் காத்து நிற்கின்றார்கள். இவ்வரிசையில் எனது மாமாவின் மகன் மனைவி எனக் கைக்குழந்தையுடன் அவர்களும் வரிசையில் நிற்கின்றார்கள். நான் அவர்களின் வருகையைக் கண்டு மகிழ்ச்சியடைந் தாலும் குழந்தையுடன் நிற்கின்றார்கள் என்ற மன ஆதங்கம் என்னுள் இழையோடியது. ஆனாலும் மறு நிமிடமே எனது ஆழ்மனம் சொல்கின்றது "சந்நிதியானின் அடியவர்கள் அனைவரும் உன் உறவினரே" என்றது. அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு சென்றுவிட்டேன்.

மறுநாள், எனது உறவினரின் மகளின் பூப்புனித நீராட்டு விழாவில் கலந்துகொள்வதற்காகச் சென்றிருந்தேன். எனது மாமாவின் மகனும் அங்கு வந்திருந்தார். எனக்கு மீண்டும் நேற்றைய நினைவுகள் மனதில் மலர "தம்பி நேற்று குழந்தையுடன் நீங்கள் நீண்ட நேரம் காத்திருந்தீர்கள். அது எனக்கு சற்றுச் சங்கடமாக இருந்தாலும் ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமன்தானே" என்று பேச்சை ஆரம்பித்தேன். "இல்லை அக்கா நீங்கள் கேட்டிருந்தாலும் நாங்கள் வந்திருக்க மாட்டோம். அங்கு அப்படிக் காத்திருந்து சாப்பிட வேண்டும் என்பதுதான் எமது விருப்பம். ஏனெனில் என்னுடைய வாழ்க்கையில் அண்மையில் நடந்த சம்பவம் ஒன்று என்னால் மறக்க முடியாதது.

இரண்டு மாதங்களிற்கு முன்பு நானும் எனது நண்பனும் சந்நிதியானைத் தரிசித்துவிட்டு ஆச்சிரமத்தில் உணவு உண்பதற்காக அமர்ந்திருந்தோம். உணவு பரிமாறப்பட்டது. நாம் சாப்பிட்டுக்கொண்டிருந்த சமயம், எனது நண்பனின் இலையில் அதிகளவு உணவு இருப்பதை அவதானித்த மோகன் சுவாமி அவர்கள் எம் அருகே வந்து "இது உணவல்ல மருந்து" மீத மாக வைக்கக்கூடாது என்றார். சுவாமிகளின் இக்கூற்றில் நூறு வீதமும் உண்மையிருக்கிறது. "அன்னப் பணிக்காக யாரிடமும் தேடி ஓடி உதவி கேட்காமல்- அவரவர் தாமாகவே முன்வந்து பணமாகவும்- உணவுப் பொருட்களாகவும் தந்துதவுவது முருகன் கொடுக்கும் மருந்து" என்பதையே சுவாமிகள் சுட்டிக் காட்டினார்.

சுவாமிகள் "இது உணவல்ல மருந்து" என அழுத்திக் கூறியதும் எனது நண்பன், "இப்படிச் சட்டம் போடுவார் என்றால் நான் சாப்பிட வந்திருக்க மாட்டேன்" எனக் கூறிவிட்டு

*அதிகமாகப் பேசுவதால் மட்டும் ஒருவன் அறிஞனாகமாட்டான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு அருந்துவதை நிறுத்தி உடன் எழுந்துவிட்டார். சுவாமிகள் சொன்னார், "தம்பி! இதன் பலனை ஒருநாளைக்கு உணர்ந்து கண்ணீர் சிந்தவேண்டி வரும் என்றார்". நான் எதுவுமே கதைக்க முடியவில்லை. நிதானமாக அனைத்து உணவினையும் உண்டுவிட்டுப் புறப்பட்டோம்.

நாட்கள் நகர்ந்தன. வெளிநாடு செல்லப் புறப்பட்ட அதே நண்பனின் தொலைபேசி அழைப்பு, "நிஷா! அன்று ஆச்சிரம மோகன் சுவாமி சொன்னார் நீ ஒருநாள் என்றாலும் உணவின்றி கஷ்டப்படுவாய் என்று. எனக்கு மூன்று நாட்களாக உணவு கிடைக்கவில்லை. நான் ஒவ்வொரு நிமிடமும் அவரை நினைந்து கண்ணீர் விடுகின்றேன்" என எனது மாமாவின் மகன் கூறி முடித்தார்.


இவ்வாறு ஐயா சாதாரண உரைநடையில் கூறுகின்ற ஒவ்வொரு வார்த்தைகளும் சந்நிதியானின் வாக்காகவே அமைகின்றது. இவைபோல் எவ்வளவோ விடயங்களை அவதானித்து வருகின்ற அடியார் கூட்டம் ஏராளம்.

இவ்வாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் வழங்கப்படும் உணவு மருந்துதான் என்பதனை உணர்த்திய இன்னும் ஓர் சம்பவத்தை அடுத்த மலரில் எழுதுவதற்கு சந்நிதியானின் அருளும் குருநாதனின் அருளும் கூடிநிற்க எழுத விளைகின்றேன்.

## வாழ்த்துகிறோம்

எம்மோடு நீண்டகாலமாக இணைந்திருந்து தன்னாலானவரை சந்நிதியான் ஆச்சிரமச் செயற்பாடுகளுக்குத் துணைநிற்கும் திரு தணிகாசலம் கணேசமூர்த்தி அவர்கள் இலங்கை வங்கிச் சேவையிலிருந்து தமது 60வயதில் ஓய்வு பெறுவதையிட்டும், 13.09.2018இல் தமது 61ஆவது வயதில் காலடி வைப்பதையிட்டும் திரு த. கணேசமூர்த்தி அவர்களுக்கு மனமகிழ்வுடன் கூடிய ஆசிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தமது ஓய்வு காலத்தில் இறை பணியுடன்கூடிய பொது சேவைக்கு முன்னுரிமை அளித்து சேவையாற்ற எல்லாம் வல்ல சந்நிதி வேலவன் துணை நிற்க வேண்டுகிறோம்.



சந்நிதியான் ஆச்சிரமம்

28.09.2018

சைவ கலை பண்பாட்டுப் பேரவை.

*நல்லொழுக்கம் இல்லாதவனை வேதங்கள் புனிதமாக்கிவிடாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர் -12)

# சமய வாழ்வு

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

திருமணத்தில் தொடங்கி அவனுடைய கிரகஸ்த வாழ்க்கை ஆரம்பமாகிறது. மனைவியும் கணவனும் ஒருவருக்கொருவர் துரோகம் செய்யாமல் விசுவாசமாக நடந்துகொள்ள வேண்டும் என்பது இந்து மதத்தின் கண்டிப்பான கோட்பாடாகும்.

கிரகஸ்தனின் கடமைகளுள் முக்கியமான ஒன்று குழந்தைகளைப் பெறுவதாகும். வம்ச விருத்திக்கு மட்டும் சொல்லப்பட்ட விடயமல்ல இது. ஒரு ஆணின் வாழ்க்கையினையும் பெண்ணின் வாழ்க்கையினையும் குழந்தைகள்தான் முழுமைபெறச் செய்கின்றனர்.

தாய்மைப்பேறு அடையாத எந்தப் பெண்ணும் பெண்மையின் பூரணத்துவத்தை எய்துவதில்லை. குழந்தைகள் பெறாத எந்தத் தகப்பனும் ஆண்மையின் முழு நிறைவை அடைவதில்லை. எனவேதான் கிரகஸ்த தர்மத்தில் புத்திரப்பேறு முக்கியமான விடயமாகக் கருதப்பட்டது.

குடும்ப வாழ்க்கையில் ஒருவன் எந்த அளவுக்கு வெற்றி பெறுகிறானோ அதைப் பொறுத்தே அவனுடைய வாழ்க்கை வெற்றியும் மதிப்பிடப்படும். குடும்ப வாழ்க்கை என்பது ஆண்- பெண் இருவரும் ஒரே இடத்தில் சேர்ந்து வசிப்பது என்று மட்டும் ஆகிவிடாது. பெண்ணை ஆணும்; ஆணைப் பெண்ணும் புரிந்து வாழ்வதுதான் குடும்ப வாழ்க்கை. ஒருவரை ஒருவர் சரிவரப் புரிந்துகொள்ளாத போது பிணக்குகள் தோன்றுகின்றன. விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இல்லாதபோது பிணக்குகள் சண்டை சச்சரவுகளாகி, மன முறிவுக்கும், மண முறிவுக்கும் காரணமாகி வருகிறது. கிரகஸ்த தர்மத்தில் கணவனும் மனைவியும் பிரிந்து வாழ்கின்ற பேச்சுக்கே இடமில்லை.

கிரகஸ்த தர்மத்தை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றி, குழந்தைகள் பெரியவர்கள் ஆகும்வரை அவர்களைக் காப்பாற்றி வளர்க்கின்ற பொறுப்பு ஒவ்வொரு இல்லறத்தானுக்கும் உண்டு. குழந்தைகள் பெரியவர்கள் ஆனபின் அவர்கள் சொந்தக்காலில் நிற்கும் படியாகப் பார்த்துக்கொண்டு ஒதுங்கி வாழ்வது தான் வானப்பிரஸ்த நிலை எனப்படுகிறது. அதாவது இந்த நிலையில் குடும்பத் தலைவன், குடும்பத்தில் ஒருவனாக வாழ்ந்தாலும், குடும்பக் காரியங்கள் ஒவ்வொன்றிலும் தலையிடாமல் ஒதுங்கிவாழ்வது அவசியம். இந்துக்கள் கண்டுபிடித்த அருமையான குடும்ப ஏற்பாடு இதுவாகும்.

எத்தனையோ குடும்பங்களில் குழந்தைகளின் சுதந்திரத்தை மதிக்காமல் பெற்றோர்கள் தலையிடுவதனால் விளைகின்ற குழப்பங்களை எண்ணிப் பார்த்தால், இந்த ஏற்பாட்டின் அருமை புரியும். குழந்தைகளை வாழ்க்கைக்குத் தயார் செய்வதுதான் பெற்றோர்களின் கடமை. அதற்குப் பிறகு அவர்களின் வாழ்க்கைப் போக்கை அவர்களே நிர்ணயித்துக்கொள்ள விட்டுவிடவேண்டும். வானப்பிரஸ்த நிலை என்பது பெற்றோர்களுக்கு உணர்த்துகின்ற நீதி இதுவாகும். நமது முன்னோர்கள் வானப்பிரஸ்த நிலையில் இருந்தவர்கள். குடும்பத்தை விட்டு விலகி எஸ்தல யாத்திரைகளை மேற்கொண்டார்கள்.

*முழுமையான தியாகத்துக்குப் பின்னர் கிடைப்பதே வெற்றி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பக் காரியங்களின் பொறுப்பை விட்டு விலகி ஆன்மீக விடயங்களில் முழுக் கவனம் செலுத்துவதையே தங்களுடைய வாழ்க்கை ஆக்கிக் கொண்டார்கள்.

இந்தக் காலத்தில் இப்படி இருப்பது சாத்தியமில்லாமல் இருக்கலாம். வானப் பிரஸ்த நிலையில் சில மாற்றங்கள் தேவைப் படலாம். குடும்பத்தைவிட்டு முற்றிலும் விலகி இருக்க முடியாவிட்டாலும் பிள்ளை களின் வாழ்க்கையில் தேவையில்லாமல் குறுக்கிட்டு குழப்பம் விளைவிக்காமலாவது இருக்கலாம். ஆனால் வானப்பிரஸ்த நிலை இன்றைக்கும் பொருந்தும். இந்துமதம் உணர்த்துகின்ற இந்த வாழ்க்கை உண்மை யினை சரிவரப் புரிந்து கொள்ளாத பெற்றோர் கள் பலர் பிள்ளைகளுக்கும் உபத்திரவ மாகி, தங்களுக்கும் உபத்திரவம் தேடிக் கொள்வதுண்டு. வானப்பிரஸ்த நிலை இதைத் தவிர்க்கும்படி உபதேசிக்கின்றது.

வயது வந்த பெற்றோர்கள் எப்போ தும் வீட்டுக்குள்ளேயே வளைய வந்து கொண்டிருந்தால், வீட்டிலுள்ள இளம் தம்பதி யர்கள் சந்தோஷமாகத் தனிமையில் பொழு தைக் கழிக்க முடியாத நிலைமை தோன்றி விடுகிறது. கோயில், குளம் என்று அவர்கள் போய்க்கொண்டிருந்தால் வீட்டில் உள்ள இளைய தலைமுறையினருக்கு சுதந்திரமாக மூச்சுவிடுவதற்கு அவகாசமாவது கிடைக் கும். தவிர எல்லா விடயங்களுக்கும் வயது வந்த பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள்தான் வழிகாட்ட வேண்டும் என்கின்ற நிலை இருந் தால், இளைய தலைமுறையினர் தாங்க ளாகச் சிந்தித்து முடிவெடுக்கின்ற வாய்ப்பே இல்லாமல் போய், அதற்கும் மற்றவர்களைச் சார்ந்திருக்கின்ற பழக்கத்துக்கு ஆளாகிவிடு கிறார்கள். இது அவர்களுக்கும் நல்லதல்ல, குடும்பத்துக்கும் நல்லதல்ல. இதைத் தவிர்க் கவே பெற்றோர்கள் ஒரு கட்டத்தில் வானப் பிரஸ்த நிலையினை மேற்கொள்ளவேண்டும் என இந்து மதம் வற்புறுத்துகிறது.

இன்றைய காலத்தில் திருமண பந் தத்தில் இணைந்த, இளையவர்களை தனிக் குடித்தனம் அமைத்து தனியாக வாழும்படி செய்கிறார்கள். இந்த ஏற்பாடு சரியானதா? என்ற கேள்வியுள்ளது. இதற்குப் பதிலாக அமையும் நிலை வானப்பிரஸ்தம் எனக் கருது கிறேன். இளையவர்களுக்குரிய தனிமையும் சிந்தித்து வாழும் நிலையையும் கருதிய வாழ்க்கை நெறியாக அமைகிறது.

எல்லாம் அனுபவித்து முடிந்த பிறகு ஒருவன் சந்நியாச நிலையை மேற்கொள்ள வேண்டும் என நமது மதம் கூறுகிறது. அதா வது குடும்ப வாழ்க்கையினைச் செம்மை யாக நடத்தி முடித்த பிறகு, பற்றற்ற நிலைக்கு ஒருவன் செல்லுவதே சந்நியாச வாழ்க்கை ஆகும். சில சாமிமார்களை நான் பார்த்திருக் கிறேன், "நீங்கள் ஏன் சாமியார் ஆனீர்கள்" எனக் கேட்டால், "பொண்டாட்டி சரியில்லை, சாமியாராகி விட்டேன்" என்று சொல்லுவார் கள். இன்னும் சில சாமியார்கள், "மருமகள் பேச்சைக்கேட்டுக்கொண்டு என் மகன் வீட்டில் இருந்து என்னை விரட்டி விட்டான். ஆகவே வேறு வழியில்லாமல் சாமியாராகி விட்டேன்" எனச் சொல்லுவார்கள். (இத்தகையவர்களில் பலர் நமது நாட்டு முதியோர் இல்லங்களில் இருப்பதைக் காணலாம்.) இந்தியாவில் பல சாமியார்கள் கிரிமினல் குற்றங்கள் செய்து விட்டு காவல்துறையினரின் கண்ணுக்கு அகப் படாமல் தலைமறைவாகத் திரிவதற்காக சாமியார்களாக மாறிவிட்டார்கள். இப்படிச் சாமியார்களில் எத்தனையோ வகைகள் இருக் கிறார்கள். இவர்கள் எல்லோரும் வாழ்க்கை யில் ஏற்பட்ட ஏதோ ஒரு விரக்தியின் காரணமாக சாமியார் ஆனவர்கள். இந்துமதம் போதிக்கும் சந்நியாச நிலை இதுவல்ல. குடும்ப வாழ்க்கையை வெற்றிகரமாக நடத்திவிட்டு,

*நன்றாக நடத்தினாலும்கூட, தீயவர்கள் தீமையையே செய்வர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகுந்த ஆத்ம திருப்தியுடன் தங்களுடைய ஆத்ம விடுதலைக்காகவும் சமுதாயத்தின் நலன் கருதியும் பற்றற்ற வாழ்க்கையினை மேற்கொள்கின்ற நிலையே உண்மையான சந்நியாச நிலையாகும்.

குடும்பத்தில் வாழ்ந்தபோது பாசத்திற்காக வாழ்ந்தவர்கள், சந்நியாசி ஆகிவிட்ட நிலையில் அன்புக்காக வாழ்கிறார்கள்; அருளுக்காக வாழ்கிறார்கள்; ஆத்ம விடுதலைக்காக வாழ்கிறார்கள். இல்லற தர்மத்தின் உன்னத நிலையாக சந்நியாசத்தை இந்துமதம் எடுத்துக் காட்டுகின்றது. பிறவியின் ஆரம்பம் இல்லற வாழ்க்கையில் இருக்கலாம். பிறப்பின் இறுதி சந்நியாசத்தில் முடியவேண்டும். இதுவே இந்துமதம் உணர்த்தும் வாழ்க்கை அழகு.

ஞானி டால்ஸ்டாய் எழுதிய அருமையான கதையொன்று இப்போது என் நினைவுக்கு வருகிறது.

ஒரு இளைஞன் ஒரு பெண்ணைக் காதலித்தான். சந்தர்ப்ப சூழ்நிலைகளால் அவள் வேறு ஒருவனைத் திருமணம் செய்து கொள்கிறாள். விரக்தி அடைந்த அந்த இளைஞன் மத விடயங்களில் தன்னுடைய கவனத்தைச் செலுத்தத் தொடங்குகிறான். பாதிரியார் பயிற்சிக்கான பள்ளியில் பயின்று பாதிரியார் ஆகின்றான். ஒரு கிறிஸ்துவ மடத்தில் தன்னுடைய பணிக்கான பயிற்சியைப் பெறுகிறான். அங்கே துறவு வாழ்க்கையினை மேற்கொள்ள இருக்கின்றவர்களிடம் ஏற்படுகின்ற பொறாமையையும் பதவிச் சண்டையும் அவனுடைய விரக்தியை மேலும் அதிகம் ஆக்குகின்றன.

அங்கே நடைபெறுகின்ற பல ஊழல்களைப் பார்த்து அவன் வேதனை அடைகிறான். கடைசியாகக் கிறிஸ்துவ மத நிறுவனம் நடத்துகின்ற ஒரு கிளைக்குப் பாதிரியாராக அவன் அனுப்பி வைக்கப்படுகின்றான். அவனுக்கு முன் அங்கு பொறுப்பில் இருந்த பாதிரியார் காலமாகி விட்டார். அந்தப் பொறுப்புக்கு அவன் நியமிக்கப்படுகிறான். (தொடரும்...



சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற சமுதாயப் பணிகளின் வரிசையில் பார்வை குறைந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழும் ஒருவருக்கு ஆச்சிரமத்தினால் வழங்கப்பட்ட மூக்குக் கண்ணாடியை செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள் கையளிக்கும் நிகழ்வு.

குடும்பத்தின் புகழைப் பரப்புவோனே நன்மகன் ஆவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனை செய் மனமே!

– **திரு இ. சரவணபவன்** அவர்கள் –

ஆலயம் செல்லும்போது அடிப்படை ஆடையோடு செல்வது நன்று. ஏனென்றால் உள்ளே, வெளியே என்ன இருக்கும் என்று கடவுளுக்குத் தெரியும். ஆகவே ஆடை அணிகலன் ஆடம்பரமும் ஆண்டவன் விரும்புவதில்லை என்பதுபோல் உணர்வுபூர்வ பக்தியோடு வணங்குவதற்கு சாதாரண ஆடை மட்டும் போதும்.

ஆடை ஆபரங்களால் தேகத்தை மூடி மறைப்பதைவிட உள்ளத்தைத் திறந்து உயிர்களை மதித்து, உணர்வளித்து, உபசரித்து பிச்சை என்று கேட்போருக்கு உதவி, புண்ணியத்தைத் தேடி சந்ததியை வாழ வைப்போம்.

சிவனின் உடலில் புலித்தோலாடையும் முருகனின் உடலில் வெறும் கோவணமும் ஏனை தெய்வங்கள் வெறும் நாலுமுழ வேட்டியும் அணிந்துதான் அனைத்து உயிர்களையும் காக்கின்றனர். நம்மைப் படைத்த கடவுளே சாதாரண ஆடையுடன் இருக்கும்போது நாம் மட்டும் ஏன் ஆடம்பரம் காட்டவேண்டும். ஆலயம் சென்று வரம் கேட்பவர்களில் ஏழைகளே அதிகம் காணப்படுவர். நம்மவர்களில் சிலர் வசதியிருக்கென்று ஆணவம், அகம்பாவம் கொண்டிருப்பார்கள். ஆலயத்தில் ஒன்றுக்கும் வழி இல்லாமல் சில ஏழைகள் கடவுளைக் கையேந்தி உள்ளார்கள். அப்படியிருக்கும்போது நகைகளை அள்ளி அடுக்கிப் போட்டுக்கொண்டு புதுப் புடைவை கட்டி அலங்கரிப்பது நியாயமா? கடவுளுக்கு அடுக்குமா?

பாடசாலையிலே அனைத்து மாணவர்களும் ஒரே நிற ஆடை அணிகிறார்கள். நகைகள்போட அனுமதியும் கிடையாது. ஏழை மாணவர்களின் மனம் வேதனைபடக் கூடாதென்றுதான் பாடசாலையிலும் இதுபோன்ற சட்டங்கள் விதித்துள்ளனர். அதுபோல்தான் ஆலயம் செல்லும்போதும் சாதாரணமாக சென்று உணர்வுபூர்வமாக கடவுளை வழிபடவேண்டும். அதைத்தான் கடவுளும் விரும்புவார். உலகிலே பணக்காரன் அதிகமா? அல்லது ஏழைகள் அதிகமா? என்று கேட்டால் ஏழைகள்தான் அதிகம். அந்த ஏழைகள் தங்கள் கஷ்டங்களைக் கொட்டித் தீர்ப்பதற்கு கோயிலுக்குச் செல்வார்கள். கடன் வாங்கியாவது பொங்கல் படையல் வைப்பார்கள். அப்போது கடவுள் நம் கஷ்டங்களை தீர்க்காதா? என்று அப்படியொரு சூழலில் ஏழைகளின் உணர்வுகளை மதித்து அவர்களின் மனம் புண்படாதவாறு நடந்துகொள்ள வேண்டும். நம்மிடம் பணம் இருக்கென்று, நகைகள் இருக்கென்று காதைச்சுற்றி, கழுத்தைச் சுற்றி நகைகளை அணிய வேண்டாம். எதுவும் இல்லாதவர்கள் இதுபோன்று எங்களுக்கு நகைகள் கிடைக்காதா? என்று ஏங்குவார்கள். ஆகவே ஏழைகளின் வாழ்வு மலர வேண்டும். அதற்கு நம்மால் முடிந்த உதவிகளைச் செய்வோம்.

ஆலயங்களில் அநாதைகளாக வாழும் பெரியோர்களை உபசரித்து உணவழிப்போம். உடுக்க உடை கொடுப்போம். எங்களை விட்டு இறைபதம் அடைந்த உறவுகளை நினைத்து கோயில்களில் அன்னதானம் கொடுப்போம். மறைந்த உயிர்களை மகிழ வைப்போம். மோட்சமடையச் செய்வோம். எம்மால் நன்மைகளைச் செய்து கடவுள் தருவதைச் சந்தோசமாக ஏற்று மன நிறைவோடு வாழ்வோம்.

*செல்வம் வளரும் அளவு அதன்மீது பற்றும் வளரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் முன்னோர்கள் பேணிக் காத்து வந்த எங்கள் இனிய இந்துமதத்தைச் சீரழிந்து போகாமல் காத்து நின்று நம் பிள்ளைகளுக்கும் வருங்கால சந்ததியினருக்கும் வருங்கால சந்ததியினருக்கும் சொல்லிக் கொடுத்து ஆதி அந்தம் இல்லா இந்து மதத்தைக் கண்போல காத்து நிற்போம். அரசன் அன்று கொல்வான். தெய்வம் நின்று கொல்லும் என்பார்கள். அக்று அது பழைய பழமொழி. ஆனால் இன்று அப்படியல்ல. அநியாயங்களையும் அக்கிரமங்களையும் பார்த்துப் பொறுக்க முடியாமல் உடனுக்குடன் தண்டிக்கப் புறப்பட்டு விட்டார் கடவுள்.

நாம் யாருக்கு வேணுமென்றாலும் இந்த மண்ணில் கட்டுப்படாமல் வாழலாம். ஆனால் நம்மைப் படைத்த கடவுளுக்கு கட்டுப்பட்டே தீரவேண்டும். அவனின்றி ஓர் அணுவும் அசையாது. அவர்களைச் சீண்டினால் என்னவாகும் என்று அண்மையில் நடந்த ஆழிப்பேரலை சாட்சி. புல்லாய்ப் பூடாய் புழுவாய் பறவையாய் மிருகமாய் நம்மைப் படைக்கும் மனிதராய் பிறந்ததிற்கு நாம் என்ன புண்ணியம் செய்திருக்க வேண்டும். ஆகவே நாங்கள் செய்த பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும். இனிவரும் காலங்களில் தீயதை எண்ணாமல் பொறாமை கொள்ளாமல் அனைவரும் ஒன்றெனக் கலந்து கூன், குருடு, செவிடு யாவருக்கும் உதவி நின்று உறவுகளால் கைவிடப்பட்ட முதியோருக்குதவி நம் கிராமங்களில் பின்தங்கிய பாடசாலைகளை மேன்மையடையச் செய்து நம் வருங்காலச் சந்ததியினருக்கு கடவுள் பக்தியை உணர்த்துவோம்.

## வந்தருளைத் தந்திடுவான் வடிவேலன்!

**பல்லவி**

சிந்தையில் உறைந்திருக்கும் கந்தனைத் தினந்தினமும்
வந்தனை செய்வதெந்தன் முதல்வேலை! (சிந்தை)

**அநுபல்லவி**

செந்தமிழ்க் கடவுளவன் தந்திடும் அருளாலே
சந்ததமும் நான் தொடுப்பேன் பாமாலை! (சிந்தை)

**சரணம்**

முந்தை வினைபோக்கி முத்திதனை அளிப்பவனை,
எந்தன் மனைத் தெய்வமென ஏற்றி நிற்பேன்!
எந்த நிலைவந்தாலும் ஏதுகுறை நேர்ந்தாலும்
செந்தில் குமரனை நான் போற்றி நிற்பேன்!
(சிந்தை)

தந்தைக் குபதேசம் செய்த குருநாதன்!
சிந்தைகனிந் தெனக்கருளும் சிவபாலன்!
"கந்தா! குகா" என்றே கருதி வணங்கிடவே,
வந்தருளைத் தந்திடுவான் வடிவேலன்!
(சிந்தை)

- கி. குலசேகரன் -

பெருந்தன்மையான குணம் எல்லா நற்குணங்களுக்கும் ஆபரணம் போன்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்



ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



நேர்மையாக வாழ்தலே மனிதனுடைய கடமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



ராம தியானம் கங்கையில் மூழ்கி எழுவதற்குச் சமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



மன்னித்தல் என்பது சந்நியாசியின் உண்மைச் சுபாவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்முகனுக்கு ஒரு திருமனை அதுதான் திருவாசக அரண்மனை

– வல்வையூர் அப்பாண்ணா –

வான் கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து, பால் கலந்து, செழுங்கனித் தீஞ்சுவை கலந்து என்
ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே

-திருவாசகத்தின் பெருமைபேசிய வள்ளலாரின் பாடல் இது-

தேனினுமினிய திருவாசகத்திற்கு ஒரு அரண்மனை. திருவாசகத்தை அருளிய மாணிக்க வாசகருக்கு குருவடிவில் உபதேசித்த தென்முகக் கடவுளுக்கு ஒரு திருமனை. "ஆப்த நாதருக்கு" அழகான ஒரு கல்ரதம். இதுவே திருவாசக அரண்மனையின் பொதுத் தோற்றம்.

நமது மண்ணில் திருவாசக மடங்கள், திருவாசக மன்றங்கள் ஆகியன ஸ்தாபிதமாகி திருவாசகத்தின் பெருமை பேசும் இடங்களாக மிளிர்வதை நாம் காண்கின்றோம். சைவ சமயம் கற்பிக்கப்படுகின்ற சகல பாடசாலைகளிலும் வெள்ளிக்கிழமைகளில் சிவபுராணம் ஓதப்படுவதும், மரணக் கிரியைகளில் திருப்பொற்சுண்ணம் பாடப்படுவதும் வழமையானது. மார்கழி மாதத்தில்- அந்நாளில்- பிரதான கோவில்களில் மட்டுமே பாடப்பட்டு வந்த "திருவாசக முற்றோதல்" இன்று எல்லாக் கோவில்களிலும் பாடப்படுவதையும் கேட்கிறோம். இவை அனைத்துமே நமது வாழ்வியலுடன் "திருவாசகம்" தேனெனக் கலந்துவிட்டதையே காட்டுகிறது.

அண்மையில் சனநெருக்கடியற்ற ஒரு சாதாரண நாளில் சிவபூமி திருவாசக அரண் மனையையும் மையத்தில் அமைந்துள்ள சிவதெட்சணாமூர்த்தி திருக்கோவிலையும் தரிசிக்கும் பேறு பெற்றேன். தரிசனம் மட்டுமல்லாமல் சிவபூமி அறக்கட்டளையின் ஸ்தாபகர் திரு ஆறு. திரு முருகன் அவர்களின் மூத்த சகோதரர் திரு ஆறு. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி அவர்கள்மூலம் தகவல் களையும் பெறமுடிந்தமை அடியேனது திருக்கோவில் பயணத்தை முழுமையாக்கியது.

கருங்கல்லே கிடைக்காத தஞ்சை மாவட்டத்தில் கருங்கல்லில் கோபுரம் (கருவறை யின் விமானம்) அமைத்த இராஜராஜ சோழன் பெருமையை இன்றும் உலகம் போற்றிப் புகழ்கிறது. அதேபோல, மருந்துக்குக்கூட கருங்கல் கிடைக்காத யாழ் மண்ணில் கருங்கல்லில் கருவறை எழுப்பி, கருங்கல்லில் ரதம் அமைத்து, சிவபுராணம் முதல் அச்சோப் பதிகம் வரை யிலான 658 திருவாசக பாடல்ளையும் கருங்கல்லில் பதித்திருப்பது ஆறு. திருமுருகன் ஐயா அவர்களின் விடாமுயற்சிக்குக் கிடைத்த வெற்றியேயாகும்.

*திறமை என்பது ஓய்வுபெறும் வயதில்த்தான் பண்படுகிறது.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசக அரண்மனையின் வளாக வாசலும் - பிரதான வீதியும் மிக அருகே இருப்பதனால் வாகனத் தரிப்பிடம் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. பிரதோஷம், வியாழக்கிழமை, சிவராத்திரி போன்ற சிவ விரத நாட்களில் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய வாகன நெருக்கடியினைத் தவிர்க்க, அரண்மனை வளாகத்தின் கிழக்குப்புற வாசலருகே (சிறு வீதி அருகாக) வடக்குத் தெற்காக உள்ள வெற்றுக் காணியினைப் பெற்று, அதனை வாகனத் தரிப்பிடமாக மாற்றினால் மிகப் பொருத்தமாக அமையும் என்பது சிறியேனின் தாழ்மையான கருத்து.



திருவாசக அரண்மனையின் அகன்ற முகப்பு வாசல் சிறப்பான திராவிடக் கலை அம்சத்தின் வெளிப்பாடாகத் தெரிகிறது. வாசல் கடந்து உள்ளே வந்ததும் கற்தேருக்கு முன்பாக மேற்குத் திசையை நோக்கியபடி உள்ள நந்தி நம்மை வரவேற்கிறது. குறித்த நந்தி மேற்கு நோக்கியிருப்பதற்கான காரணம் புரியவில்லை. நந்தியின் பின்னே தனிக்கருங்கல்லில் உருவான 21 அடி உயரமான கற்தேர் - திருவாரூர் திருக்கோவிலில் உள்ள கற்தேர்போன்று அமைப்பில் பெரிதாக இல்லாவிடினும் அளவுப் பிரமாணங்களின்படி கனகச்சிதமாக அமைந்து பார்ப்போரை வியக்க வைக்கிறது. நீர்த் தொட்டியினுள்ளே பாதி வரை அமிழ்ந்தியுள்ள கற்தேரின் நான்கு சக்கரங்கள் முதல் தேரின் உச்சிவரை உள்ள ஒவ்வொரு அம்சமும் பார்த்துப் பார்த்து அழகுற அமைத்துள்ளார்கள். எண்கோண பீடத்தில் நிறுத்தப்பட்டுள்ள எட்டுத் தூண்களும்




*வெறும் போகத்துடன் திருப்தியடைந்துவிடாதே, யோகத்திலும் மனதைச் செலுத்து.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே உள்ள எண்கோண வடிவ பண்டிகையைத் தாங்கி நிற்க, பண்டிகையின் ஒவ்வொரு மூலையின் விளிம்பிலும் தொங்கிக் கொண்டிருக்கும் கற்சங்கிலி அழகு சேர்க்க, "ஆப்தநாதர்" லிங்க வடிவில் தெற்கு நோக்கி அமர்ந்திருக்க, பஞ்சலோக நாகம் படம் விரித்தபடி லிங்கத்தின் உச்சிமீது நிழல் கொடுக்க, அருகே மாணிக்க வாசகர் கூப்பிய கரங்களுடன் (கிழக்கு நோக்கி) ஆப்தநாதரை வணங்கி நிற்க கற்தேர் அழகுடன் மிளிர்கிறது. (மாணிக்கவாசகரை குருவடிவில் ஆட்கொண்ட திருப்பெருந்துறையில் அமர்ந்து அருளாட்சி புரியும் மூலவர் "ஆப்தநாதர்" ஆகும்.) இந்தக் கருங்கற் தேரினை அமைத்துக் கொடுத்த கொழும்பு மனிதநேய அறக்கட்டளைத் தலைவர் அபிராமி கயிலாசபிள்ளை அவர்களை சைவ உலகம் நன்றியோடு பாராட்டுகிறது. அவர்கள் பணி இன்னமும் தொடரவேண்டும்.



நமது பண்டைய பாரம்பரியத்தை நினைவு படுத்தும் வகையில் கிடுகினால் வேயப்பட்டு, அகன்று அரைவட்டமாக வளைந்து நிழலுடன்- நிறைவான குளிர்ச்சியையும் வழங்கும் கூரைப் பகுதி கற்தேர் அமைப்பின் பின்னே காணப்படுகிறது. அகன்ற சிவதெட்சணாமூர்த்தி ஆலயம் முதல் கற்தேர் வரையிலான எப்பகுதியையும் மறைக்காதபடி இவ் வளைவுப் பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பந்தலின்கீழ் சுமார் 20பேர் வரையிலான ஆண்களும் பெண்களும் வரிசையாக அமர்ந்தபடி "திருவாசகம்" ஓதிக் கொண்டிருந்தனர். இந்த "திருவாசக முற்றோதல்" நிகழ்வு அநேகமாகத் தினமும் இங்கு நடைபெறுவதாகவும் அறியமுடிந்தது. திருவாசகத்திற்கான அரண்மனையும், திருவாசகத்தை அருளிய மாணிக்கவாசகரைக் குரு வடிவில் ஆட்கொண்ட தென்முகக் கடவுளுக்கான திருக்கோவிலும் உள்ள இடத்தில் தினமும் திருவாசகம் தேனாகப் பாய்வது பொருத்தமானது ஒன்றே.



*ஆதரவற்றவர்களுக்கு உதவிக்கரம் நீட்டத் தயங்கவே கூடாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்முன்னே கருவறை தெரிகிறது. கல்லால மர நிழலில் முயலகன்மேல் வலது காலை ஊன்றி, இடதுகாலை மடித்தபடி சனகர், சனந்தரர், சனாதரர், சனக்குமாரர் ஆகிய நான்கு முனிவர்களுக்கும் உபதேசிக்கும் யோக நிலையில் சிவதெட்சணாமூர்த்தி அருள் பாலிக்கின்றார். (அவதானமாகப் பார்த்தால் முயலகன் அருகே பக்கத்திற்கு இருவராக இறைவன் காலடியில் முனிவர்கள் அமர்ந்திருப்பதைப் பார்க்கலாம்.) வழமையாக எல்லாச் சிவன் கோவில்களிலும் கருவறையின் தென் மாடத்தில் சிறிய மூர்த்தமாகக் காணப்படும் தென்முகக் கடவுள் இங்கே கருவறையில் மூலவராக - பெரிய மூர்த்தமாக - வேண்டுவார்க்கு வேண்டும் வரமருளும் சிவதெட்சணாமூர்த்தியாகத் திருவருள் பாலிக்கின்றார். கருவறை மாடங்களில் வேறு எந்தச் சொரூபங்களும் இல்லை. கருவறையின் மேற்பண்டிகையில் சுற்றிவர 108 சிவலிங்கங்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. லிங்கங்கள் தவிர வேறு எவ்வித சொரூப அமைப்புகளும் அங்கே இல்லை. கருவறையின் வாசலில் (துவார பாலகர்கள் இருக்கவேண்டிய இடத்தில்) சிறிய உருவ அமைப்பில் பஞ்சலோகத்தினாலான கணபதி வலது புறமும், முருகன் இடது புறமாகவும் அமர்ந்துள்ளனர். கருவறைக்கு முன்பாக தரைப்பகுதியில் (மண்டபத்தில் அல்ல) நந்தியும் பலிபீடமும் காணப்படுகிறது.



கட்டுமானப் பணிகளை உள்ளூர் ஒப்பந்தக்காரர் ஊரெழு கனகரெட்ணம் சண்முகநாதன் அவர்கள் செவ்வனே நிறைவு செய்துள்ளார். கிளிநொச்சி- விவேகானந்த நகர்- ஆனந்தன் வினோத் என்பவர் கருங்கற் பலகையில் திருவாசகம் முழுவதையும் பொறிக்கும் பணியினை அழகாக- அற்புதமாகச் செய்துள்ளார். கொழும்பிலிருந்தும்- நாவலப்பிட்டியிலிருந்தும் கொண்டு வரப்பட்ட 1" தடிப்பான கருங்கற் பலகைகளில் ஆனந்தன் வினோத் தலைமையில் பல மாத காலம் இங்கேயே தங்கியிருந்த 22 இளைஞர்களது இணையற்ற உழைப்பு திருவாசகத்தின் 658 பாடல்களும் முச்சார் மண்டபத்தின் மேற்கு- வடக்கு- கிழக்கு மூன்று சுவர்களையும் அலங்கரிக்கிறது. கருங்கல்லில் பொறித்த ஒவ்வொரு விரலுக்கும் மோதிரம் அணிவிக்கவேண்டும் என ஒரு பத்திரிகையில் வெளியான விமர்சகரின் கூற்று மிகச் சரியானதே. திருவாசகம் முழுவதும் கருங்கல்லில்- கையால்- உளிகொண்டு செதுக்கப்பட்ட வரலாறு எதிர்கால வரலாற்று ஆய்வாளர்களால் பேசப்படும் என்பதில் ஐயமில்லை. இந்த முயற்சியானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபூமி அறக்கட்டளைக்கும்- அதன் ஸ்தாபகர் திரு ஆறு. திருமுருகன் அவர்களுக்கும் பெருமை சேர்த்துள்ளது என்பதும் உண்மையானதே.

ஓட்டினால் வேயப்பட்ட 8' வரை அகலம் கொண்ட இந்த முச்சார் மண்டபத்தின் மேற்காக 10, வடக்காக 04, கிழக்காக 10 என தூண்கள் காணப்படுகின்றன. இந்தத் தூண்களுக்கிடையே உள்ள ஒவ்வொரு இடைவெளியிலும் 4 லிங்கங்களாக 92 லிங்கங்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. சிவதெட்சணாமூர்த்தி ஆலய மண்டபம் 12 தூண்களைக் கொண்டது. கருவறை வாசல் உள்ள தெற்கும் - வடக்கும் கழிய, மேற்கேயும் கிழக்கேயும் ஒவ்வொரு இடைவெளிக்கும் 4 லிங்கங்கள் வீதம் 16 லிங்கங்களுமாக (92+16) மொத்தம் 108 லிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. முச்சார் மண்டபத்திலுள்ள 92 லிங்கங்களுக்கும் பட்டுச் சால்வையும், கருவறையைச் சுற்றியுள்ள 16 லிங்கங்களுக்கும் உருத்திராட்சம் மாலைகளும் லிங்கபாணங்களை அலங்கரிக்கின்றன.





ஒவ்வொரு லிங்கத்தினதும் உச்சிக்கு நேராக உள்ள விட்டத்தில் பொருத்தப்பட்டுள்ள மணியினை விரும்பியவர்கள்- விரும்பிய இடத்தில்- விரும்பும் வேளைவரை அடித்து ஒலி எழுப்ப முடியும். 25.06.2018இல் நடந்தேறிய கும்பாபிஷேக வேளையில், சிவபூமி சிறுவர் இல்லப் பெண் குழந்தைகள் வரிசை நின்று ஒரே நேரத்தில் எல்லா மணிகளையும் நீண்ட நேரம் ஒலிக்கச் செய்தமையினால் எழுந்த இனிய ஒலியானது- அரண்மனை வளாகம் முழுவதும் நிறைந்து- அனைவரதும் காதுகளில் தேனாகப் பாய்ந்தது என கும்பாபிஷேகத்தில் பங்குகொண்ட பெருமக்கள் கூறக்கேட்டோம்.


முச்சார் மண்டபத்தின் வடபுற வாசலில் வரிசையாக வைக்கப்பட்டுள்ள ஒரே அளவான- சிறிய சில்வர் குடங்களில், கற்தேர் அமைந்துள்ள தடாகத்திலிருந்து நீர் மொண்டு-

*அமைதியைத் தரும் சாத்வீக உணர்வே தியானத்துக்கு ஏற்றது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பிய லிங்கத்திற்கு- விரும்பிய அளவில் நம் கையாலேயே அபிஷேகம் செய்து கொள்ளலாம். இது திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரி வேளையில்- கருவறைக்கு பின்னே உள் வீதியில் உள்ள லிங்கத்திற்கு நாமே அபிஷேகம் செய்யும் நடைமுறையை நினைவுபடுத்துகிறது. மட்டுவிலில் வேலை பார்க்கின்ற- வடமராட்சியைச் சேர்ந்த ஒரு இளைஞன்- தினமும் மாலைப் பூஜை வேளை முடிந்த பின்னர்- 108 சிவலிங்கங்களுக்கும் நீரூற்றி அபிஷேகம் செய்வதனை வழமையாகக் கொண்டிருப்பதாக திருவாசக அரண்மனை அலுவலகத்தில் விசேடமாகக் குறிப்பிட்டார்கள். அரண்மனை வளாகத்தின் 108 லிங்க தரிசனமானது, தமிழ்நாட்டில் சுவாமிமலைக்கு மிக அண்மித்ததாக உள்ள பாபநாசம் சிவன் ஆலயத்தில்- வரிசைக்கு 36ஆக மூன்று வரிசைகளில் 108 சிவலிங்கங்களை தரிசனம் செய்தமையை ஞாபகப் படுத்தியது.



தினமும் காலை 6.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை திருவாசக அரண்மனை திறந்தேயிருக்கிறது. குடாநாட்டுக்கு வெளியிலிருந்து வரும் பக்தர்களுக்கும், சுற்றுலாப் பயணிகளுக்குமாக இந்த விசேட ஏற்பாடு. காலை 6.30, மதியம் 12.00, மாலை 5.30 என மூன்று கால பூசை நடைபெறுகிறது. மதியம் 12 மணிக்கு நடைபெறும் மகேஸ்வர பூசை வேளையில் ஒரே அளவான 108 கிண்ணங்களில் 108 லிங்கங்களுக்கும் நெய்வேத்தியம் படைக்கப்படுவது இங்கு வழமையானது.



இந்துமத குருமார் ஒன்றியத்தின் தலைவரும், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் போஷகரும், வல்வை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரர் திருக்கோவில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ ப. மனோகரக்குருக்கள் அவர்களின் இளைய புத்திரர் சிவஸ்ரீ மனோகர நிருபன் சர்மா அவர்களே சிவதெட்சணாமூர்த்தி ஆலயத்தின் பூசை அனுட்டானங்களைக் கவனித்து வருகிறார். சிவஸ்ரீ மனோகர நிருபன் சர்மா வயதிற் குறைந்தவராக இருந்தபோதும் பக்குவம் நிறைந்த பய பக்தியான அவரது பூசை முறையினால், தினமும் வருகைதரும் நூற்றுக்கணக்கான பக்தர்களின் மனங்களில் நிறைந்து கொள்ளுகிறார்.

திருவாசக அரண்மனையில் காணப்படும் நூலகத்தில் - திருவாசகம் சார்ந்து பல்வேறு ஆய்வாளர்களாலும் எழுதப்பட்ட நூல்கள் சேகரித்து

*இறைவனைத் தவிர வேறு எதிலும் மிகுந்த பற்று வைக்கக்கூடாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப்பட்டுள்ளன. "திருவாசகம்" பற்றி ஆய்வு செய்ய விரும்பும் பல்கலை மாணவர் களுக்கும் - மற்றையவர்க்கும் "திருவாசக நூலகம்" ஒரு வரப்பிரசாதமாகும்.

1837இல் தமிழ் கற்கத் தொடங்கிய ஆங்கில அறிஞர் G.U. போப் அவர்கள் 1900இல் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இது அவரது படைப்புகளில் தலைசிறந்த படைப்பாக இன்றும் கருதப்பட்டு வருகிறது. போப் அவர்களின் கல்லறையில் எழுதப்பட்டுள்ள "ஒரு தமிழ் மாணவன் உறங்குகிறான்" எனும் வாசகம் போப் அவர்கள் "தமிழ்"மீது கொண்ட தீராக் காதலை வெளிப்படுத்துகிறது. போப் அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பு உட்பட 21 மொழிகளில் திருவாசகம் இதுவரை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதில் கிடைக்கப்பெற்ற ஆங்கிலம், சிங்களம், இத்தாலி, பெங்காலி (கிரந்தம்), அரபி, மலையாளம், சீயம் ஆகிய 12 மொழிகளில் உள்ள சிவபுராண மொழிபெயர்ப்புகள் நவீன டிஜிற்றல் முறையில் அச்சிடப்பட்டு- முச்சார் மண்டபத்தில் கிழக்குப் பக்க முடிவினில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது கண்டு அனைவரும் வியந்து நிற்கின்றனர்.



திருவாசக அரண்மனை அமைவதற்கு நிலம் கொடுத்து- நிதி கொடுத்து யாழ்ப் பாணத்தின் நுழை வாயிலாக உள்ள நாவற்குழியில் திருவாசகத் தேன் மணக்க உதவிய நமது மண்ணுக்குரியவர்களான சிட்னி ஆன்மீக வள்ளல் வைத்திய நிபுணர் வைரமுத்து மனோமோகன் - வைத்திய கலாநிதி சிவகௌரி மனோமோகன் தம்பதியர் எல்லா நலமும் பெற்று நீடூழி வாழ சைவ உலகம் பிரார்த்திக்கிறது. இவர்களோடு இப்பணியில் இணைந்து பணிபுரிந்த அனைவருக்கும் சிவதெட்சணாமூர்த்தியின் திருவருட் கடாட்சம் நீங்காமல் நிறைவாகக் கிட்டும்.

*இறையருளைப் பெறுவதற்கு ஜீவகாருண்யமே வழியாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஞானச்சுடர்** **2018** **புரட்டாதி மலர்**

# ஐப்பசி மாத வாராந்த நிகழ்வுகள்

05.10.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "ஐம்பொறிகள் கொடுப்பதும் கெடுப்பதும்"

வழங்குபவர் :- திருமதி பரமேஸ்வரி சிவனொளிபாதம் அவர்கள்

(இளைப்பாறிய ஆசிரிய ஆலோசகர்)

---

12.10.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

19.10.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)

---

26.10.2018 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**ஞானச்சுடர் ஐப்பசி மாத வெளியீடு**

வெளியீட்டுரை :- திரு க. கைலைநாதன் அவர்கள்

(சைவப்புலவர்)

250ஆவது மலர்

மதிப்பீட்டுரை :- திரு செ. கந்தசத்தியதாசன் அவர்கள்

(சைவப்புலவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. QD/49/NEWS/2018

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org